




# தமிழரசு

ஆகஸ்ட் 16 – 31, 1998 ரூ.3











## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| சுதந்திரத் திருநாள் | ... | 2 |
| இந்தியத் திருநாடே சமத்துவபுரமாகட்டும் - முதலமைச்சர் கலைஞர் | ... | 6 |
| முதல் சமத்துவபுரம் | ... | 7 |
| அரசு ஆணைகள் | ... | 11 |
| ஓமந்தூரார் நூற்றாண்டு விழா | ... | 12 |
| கணினி வளர்ச்சியில் பெருமை மிக்க இடம் | ... | 16 |
| திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழா | ... | 19 |
| யாருடைய கடமை? | ... | 22 |
| உணவுமுறைகளும் கண்பாதுகாப்பும் | ... | 26 |
| சுதந்திரப் போராட்டம் : தமிழ்நாட்டில் சில பொன்னான நேரங்கள் | ... | 28 |
| மனிதநேயம் | ... | 32 |
| கல்லக்குடி சமத்துவபுரம் | ... | 33 |
| பூம்புகார் | ... | 37 |
| தருமபுரி மாவட்டம் : நீர்வள ஆதார ஆக்கப்பணிகள் | ... | 39 |
| குப்பையை உரமாக்குவோம் | ... | 40 |
| மத நல்லிணக்கம் காணுவோம் | ... | 43 |



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2029

ஆடி - ஆவணி

ஆகஸ்ட் 16-31, 1998

மலர் : 30 இதழ் : 4

விலை ரூ.3


## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

சென்னை கோட்டைக் கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றுதல்.

**நான்காம் அட்டை:**

மதுரை மாவட்டம் - மேலக்கோட்டையில் முதல் சமத்துவபுரம் திறப்பு விழா

# சுதந்திரத் திருநாள்




இந்திய சுதந்திரத்திற்கு இன்று ஐம்பது ஆண்டு நிறைவு பெறுகிறது.

இந்த வீர செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர் - விழிகளை இழந்தோர் - உயிரினைத் துறந்தோர் - உடைமைகளைப் பறிகொடுத்தோர் - செக்கிழுத்தோர் - கஞ்சிக் கலயம் ஏந்தியோர் - கல்லறையாக மாறியோர் - துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் - தூக்குக் கயிறை முத்தமிட்டோர் அனைவரது காலடிகளிலும், அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகிறோம்!

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திர நாளைப் பற்றியும், இதனை இன்ப நாளாகக் கொண்டாட வேண்டுமென்பது பற்றியும் 1947 ஆகஸ்டு 10ஆம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள் ''திராவிட நாடு'' இதழில் பின்வருமாறு எழுதினார்.

அது, இது:

"அன்னிய ஆட்சி ஒழிந்து, புதிய சுதந்திர ஆட்சி உதயமாகும் இதே நாள், அன்னிய ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும், நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி, கேட்கும் உரிமையும், பலமும், வசதியும், மக்களுக்குத் தானாகவே பிறக்கிறது.

அன்னிய ஆட்சியுடன் போரிட்டு விடுதலை பெறுவதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளப் படுவதால், வேறு பல முக்கியமான சமூக, பொருளாதார, அறிவுத் துறைகளிலே, மக்களுக்கு ஏற்ற காரியங்களைச் செய்வதற்கு நேரமில்லை, நினைப்பில்லை, வசதியில்லை, வழியில்லை என்று கூறி, பிரச்சினைகளுக்கெல்லாம் வாய்தா போட்டுவந்த காலம் ஆகஸ்டு 15ஆம் தேதியோடு முடிவடைகிறது. அன்று முதல், இங்கு மக்களின் நலன், நாட்டுப் பாதுகாப்பு ஆகியவைகட்குப் பொறுப்பு இங்குள்ளவர்களிடம் வந்துசேருகிறது.

நாம், அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலேயே, சென்னையில், நடைபெற்ற, மாகாண ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில், பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே, சுதந்திரத்துக்கு விரோதிகள் அல்ல - அன்னிய ஆட்சியை விரும்புபவர்கள் அல்ல என்பதை ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசியிருக்கிறோம்.

நாட்டு மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய சுதந்திரத்திற்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து, அதனால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக் கூட மனமுவந்து ஏற்றுக்கொண்ட தியாகிகளுக்கு - வீரத்தை, தியாகத்தைக் கொண்ட கொள்கைக்காகக் கஷ்ட

நஷ்டம் ஏற்க வேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்கும் நாம், வீர வணக்கம் செலுத்தவேண்டும்.


சுதந்திரப் போராட்டம் என்ற உடனே, சூதுமதியினரான சிலர் அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வேட்டையாடியதும், முரண்பட்ட கொள்கைகள், திடீர் மாறுதல்கள், பண மூட்டைகள் சுரண்டுபவர் ஆகியோர் மட்டுமேதான் நமது கண்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை.

நாட்டு விடுதலைக்காக - சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப் பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை ஆகிய வீரத் தியாகிகள் தோன்றுவர் - தோன்றுவதால் - அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டுவதே முறை. ஆகஸ்டு 15ஆம் தேதி அப்படிப்பட்ட எண்ணற்ற வீரர்களின், கனவுகள் நனவான நாள்".

- என்று அறிஞர் அண்ணா 50 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதை இந்தப் பொன்விழா ஆண்டு நிறைவு நாளிலும் நினைவிற் கொண்டு, நமது நீண்ட நெடிய பயணத்தைத் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம்:

பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் - நெல் மணிகளைப் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் - நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதற்கும் - நோய் நொடிகள், பூச்சிப் புழுக்கள் அணுகாமல் விரட்டுவதற்கும் - இந்த ஐம்பது ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம்.

1972ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டபோதும் - 1997ஆம் ஆண்டு தொடங்கி சுதந்திரப் பொன்விழா கடந்த ஓராண்டாகக் கொண்டாடப்பட்டு வரும் வேளையிலும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து தொண்டாற்றும் பெரும் பேற்றை எனக்கு வழங்கியுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



நம் நாடு சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள வேளையில் - நாம் அடைந்த வளர்ச்சிகளைத் தேசிய அளவில் கணக்குப் பார்த்தோமேயானால் - உலக அரங்கில் நமது நாடு குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது என்பது விளங்கும். இடையிடையே அரசியல் சூறாவளிகள் சுழன்றடித்த போதிலும், அணையாமல் அகல்விளக்காய்ச் சுடர்பரப்பி - உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனும் பெருமையை நிலைநாட்டியுள்ளது. பல மொழிகள், பல மதங்கள், பல்வேறு பழக்கவழக்கங்கள் உள்ள நாடு நம் இந்திய நாடு என்ற போதும், உரிமைக்குக் குரல் கொடுத்தும் உறவுக்குக் கைகொடுத்தும் வாழும் ஒப்பிலாச் சமுதாயமாக உலகத்திற்கொரு பெருமையாக இந்திய சமுதாயம் படிப்படியாக முன்னேறி முத்திரை பதித்து வருகிறது.

தொழில் வளர்ச்சி பெருகி, தொலைதூர நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதிகள் மிகுந்து வருகின்றன.

கணிப்பொறித் தொழில் நுட்பத்தில் இந்திய இளைஞர்கள் உலகம் முழுதும் பரவிப் புகழ் படைத்து வருகின்றனர்.

தமிழக அரசைப் பொறுத்தவரை, இந்திய சுதந்திரத்திற்காகத் தமது இன்னுயிரீந்த வீரர்களையும், எடுத்தியம்பவொண்ணா இன்னல்களுக்கு இலக்காகிய தீரர்களையும் போற்றிப் பாராட்டிப் பொருந்திய முறையில் புரந்து வருகிறது!

1966ஆம் ஆண்டில், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1967 பிப்ரவரியில் கழக அரசு அமைவதற்கு முன்வரை தமிழகத்தில் 5 தியாகிகளுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது.

கழக அரசு சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குத் தாராளமாக ஓய்வூதியம் வழங்கிப் பாராட்டியதன்

விளைவாக - 1976ஆம் ஆண்டு ஜனவரி 31 அளவில் 8172 சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஓய்வூதியம் பெற்று மகிழ்ந்தனர்.

அவர்களில் மறைந்தவர்கள் போக இன்னும் வாழ்பவர்கள் 5068 பேர் தியாகிகளுக்கான ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

அதேபோல, மறைந்த விடுதலைப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகள் 1892 பேர் மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

தியாகிகள் மறைவெய்தும்போது ஈமச்சடங்குகளுக்கு 1000 ரூபாய் நிதியுதவி வழங்கிடவும், மரணமடையும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்குத் தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் நேரில் சென்று அரசின் சார்பில் மரியாதை செலுத்தவும் ஆணைகளிட்டோம்.

தியாகிகளின் விதவைகள், அவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு இலவசப் பேருந்துச் சலுகை, இலவச மருத்துவ உதவிகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறையிலிழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடித்து - 1972ஆம் ஆண்டில் சென்னையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தோம்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பாஞ்சாலங் குறிச்சியில் புதிய கோட்டையை நினைவுச் சின்னமாய் உருவாக்கி அவரது வாரிசுகள் 204 பேருக்கு இலவச வீடுகள் கட்டித் தந்தோம். கட்டபொம்மனின் படைத்தளபதியாய் விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் பெயரில் புதிய நகரை உருவாக்கி, அங்கு அவரது வாரிசுகள் 200 பேருக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீடமைத்துக் கொடுத்தோம்.

ஆப்பிரிக்க நாட்டில் அண்ணல் காந்தியடிகளுடன் இணைந்து - காந்தியடிகள் போற்றிப் பாராட்டும் வகையில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த வள்ளியம்மை பிறந்த தில்லையாடியில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்தோம்.

மூதறிஞர் இராஜாஜியும், பெருந்தலைவர் காமராஜரும் மறைந்த பொழுது, சென்னையில் அப்பெருமக்களுக்கு - அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபத்தின் இருமருங்கிலும் அழகிய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தினோம்.

எட்டையபுரத்தில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கியதுடன் - திருவல்லிக்கேணியில் பாரதி வாழ்ந்த இல்லத்தினைக் கடந்த ஆண்டு புதுப்பித்துள்ளோம்.

நாமக்கல் கவிஞர் மாளிகை எனத் தலைமைச் செயலகக் கோட்டைக்குள் பத்துமாடிக் கட்டடம் ஒன்றை எழுப்பியுள்ளோம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.க்குத் தூத்துக்குடியிலும், சென்னையிலும் சிலைவைத்துச் சிறப்பித்தோம்.

மதுரையில் பசும்பொன் தேவருக்குச் சிலை வைத்ததுடன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மருதுபாண்டியருக்கு நினைவகம் அமைத்தோம்.

இந்தப் பொன்விழா ஆண்டில் -

திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை சென்ற, ''உப்புச் சத்தியாகிரக''ப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் யாத்திரை ஒன்றை 8-8-97 அன்று திருச்சியில் நான் தொடங்கிவைத்தேன்.

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழாப் பேரணியில் பங்குபெறச் சென்ற 50 தியாகிகளுக்குச் சென்னை இராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழா நடத்தப்பட்டு, அந்தத் தியாகிகள் ஒவ்வொரு வருக்கும் அரசின் சார்பில் கதராடையைப் போர்த்தி, பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெற்கட்டும்செவ்வல் எனும் ஊரில் பூலித்தேவன் மாளிகை 50 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

தியாகச் செம்மல் கக்கன் அவர்களுக்கு 31-8-97 அன்று மதுரையில் சிலை வைத்ததுடன், வீரத்தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த திருமங்கலம் வீட்டினை, அவர் நினைவைப் போற்றும் வகையில், 60 இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம், நூல் நிலையம் ஆகியவைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் பொன்விழாவை யொட்டி, சென்னையில் தியாகிகள் மணி மண்டபம் ஒன்றை அமைத்திட முடிவு செய்து அதன் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவின் நினைவாக, போர் நினைவுச்சின்னம் அருகில் பொன்விழா நினைவுச் சின்னம் அமைத்தோம்.


பொதுவுடைமை வீரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் நினைவுச் சின்னம் உருவாக்கினோம்.

நேதாஜி நூற்றாண்டை ஒட்டி சென்னையில் எழுச்சியூட்டும் நேதாஜியின் முழுஉருவச் சிலையமைத்தோம். இவை மட்டுமல்ல!

வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டில் வேலூரில் 1806ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிப்பாய்க் கலகத்தின்போது உயிர்நீத்தோர் தியாகத்தைப் போற்றிட வேலூரில் நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

எழும்பூரில் ருக்மணி லட்சுமிபதிக்குச் சிலை திறந்து - அவர் வாழ்ந்த மார்ஷல் சாலைக்கு அவர் பெயரிட்டோம். ருக்மணி லட்சுமிபதிக்கும் - சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கும் அஞ்சல் தலை வெளியிடச் செய்தோம்!

முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவகம் அமைத்தோம். முன்னாள் முதல்வர் பி.எஸ்.குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவை இராஜபாளையத்தில் கொண்டாடி, சென்னையில் அவர் வாழ்ந்த கிரீன்வேஸ் சாலைக்கு அவர் பெயர் சூட்டினோம்.



1995ஆம் ஆண்டிலேயே கொண்டாடி இருக்கவேண்டிய முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆகஸ்டு 25 அன்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறோம்.

தமிழகம் முழுவதிலும் சாதி சமயப் பிணக்குகள் நீங்கித் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழி வகுக்கக்கூடிய வகையில் பல்வேறு சாதிசமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கூடி வாழும் சமத்துவபுரக் குடியிருப்புகள் மாவட்டந்தோறும் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு, முதல் சமத்துவபுரக் குடியிருப்பு வரும் 17-8-1998 அன்று மதுரைக்கு அருகில் திறந்துவைக்கப்படவுள்ளது என்பதனையும் இவ்வேளையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி நினைவுச் சின்னங்களும், சிலைகளும் எடுப்பித்து தியாகிகளைப் போற்றி வருவதுடன் தம்முடைய படைப்பாற்றல்கள் மூலம் சுதந்திர உணர்வுகளை வளர்த்த பல்வேறு அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமை ஆக்கியும் அப்பெருமக்களுக்குச் சிறப்புகள் செய்யப்படுகின்றன.

தமிழ்த் தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி ஆகியோர் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 20 இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை உணர்வூட்டி, நூல்கள் எழுதிய மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப.ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், கவி.கா.மு.ஷெரீப், வ.வே.சு.அய்யர், பரலி சு.நெல்லையப்பர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.டி.எஸ்.யோகி ஆகிய 11 அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமையாக்கி குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 55 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக இன்று இந்தக் கொடி நிழலில் வழங்கப்படுகிறது.

தியாகிகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் - இந்தத் தியாக தீபங்களால் நாடு எய்திய சுதந்திரத்தின் பயன்களை - நாட்டு மக்கள் அனைவரும் - குறிப்பாக நலிந்த பிரிவு மக்கள் அனைவரும் நுகரும் வகையில், எண்ணற்ற பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு.

மாநில அளவில் மட்டுமின்றி தேசிய அளவிலும் எல்லா மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு முயற்சிகள் எடுத்து முனைந்து பாடுபடுவதுடன், அண்டை மாநிலங்களுடன் உறவை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் அடையாளம் தான் ஆந்திர மாநிலத்திலிருந்து கிருஷ்ணா தண்ணீர் தமிழகத் தலைநகராம் சென்னைக்கு வருவதாகும். அதேபோல 30 ஆண்டுகாலச் சிக்கலுக்கு முடிவுகட்டி - ஏழாண்டுக் காலமாக மறுக்கப்பட்டு வந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்காக ஒரு உடன்பாடு இந்தியப் பிரதமர் முன்னிலையில் கர்நாடகம், தமிழகம், கேரளம், புதுவை ஆகிய நான்கு மாநில முதல்வர்களால் உருவாக்கப்பட்டது.

அத்துடன் முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினைக்கும் தமிழக அரசும் கேரள மாநில அரசும் கூடிப் பேசி எடுத்துள்ள தொடக்க முயற்சியும் மகிழத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

எனவே, இந்தச் சுதந்திர நாளில் இந்தியத் திருநாட்டில், பல்வேறு இனம், மொழி மக்களிடையே வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோருக்கும் - போரிட்டோருக்கும் மாத்திரமல்ல - இந்தச் சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க வேண்டிய ஏழை எளிய சாதாரண சாமான்ய மக்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள் என்ற சூளுரையை மேற்கொள்வோம்.

***- 15.8.1998 அன்று சென்னை புனிதஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.***

# இந்தியத் திருநாடே சமத்துவபுரம் ஆகட்டும்!

***மதுரை மாவட்டம் - திருமங்கலம் - மேலக்கோட்டையில் தமிழகத்தின் முதல் சமத்துவபுரத்தை 17.8.98 அன்று திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை!***

என்னுடைய சிந்தனையில் விளைந்த - தமிழ்ச் சமுதாயம் ஒரே சமுதாயமாக வாழ வேண்டும் என்கிற குரல் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வெற்றி பெற வேண்டுமென்பதற்காக கண்டுள்ளது தான் இந்த சமத்துவபுரம் திட்டமாகும். இந்தத் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற விருக்கின்றது. அதிலே முதல் மாவட்டம் என்கிற அந்த வாய்ப்பை மதுரை மாவட்டம் பெற்றிருக்கின்றது.

நான் எண்ணியதை விட அதிகமாக - நான் நினைத்ததை விட மேலாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் காசிவிசுவநாதன் அவர்கள் இங்கே எல்லாப் பிரிவு மக்களுக்கான வீடுகளை மாத்திரமல்ல; அவர்களுடைய பல்வேறு தேவைகளை நிறைவு செய்யக் கூடிய அளவிற்கு மருத்துவமனை, பள்ளிக்கூடம், நூலகம், சமுதாயக் கூடம் என்று பல்வேறு விதமான வசதிகளை யெல்லாம் இங்கே உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.

இந்த சமத்துவபுரம் மற்ற மாவட்டங்களில் உருவாக இருக்கின்ற சமத்துவபுரங்களுக் கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் காசி விசுவநாதன் அவர்கள் மதுரை மாவட்டத்திற்கு மாத்திரம் இத்தகைய சமத்துவபுரத்தை உருவாக்கினார் என்று இல்லாமல் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கும் இந்த சமத்துவபுரம் உருவான செய்தியைச் சொல்லி என்னென்ன திட்டங்கள் இங்கே நிறைவேற்றப் பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் எடுத்துக் கூறி ஆங்காங்கு இதுபோன்ற சமத்துவபுரங்கள் உருவாக முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.






அவரை நான் வாழ்த்துகிறேன்; பாராட்டுகின்றேன்; அவருடைய இந்த அரும் பணியினை மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாடே - இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும்**

இங்கே குடிபுகவிருக்கின்ற தாய்மார்கள், எவ்வளவு சிரமத்திற்கிடையே எவ்வளவு நல்ல நோக்கத்தோடு பல்வேறு பிரிவு மக்களையெல்லாம் ஒன்றாக்குகின்ற சமத்துவம் முகிழ்க்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது என்பதை எண்ணிப்பார்த்து - இதைப் பயன்படுத்துகின்றவர்கள் நல்ல தூய்மையை இங்கே வளர்க்கவும் நல்ல அறிவினை இங்கே வளர்க்கவும், நல்ல பிள்ளைகளை இங்கே தயாரிக்கவும் எங்களோடு - இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொண்டு, சமத்துவ புரத்திலே குடியேறுகின்ற நீங்கள் காட்டுகின்ற இந்த ஒற்றுமை இந்த மாநிலத்திற்கே, இந்த நாட்டிற்கே வழிகாட்டியாக அமையட்டும் என்று கேட்டுக் கொண்டு - சமத்துவபுரங்கள் வளரட்டும், வளரட்டும், தமிழ்நாடே சமத்துவபுரங்களாக ஆகட்டும், இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.

"சாதிகள் இல்லையடி பாப்பா"

- மகாகவி பாரதியார்

# மதுரை மாவட்டம் : மேலக் கோட்டையில்... முதல் சமத்துவபுரம்


**ஆ.மு.காசிவிசுவநாதன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
மதுரை


**தீ**ண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் எண்ணத்தையும், சாதி, மத வேறுபாட்டை அறவே நீக்கவேண்டும் என்ற தந்தை பெரியாரின் சிந்தனையையும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்ற வகையில், பாரதத்தின் விடுதலைப் பொன்விழா ஆண்டில் பல்வேறு சாதி, மதத்தைச் சார்ந்தவர்கள் ஒரே இடத்தில் குடியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தீட்டப்பட்ட திட்டம் தான் சமத்துவபுரம் திட்டம். இந்தத் திட்டம் தமிழகத்தில் பலகாலமாக வேரூன்றியுள்ள தீண்டாமை எனும் கொடிய நோயினை அகற்ற உதவும் திட்டமாகும். ஒவ்வொரு சமத்துவ புரத்திலும், 100 குடியிருப்புகள் அமைக்கப்படும். மேற்படி 100 குடியிருப்புகளில் ஆதிதிராவிடர் களுக்கு 40 வீடுகளும், பிற்பட்ட வகுப்பினர் களுக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு 25 வீடுகளும், இதரசாதியினருக்கு 10 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்படும்.

### நிலத் தேர்வு

மதுரை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை -7ல், திருமங்கலத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்தில் மேலக்கோட்டை எனும் இடத்தில் சமத்துவபுரம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது. இந்த இடத்தின் மொத்தப் பரப்பு 10.02 ஏக்கர் ஆகும்.

### பயனாளிகள் தேர்வு

சமத்துவபுரத்தில் வீட்டுமனை பெறுவதற்கு விண்ணப்பம் பெறப்படும் என்ற விவரத்தினைப் பத்திரிகைகள் மூலமும், கிராமங்களில் 'டாம்டாம்' மூலமும், ஊராட்சி அலுவலக விளம்பரப்பலகையிலும் விரிவான விளம்பரம் செய்யப்பட்டது.

பெறப்பட்ட மனுக்களை எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், ஊராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று கிராமசபைக் கூட்டத்தினைக் கூட்டி, பயனாளிகளைத் தேர்வு செய்தனர். அனைத்துப் பயனாளிகளும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்நிலையில் உள்ளவர்களாகவே தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர், முகவரி ஆகியவை அந்தந்த ஊராட்சியின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டு, பயனாளிகள் தேர்வில் ஏதாவது அதிருப்தியோ அல்லது ஆட்சேபணையோ இருப்பின் அதுபற்றி 15 நாட்களுக்குள் திருமங்கலம் வட்டாட்சியரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. முடிவில் பல்வேறு சாதி, மதத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆதிதிராவிடர்கள் 40, மருத்துவர் 8, ராஜகம்பளம் 7, வண்ணார் 6, குலாலர் 2, பிரமலைக்கள்ளர் 2, டொம்மாரா 1, அகமுடையார் 9, கவுண்டர் 6, நாயுடு 7, கம்மாளர் 3, நாடார் 1, பிள்ளைமார் 1, பத்மசாலியர் 1, செட்டியார் 3, ரெட்டியார் 1, முஸ்லீம் 1, பிராமணர் 1 (ஆகமொத்தம் 100 நபர்கள்).

### சமத்துவபுரம் வரைபடம்

சமத்துவபுரத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட நிலத்தில் தலா 5 செண்டு வீதம் 100 வீட்டுமனைகளும் பூங்கா, பள்ளி, சமுதாயக்கூடம் போன்ற அடிப்படை ஆதார வசதிகளுடன் வீட்டுமனை வரைபடம் நகரமைப்பு விதிகளுக்கு ஒப்ப மாவட்ட நகரமைப்பு உதவி இயக்குநரால் தயார் செய்யப்பட்டது.

### பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு

தேர்வு செய்யப்பட்ட 100 பயனாளிகளையும், 3.12.97ஆம் தேதி திருமங்கலத்திற்கு அழைத்து, மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், சிற்றூராட்சித் தலைவர்கள் ஆகியோரது முன்னிலையில் பயனாளிகள் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் சமத்துவபுரம் பற்றியும், அனைத்துச் சாதி மதத்தைச் சேர்ந்த பயனாளிகள் ஒரே இடத்தில் சேர்ந்து குடியிருப்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அனைத்துப் பயனாளிகளுமே சாதி, மத பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் சகோதர உணர்வுடன் கூடியிருக்க ஒப்புக் கொண்டனர். பிறகு குலுக்கல் முறையில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீட்டு உத்தரவு வழங்கப்பட்டது.

சமத்துவபுரத்தில் ஒவ்வொரு சாதியைச் சார்ந்தவர்களுக்கும் வீடுகள் மாறிமாறி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக முதலாவது வீடு ஒரு ஆதிதிராவிடருக்கும், இரண்டாவது வீடு ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மூன்றாவது வீடு ஒரு மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கும், நான்காவது வீடு ஒரு ஆதிதிராவிடருக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### வீட்டுமனை மற்றும் வீடு பற்றிய விவரம்

சமத்துவபுரத்தில் 100 பயனாளிகளுக்கும் தலா 5 செண்ட வீதம் வீட்டுமனை பிளாட்டுகள் ஒதுக்கப் பட்டுள்ளது. மேற்படி 5 செண்டு இடத்தில் 259 சதுர அடி இடத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீட்டில் 13 X 10ல் ஒரு அறை, 8 X 5ல் ஒரு சமையலறை மற்றும் 5 X 5ல் ஒரு கழிப்பறை அமைக்கப்பட்டுள்ளது. கூரை ஆர்.சி.சி. காங்கீரிட் போடப்பட்டுள்ளது. மேற்படி வீட்டில் இரண்டு கதவுகள், மூன்று ஜன்னல்கள் வைக்கப்பட்டுள்ளன. கதவுகள் தரமான மரத்தினால் ஆனது. அறையில் கப்போர்டு வசதியும் செய்யப்பட்டுள்ளது.

### வீடுகட்ட அரசு மானியம்

சமத்துவபுரத்தில் 100 பயனாளிகளுக்கும் தலா ரூ.35,000 வீதம் மொத்தம் ரூ.35 இலட்சம் வீடுகட்ட மானியமாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சமத்துவபுரத்தில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள்

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தெருக்களில் 13 இடங்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகக் குழாய் மேல்புரத்தில் டைல்ஸ் பதிக்கப் பட்டிருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். அதே போன்று, குடிநீர் குழாயிலிருந்து, கழிவு நீர் தெருக்களில் ஓடாமல் தடுக்கக் குடிநீர்க் குழாய் அருகே பள்ளம் தோண்டப்பட்டு கழிவுநீர் சேகரிக்கப்படுகிறது.

### சமுதாயக் கூடம்

சமத்துவபுர மக்கள் அனைவரும், அவர்களுடைய குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் நடத்துவதற்கு ஏற்ப 1,500 சதுர அடியில் ஒரு பிரம்மாண்டமான சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.


### பள்ளிக்கூடம்

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயானிகளின் குழந்தைகள் கல்விபயிலும் வகையில் சுமார் 985 சதுர அடியில் ஆரம்பப்பள்ளிக் கட்டடம் கட்டப் பட்டுள்ளது. இப்பள்ளியில் பயிலவரும் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க 2 ஆசிரியர்களையும் அரசு நியமனம் செய்துள்ளது. பள்ளிக்கு முன்பு தேசியக்கொடி ஏற்றுவதற்கு வசதியாகக் கொடிக்கம்பம் அமைக்கப் பட்டுள்ளது.

### கிளை நூலகம்

மதுரை மாவட்டத்திலேயே 800 சதுர அடி கொண்ட மிகப்பெரிய கிளை நூலகக் கட்டடம், கழிப்பறை வசதியுடன் இங்கு கட்டப் பட்டுள்ளது. இந்த நூலகத்தில் இரண்டு அறைகள் உள்ளன. ஒரு அறையில் புத்தகங்கள் வைத்துக்கொள்ள அலமாரிகள் வைக்கப்






பட்டுள்ளது. மற்றொரு அறையில் அமர்ந்து படிப்பதற்கான பெஞ்சுகள் போடப்பட்டுள்ளது. அலமாரியிலிருந்து புத்தகங்களை எடுத்துக் கொண்டு அடுத்த அறையில் அமர்ந்து புத்தகங்களை வாசிப்பதற்கு ஏற்றவாறு நல்ல காற்றோட்டத்துடன் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

### துணைச் சுகாதார நிலையம்

சமத்துவபுரத்தில் வாழும் மக்கள் ஆரம்ப மருத்துவச். சிகிச்சைக்காக எங்கும் போகாத அளவில் சமத்துவபுரத்திலேயே அனைத்து வசதிகளையும் கொண்ட துணைச் சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது.

### நியாய விலைக்கடை கட்டடம்

சமத்துவபுரத்தில் மொத்தம் 100 வீடுகளே இருப்பினும், அனைத்து வசதிகளும் கொண்ட மாதிரிக் கிராமமாக அமைக்கப்படுவதால், ஒரு நியாயவிலைக்கடை கட்டடம் கட்டப் பட்டுள்ளது. இந்தக் கடை ஆரம்பத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடையாக இயங்கும்.

### சத்துணவுக் கூடம்

சமத்துவபுரத்தில், குழந்தைகள் சத்துணவுடன் கூடிய கல்வி கற்பதற்காக 375 சதுரஅடி கொண்ட சத்துணவுக் கூடம் கட்டப்பட்டுள்ளது. சத்துணவுக் கூடத்தில் ஒரு வகுப்பறையும், ஒரு சமையலறையும், பொருட்கள் வைப்பறை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. குழந்தைகளைக் கவரும் வண்ணம் சுவர்களில் வண்ணப்படங்கள் வரையப்பட்டுள்ளன.

### தொலைக்காட்சி அறை

86 சதுர அடி கொண்ட தொலைக் காட்சி அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

### மின்வசதி மற்றும் தெருவிளக்குகள்

ஒவ்வொரு வீட்டிற்கும் அரசு செலவில் மீட்டர் பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 19 குழல் தெரு விளக்குகளும், நான்கு சோடியம் வேப்பர் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி தெருவிளக்குகள் மூலம் சமத்துவபுரத்தில் எந்தவொரு இடத்திலும் இருள் இல்லாத வகையில் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளது.

### பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம்

சமத்துவபுரத்தில் பெரியவர் முதல் குழந்தைகள் வரை அனைவரும் மாலைநேரங்களில் ஓய்வெடுப்பதற்குப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவில் அமர்வதற்கு சிமெண்ட் பெஞ்சுகள் அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவின் நடுவில் நீரூற்று அமைக்கப் பட்டுள்ளது. குழந்தைகள் விளையாட்டுச் சறுக்கல் அமைக்கப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தில் விளையாட்டினை ஊக்கப்படுத்துவதற்காக விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

### தார்போட்ட சாலை வசதி

மொத்தம் 1,570 மீட்டர் நீளத்திற்குச் சமத்துவபுரத்திலுள்ள 10 தெருக்களிலும் தார்போடப்பட்ட சாலை வசதி செய்யப் பட்டுள்ளது.

### தெருக்களின் பெயர்கள்

சமத்துவபுரத்தில் 10 தெருக்கள் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய பெயர்களும், ஐஞ்சிறும் காப்பியங்களான உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய பெயர்களும் இந்தப் பத்து தெருக்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது.

### நிழற்குடை

சமத்துவபுரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களுக்கு வசதியாக, பேருந்துகள் நின்று செல்ல ஒரு பயணியர் நிழற்குடை அமைக்கப் பட்டுள்ளது.

### மரங்கள் வளர்த்தல்

சமத்துவபுரத்திலுள்ள பூங்கா, தெரு ஓரங்கள், பள்ளி வளாகம், சமுதாயக்கூட வளாகம், கழிவுநீர் வாய்க்கால் பகுதி போன்ற இடங்களில் 400க்கும் மேற்பட்ட வேம்பு, புங்கன், நாவல் போன்ற பல்வேறு வகையான மரங்கள் நடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டிற்கும் பின்புறமுள்ள காலியிடங்களில் கொய்யா, பப்பாளி, சப்போட்டா மரங்கள் நடப்பட்டுள்ளது. மரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

"சமத்துவத்தை நாடவேண்டுமானால் சாதிகள் தொலைந்திட வேண்டும்"

- பேரறிஞர் அண்ணா

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கக் கட்டடம்**

சமத்துவபுரத்தில் குடிபுகும் 100 பயனாளிகளில், கறவை மாடுகள் வளர்க்க விருப்பம் தெரிவித்த சுமார் 30 நபர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் பாலினை மதுரை ஆவின் நிறுவனத்திற்கு வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, சமத்துவ புரத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தனியாக ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

**மயான வசதி செய்து கொடுத்தல்**

சமத்துவபுரத்தில் குடியிருக்கும் பயனாளிகள் இறக்க நேரிட்டால் சடலங்களைப் புதைக்க சமத்துவபுரத்தின் அருகாமையில் உள்ள கமண்டல ஆற்றின் கரையில் ஒரு பொது மயானம் தேர்வு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மாயனத்தில் இந்து, முஸ்லீம் ஆதிதிராவிடர் மற்றும் இதர சாதியினர் சடலங்களைப் புதைக்க ஒப்புக் கொண்டுள்ளனர். விரும்பினால் ஒரே இடத்தில் அனைத்துச் சடலங்களையும் எரிக்க ஒப்புக்கொண்டிருப்பதும் சமத்துவபுரத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்

**தோரணவாயில்**

சமத்துவபுரம் நுழைவிடத்தில் பொன்விழா நுழைவாயில் அமைக்கப் பட்டுள்ளது. வெளிநபர்களோ அல்லது ஆடு, மாடுகளோ சமத்துவபுர கிராமத்திற்குள் நுழையாத வண்ணம் சமத்துவபுரத்தைச் சுற்றி இரும்பு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

**பேருந்து வசதி**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சமத்துவபுரத்திற்கு (மேலக்கோட்டை) நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சாதி, மத வேறுபாடு முற்றிலும் களையப்படவேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் சமத்துவபுரத் திட்டம். இந்த சமத்துவபுர மாதிரி கிராமம், பாரதத்தில் ஒரு முன்மாதிரி கிராமமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

"சமத்துவம் வாழட்டும்; சமத்துவம் வெல்லட்டும்"

- கலைஞர்

**பயனாளிகளின் உறுதிமொழி**

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயனாளிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பதாக ஐந்து ரூபாய் மதிப்புக் கொண்ட பத்திரத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டு, கையொப்பம் இட்டுள்ளனர்.

**உறுதிமொழிகள் :**

★ சமத்துவபுரத்தில் குடிபுகும் நான், சாதி சமயப் பாகுபாடில்லாமல் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் இருப்பேன்.

★ சமத்துவபுரத்தில் குடிபுகும் நான் அங்கு அமையவுள்ள சமுதாயக்கூடத்தில் வழிபாடு, திருமணம் போன்ற சடங்குகளைச் செய்துகொள்வேன். ஒவ்வொரு சாதிக்கும், மதத்திற்கும் பொது இடத்தில் விழிபாட்டுத் தலங்கள் தனித்தனியாக அமைத்துக்கொள்ள மாட்டேன்.

★ என் இல்லத்தில் இறப்பு நேரிட்டால், சடலங்களைப் புதைக்க விரும்பினால் சமத்துவபுரத்தில் அமையவுள்ள பொது இடுகாட்டினையும், எரிக்க விரும்பினால் பொது சுடுகாட்டினையும் பயன்படுத்திக் கொள்வேன். ஆக ஒரு இடுகாடு, ஒரு சுடுகாடு என்ற வழிமுறையினைக் கடைப்பிடிப்பேன்.

★ சாதி, சமயத் தலைவர் சிலைகளைச் சமத்துவபுரத்தில் வைக்க முயற்சிக்கவோ, சம்மதிக்கவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டேன்.

★ சமத்துவபுரத்தில் குடிபுகுவோர் ஒவ்வொரு சாதியும், மாறி மாறி - உதாரணமாக, முதலாவதாக ஒரு ஆதிதிராவிடர், இரண்டாவது ஒரு பிற்பட்ட வகுப்பினர், மூன்றாவது ஒரு மிகவும் பிற்பட்ட வகுப்பினர், நான்காவது ஒரு ஆதிதிராவிடர் எனக் குடியிருக்கவேண்டும் என்பதனை அறிவேன். குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யும்பொழுது இதுபோன்ற ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

★ சமத்துவபுரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட 5 செண்டு நிலத்தையும், அதில் கட்டப்பட்ட வீட்டினையும் குறைந்தது 15 ஆண்டுகளுக்கு எவருக்கும் அடமானமோ விற்பனையோ செய்யமாட்டேன்.

★ எனக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வீட்டில் நானே குடியிருப்பேன். வேறு ஒருவருக்கும் வாடகைக்கு விடவோ அல்லது வேறு எவ்வகையிலேனும் வில்லங்குப்படுத்தவோ மாட்டேன்.

★ சமத்துவபுரத்தைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்வேன்.

★ எனக்கு ஒதுக்கப்பட்ட மனையிடத்தில் குறைந்தது இரண்டு மரங்களையாவது வளர்ப்பேன்.

★ சமத்துவபுரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொது இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யமாட்டேன். வேறு எவரையும் ஆக்கிரமிப்புச் செய்யவும் அனுமதிக்க மாட்டேன்.

★ சமத்துவபுரத்தில் அமைக்கப்படும் குடிநீர், பூங்கா, தொலைக்காட்சி போன்ற பொதுவசதிகளைப் பயன்படுத்துவதில் சாதி, மத வேறுபாடு இன்றிப் பயன்படுத்திக் கொள்வேன்.

★ மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், அரசு வழங்கிய 5 செண்டு நிலத்தையும், அதிலுள்ள கட்டடத்தையும் அரசு திரும்ப எடுத்துக்கொள்ளச் சம்மதிக்கிறேன். மேலும், மேற்படி மனையிடத்தில் அரசு வழங்கிய மானியத்தொகையைத் தவிர, எனது சொந்தச் செலவில் ஏதேனும் அபிவிருத்தி செய்திருந்தால் அந்த அபிவிருத்திச் செலவுத் தொகையினை அரசிடமிருந்து கேட்கமாட்டேன்.

★ அரசோ அல்லது மாவட்ட ஆட்சியரோ அவ்வப்போது விதிக்கும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுபட்டு நடப்பேன். ●

# அரசு ஆணைகள்

## நீதித்துறை

★ வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ திருவாரூர் ம்ாவட்டம் திருவாரூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ ★ ★

## சட்டக் கல்வி

★ திருச்சிராப்பள்ளி அரசினர் சட்டக் கல்லூரிக்கு மகளிர் விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கி ஆணை வெளியிட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்திற்கென நிதி ஒதுக்கி ஆணை.

★ ★ ★

## காவல்துறை

**புதிய காவல் நிலையங்கள் அமைத்தல்**

| | |
|---|---|
| பெரம்பலூர் மாவட்டம் | வெங்கனூர் |
| நாமக்கல் மாவட்டம் | தேவூர் |
| தூத்துக்குடி மாவட்டம் | தாளமுத்து நகர் |
| தருமபுரி மாவட்டம் | மகேந்திரமங்கலம் |
| தருமபுரி மாவட்டம் | உத்தன்னபள்ளி |
| ஈரோடு மாவட்டம் | காஞ்சிக்கோயில் |
| ஈரோடு மாவட்டம் | ஆப்பக்கூடல் |
| புதுக்கோட்டை மாவட்டம் | ரெகுநாதபுரம் |
| திருவண்ணாமலை மாவட்டம் | பொன்னூர் |
| திருவண்ணாமலை மாவட்டம் | தச்சம்பட்டி |
| பெரம்பலூர் மாவட்டம் | இரும்புலிக்குறிச்சி |
| சேலம் மாவட்டம் | கங்கவல்லி |
| விழுப்புரம் மாவட்டம் | கண்டாச்சிபுரம் |
| மதுரை மாவட்டம் | பாலமேடு |
| மதுரை மாவட்டம் | சாடங்கோயில் |
| விருதுநகர் மாவட்டம் | மல்லி |
| கடலூர் மாவட்டம் | விருத்தாச்சலம் (போ.வ.கா.நி) |
| கரூர் மாவட்டம் | கரூர் நகர் (போ.வ.கா.நி) |

★ ★ ★

| | |
|---|---|
| செங்கை கிழக்கு மாவட்டம் | திருவேற்காடு |
| கோயம்புத்தூர் மாவட்டம் | வடக்கை பாளையம் |
| பெரம்பலூர் மாவட்டம் | வி.களத்தூர் |
| வேலூர் மாவட்டம் | பாகாயம் |
| திருநெல்வேலி மாவட்டம் | சாம்பவர் வடகரை |

ஆகிய புறக்காவல் நிலையங்கள் முழு காவல் நிலையங்களாக, தரம் உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது.

★ ★ ★

## ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் நூற்றாண்டு:

**"அரசினர் தோட்டம் இனி ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று அழைக்கப்படும் !"**

**- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!**

இன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறுகின்ற இந்த விழா சீரும் சிறப்பும் வாய்ந்த சீலமிக்க - முன்னாள் முதல்வர் - ஒழுக்கசீலர் - உத்தமர் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா என்று கூறப்பட்ட போதிலும் நம்முடைய நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் நூறாவது ஆண்டு விழா, குறித்த காலத்தில் நடைபெறாமல், காலம் கடந்து மூன்றாண்டு களுக்குப் பிறகு நடைபெறுகின்றது.

காலம் கடந்து நடைபெறுவதற்குக் காரணம் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் காலங்களைக் கடந்தவர். காலங்களைக் கடந்த அளவிற்கு தமிழ் மக்களுடைய நெஞ்சிலே நிலையாகப் பதிந்திருப்பவர்.

எனவேதான், காலம் கடந்து இந்த விழா நடைபெறுகிறது என்று நான் கருதுகிறேன்.

முன்னால் பேசியவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல் தமிழக முதலமைச்சராக இருந்தவர்கள் எவ்வளவோ அருஞ்செயல்களை ஆற்றியிருக் கலாம். ஆனால் நான் அத்தகைய செயல்களை ஆற்றினேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்த முதலமைச்சர்கள் எல்லாம் பெறாத பல வாய்ப்புகளை நான் பெற்றிருக்கிறேன்.

### அண்ணா - தலைவர்களுக்கு நினைவு மண்டபங்கள்

இன்னும் நீண்ட காலம் இருந்திருக்க வேண்டுமென்று நாம் எண்ணினாலுங்கூட, அதற்கு மாறாக நம்மை விட்டுப் பிரிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தார். அவருடைய மறைவிற்குப் பிறகு அவர் நினைவைப் போற்றுகின்ற அளவிற்கு அவர் வழியில் நின்று ஆட்சி புரிவது மாத்திரமல்ல; எத்தனையோ நினைவு மண்டபங்கள் நினைவுச் சின்னங்கள் அவர் பெயரால் என்றைக்கும் அவர் பெயரை எண்ணிக்கொள்ளக்கூடிய அளவிற்கு நினைவகங்களைத் தமிழகத்திலே உருவாக்கும் வாய்ப்பை நான் பெற்றேன்.

அதைப்போலவே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்– அவரும் இன்னும் பல காலம் இருந்து நமக்கு அறிவுரைகளை வழங்கியிருக்க வேண்டியவர். அவர் மறைந்து என்றைக்கும் மறையாத உருவமாக நம் உள்ளத்தில் இருப்பார் என்ற அந்த வகையில் அவருக்கு நினைவு மண்டபம் கட்டுகின்ற அந்த வாய்ப்பும் - அந்தப் பெரும் பேறும் எனக்கேதான் கிட்டியது.

அதைப்போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் - இரண்டு முறை தமிழகத்தில் முதலமைச்சராக இருந்தவர் - அகில இந்திய அரசியலிலே நிரந்தரமாக இடத்தைப் பிடித்திருந்தவர். என்னிடம் தனிப்பட்ட முறையிலே அன்பு கொண்டவர். அவர் மறைந்த பிறகு அவருடைய நினைவு நிலைத்திருக்கும் வகையில் நினைவகம் எழுப்பிய பெருமையும் எனக்குத்தான் வாய்த்தது.

பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் அரசியல் ரீதியாக எத்தனையோ கருத்து மாறுபாடுகள், வேறுபாடுகள் இருந்தாலுங்கூட, நிர்வாகத் துறையிலே அவருடைய அரும்பணிகள் இன்றைக்கும் நான் நிர்வாகத் துறையிலே கடைப்பிடிப்பதற்கேற்ற வகையிலே எனக்கு ஆசானாக அமைந்தது என்பதைப் பலமுறை நான் கூறியிருக்கிறேன். அத்தகைய பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்புவதற்குரிய பாக்கியமும், வாய்ப்பும், பேறும் எனக்கேதான் கிட்டியது.

அதைப்போல தியாக சீலராக வாழ்ந்த தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர்களிலே ஒருவரான குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியும் இராஜபாளையத்திலே நடைபெற்றபோது அதிலே கலந்து கொள்ளவும், அவருடைய பெயரால் பல நினைவுச் சின்னங்களை எழுப்பிடவும் அத்தகைய பேறும் பாக்கியமும் வாய்ப்பும் எனக்கேதான் கிட்டியது.

ஒரு குறை இருந்தது. தாடி இல்லாத பெரியார் என்று தமிழக மக்களால் போற்றப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா - அவர் பெயரால் நினைவுச் சின்னங்கள் அமைக்கின்ற வாய்ப்பு நமக்கு கிட்டவில்லையே என்று நான் எண்ணியதுண்டு. அந்த வாய்ப்பும் உனக்கே இருக்கட்டும் என்று கடந்த கால ஆட்சியாளர்கள், அவர்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு - அந்த வாய்ப்பையும் எனக்கே அளித்துவிட்டார்கள்.

**உரியவர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பது நியதி**

யாருக்கு அந்த வாய்ப்பு உரியதோ அவர்களுக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பது நியதி. அந்த நியதியின்படி, எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. நம்முடைய நீதியரசர் அவர்களும், நம்முடைய மூப்பனார் அவர்களும், நம்முடைய ராமமூர்த்தி அவர்களும் நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்கள் என்று என்னைத் திரும்பிப் பார்த்துச் சொன்னார்கள். எனவே இந்த வாய்ப்பை நான் பெற்று இந்த விழாவை அரசின் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடத்துகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்துள்ள நீதியரசர் ரெட்டியார், மூப்பனார், ராமமூர்த்தி ஆகியோருக்கும் உங்கள் அனைவருக்கும், உங்களையெல்லாம் அன்போடு வரவேற்ற தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆருக்கும், இந்த நிகழ்ச்சியைக் குறுகிய காலத்திலே ஏற்பாடு செய்த தம்பி அமைச்சர் முல்லைவேந்தனுக்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த நினைவு ஏப்போது ஏற்பட்டதென்றால் - இதற்காகத் திட்டமிட்டு, பத்துபேர் கூடி அமர்ந்து பேசி இந்த முடிவை எடுக்கவில்லை. இராஜபாளையத்தில் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா நடைபெற்றபோது, மேடையில் நான் குமாரசாமி ராஜா பற்றிய மலர் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த மலரில் குமாராசாமி ராஜா அவர்கள் இராஜபாளையத்தில் நடத்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு அவரே வரவேற்பாளராக இருந்தாரென்றும் - அந்த மாநாட்டில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், பெருந்தலைவர் காமராஜரும், மற்றவர்களும் கலந்துகொண்டார்கள் என்றும் ஒரு செய்திக்குறிப்பு இருந்தது.

அப்போதுதான், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் நூற்றாண்டு விழா எப்போது நடைபெற்றிருக்கவேண்டுமென்று திரு.மூப்பனார் அவர்களிடத்திலே நான் கேட்டேன். அவர்கள் 103 ஆண்டுகளாகிவிட்டது என்று சொன்னார்கள். அப்போதே இந்தத் தேதியை அந்த மேடையிலேயே நிச்சயம் செய்து அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று மூப்பனார் அவர்களையும் நான் கேட்டுக்கொண்டு அதன் தொடர்பாக இந்த நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

95ஆம் ஆண்டிலேயே இந்த நூற்றாண்டு விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்னும் சொல்லப்போனால் - அரசின் கோப்புகளைப் பார்க்கும் வாய்ப்புள்ளவன் என்பதால் - இதற்காக மூன்று இலட்சம் ரூபாய் 95ஆம் ஆண்டில் நிதி கூட ஒதுக்கப் பட்டிருக்கின்றது.

நிதி ஒதுக்கப்பட்டதே தவிர, நடத்த வேண்டுமென்று விதி ஏற்படவில்லை. புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால் - அந்த விதி எனக்குத்தான் இருந்திருக்கின்றது. அந்த விதிப்படி இந்தக் காரியம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கள்ளங்கபடமற்ற - கிராம விவசாயியின் முகம்**

ஓமந்தூரார் அவர்களை தமிழ்நாட்டு மக்கள் தங்களிலே ஒருவராகக் கருதுகின்ற அளவிற்கு உருவம் படைத்தவர். உள்ளம் படைத்தவர். நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்தாலே தெரியும். ஒரு கள்ளங்கபடமற்ற கிராமத்து விவசாயியின் முகம்தான் ஓமந்தூரார் முகம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அப்படிப்பட்ட எளியவர் - இனியவர் - ஏழைப் பங்காளர் - விவசாயிகளின் தோழர். விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக வளர்க்க வேண்டுமென்று பெருவிருப்பம் கொண்டு பணிகளை ஆற்றியவர். அத்தகையவர் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இரண்டாண்டு காலம்தான் இருக்க முடிந்தது என்பது இந்த மாநிலத்தின் வாய்ப்புக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அவர், நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் முதலமைச்சர் பொறுப்பையேற்றார். அவர் முதல்வராக இருந்தபோதுதான் நாடு சுதந்திரம் பெற்றது.

**ஓ.பி.ஆர். பற்றி அண்ணா எழுதிய கட்டுரை**

அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது அவரைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழிலே ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் தலைப்பு - "காந்தி ராமசாமியும் - பெரியார் ராமசாமியும்" என்பதாகும். அதிலே அண்ணா குறிப்பிடுகிறார்.

"கள்ளம் கபடமற்ற கிராமவாசி; அரசியல் சூதாட்டத்திற்கு அப்பாற்பட்டவர்; தியாக முத்திரையை அரசியல் சந்தையிலே விற்கத் துணியும் வணிகராக இருக்க மறுப்பவர். சொந்த வாழ்க்கையையும், நலனையும் மிக மிகக் குறைவான அளவினதாக ஆக்கிக்கொண்ட துறவு மனப்போக்கினர். நெடுங்காலமாக, நாட்டுப்புற வாழ்வை நேரடியாக, அவருடன் பழகியது மட்டுமன்று, அவர்களில் ஒருவராக இருந்து அறிந்து கொண்டவர். உள்ளொன்று வைத்து வெளி ஒன்று கொண்டுழலும் உலுத்தர் போலன்றி, ஊருக்கு உழைப்பேன், அதனால் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன் - என்ற உறுதி படைத்த உள்ளத்தினர். எளிய வாழ்க்கையும், சீரிய குணங்களும் கொண்டவர். இவரே நம் முதலமைச்சர் என்று சொன்னால் ஒழிய, யாராலும் அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்து இருப்பவர் என்று கண்டதும் உணரக்கூடிய விதமான உருவமோ, உடையோ, நடையோ கொண்டவர் அல்லர். தன்னடக்கம் உள்ள தமிழர் ஓமந்தூரார்" என்று எழுதினார் அண்ணா!

**தனித்தமிழராக - தன்மானமுள்ளவராய் தமிழகத்தை ஆண்டவர்**

நம்முடைய நீதியரசர் அவரை தெலுங்குத் தமிழர் என்றார். ஆனால் எங்கள் அண்ணா அவரைத் தன்னடக்கம் உள்ள தமிழர் என்றே சொல்லியிருக்கிறார். அவர் தனித் தமிழராகவே - தன்மானம் உள்ள தமிழராகவே இந்தத் தமிழ் மாநிலத்தை ஆண்டிருக்கிறார். தமிழகத்திலே உலவியிருக்கிறார். தமிழகத்திலே பணியாற்றியிருக்கிறார்.

இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் சின்னமாக இருக்கிறதே, இந்தக் கோபுரச் சின்னம் - இந்தச் சின்னத்தை யார் உருவாக்கினார்கள் என்று பலருக்குத் தெரியாது. நம்முடைய பள்ளிக்கூட மாணவர்கள்கூட அதை அறிந்திருக்க இயலாது. அவைகளையெல்லாம் அரசின் கல்வித்துறை சார்பில் மாணவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அதனை நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

**அரசாங்க இலச்சினை உருவாக்கி வழங்கியவர்**

சென்னை அரசாங்கத்திற்கு ஒரு இலச்சினை வேண்டும் - இலச்சினை என்றால் அடையாளச் சின்னம் - வேண்டுமென்று விரும்பியபோது - இப்போதிருக்கின்ற இந்தச் சின்னத்தை உருவாக்கி, இப்படி இருக்கட்டுமென்று வழங்கியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

இதை அவர் அறிவித்தவுடன், இது ஒரு குறிப்பிட்ட சமயத்தாரின் சின்னம். எனவே, இது சமயச்சார்பற்ற அரசுக்கு நல்லதல்ல - கோபுரச் சின்னம் கூடாது என்றும் இதை இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்றும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்.

உடனே நேரு பெருமகனார் தனக்கு இத்தகைய முறையீடுகள் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி ஓமந்தூராருக்கு விளக்கம் கேட்டு எழுதினார். உடனே ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்ன பதில் எழுதினார் தெரியுமா?

> *"கோபுரம் என்பது சயமச் சின்னம் அன்று; இந்த மாநிலத்தின் தனிச்சிறப்பாக விளங்கும் திராவிடக் கட்டடக்கலையின் அடையாளம். காந்தி அடிகளின் இனிய நண்பரும், கிறிஸ்துவப் பெருமகனுமான மேனாட்டார் சி.எப்.ஆண்ட்ரூஸ் என்ற வணக்கத்துக்குரிய மத குருவின் ஆதரவோடு வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் கோபுரத்துடன் கூடிய தேவாலயம் கட்டப்பட்டிருப்பதையும் இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."*

என்று நேருவிற்குத் துணிச்சலாக அன்றைக்கே கடிதம் எழுதி நேருவினுடைய மௌனத்தை அதற்குப் பதிலாகப் பெற்றார்.

**அஞ்சாநெஞ்சத்திற்கும் ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டு**

அவருடைய அஞ்சாநெஞ்சத்திற்கும் ஆற்றலுக்கும் இன்னொரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமேயானால் - புதுவையை அடுத்த சொர்ணாவூரில் காங்கிரஸ் மாநாடு ஒன்றை அவர் ஏற்பாடு செய்தார். அந்த மாநாட்டில் குழிகள் தோண்டப்பட்டு மரங்கள் நடப்பட்டு அதிலே காங்கிரஸ் கொடிகளைப் பறக்க விடக்கூடாதென்று ஆங்கிலேய சர்க்கார் ஆணை பிறப்பித்தது. சரி. குழிகள் தோண்டி, மரங்கள் நட்டு,

கொடிகளைக் கட்டக்கூடாது என்கிறாய்; பரவாயில்லை என்று காங்கிரஸ் கொடிகளையெல்லாம் அங்கேயிருந்த பனை மரங்கள், தென்னை மரங்கள் மற்ற மரங்களின் கிளைகளில் எல்லாம் கட்டி அந்த மாநாட்டை அஞ்சாநெஞ்சத்தோடு, ஆற்றலோடு நடத்தியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

1934-ஆம் ஆண்டிலேயே மேல் சாதி, கீழ்ச் சாதிக் கொடுமை கூடாது என்பதற்காக ஆதி திராவிடர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு சிதம்பரம், ஓமந்தூர் போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களுக்குள் ஆலயப் பிரவேசம் செய்து காட்டியவர் ஓமந்தூரார்.

உப்புச் சத்தியாகிரகத்திலே ஈடுபட்டு அந்த யாத்திரையில் வேதாரண்யம் வரையில் ராஜாஜியின் தலைமையிலே சென்று சிறைபட்டார். பலமுறை சிறைப்பட்டார். 42-ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திலும் கலந்துகொண்டு 15 மாதங்கள் வேலூர், தஞ்சை, திருச்சி ஆகிய சிறைகளிலே தண்டனையை அனுபவித்தார்.

ஆனால் அவருடைய குடும்ப வாழ்க்கை; இளமையிலேயே மனைவியை இழந்தார்; அடுத்து தன் பெண் குழந்தையை இழந்தார்; அதற்குப் பிறகு வாலிப வயது வரையிலே வளர்க்கப்பட்ட தன்னுடைய மகன் சுந்தரத்தையும் இழந்தார். சோகமயமான வாழ்க்கை அவருடைய குடும்ப வாழ்க்கை. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் மகன் பெங்களூரிலே இறந்து விட்டான் என்று கேள்விப்பட்ட பிறகும் கூட, அதற்குச் செல்லாமல், அவனுடைய அடக்கத்தை அங்கேயுள்ளவர்கள் செய்து முடிக்க, செய்தியை மாத்திரம் கேட்டுக் கொண்டு அரும் பணிகளிலே ஈடுபட்டவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

**பாரதியாரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியவர் ஓமந்தூரார்.**

அவருடைய மகன் இளம் பிராயத்தில் சேரன்மாதேவி குருகுலத்தில் சேர்க்கப்பட்டிருந்தான். வ.வே.சு. அய்யரால் நடத்தப்பட்ட அந்தக் குருகுலத்தில் சாதிப்பாகுபாடு; உயர் சாதிக்காரர்கள்; உயர் சாதி அல்லாதவர்கள் என்று பிரிக்கப்பட்டு - உயர்சாதிக்காரர்கள் குடிக்கின்ற தண்ணீர்ப் பானையிலேகூட தண்ணீர் மொண்டு மற்றவர்கள் குடிக்கக் கூடாது என்கின்ற அளவிற்கு விதிமுறைகள் அங்கே இருந்தன. அதன் காரணமாக அங்கே கிளர்ச்சி ஏற்பட்டது. தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று அந்தக் கிளர்ச்சியை நடத்தினார் என்பதெல்லாம் வரலாறு. அந்த வரலாற்றின் அடிப்படையில் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

அவருடைய மகன் சுந்தரம் தந்தை ஓமந்தூராரைச் சந்தித்து "அப்பா, அங்கே தண்ணீர் பானை தனித்தனியாக வைத்திருக்கிறார்கள்; எங்களுக்கொரு பானை, உயர் சாதிக்காரர்களுக்கு ஒரு பானை என்று வைத்திருக்கிறார்கள்; நான் உயர்சாதிக்காரர்களுக்காக வைக்கப்பட்ட பானை என்று தெரியாமல், அதிலிருந்து ஒரு குவளை தண்ணீர் மொண்டு பாதி தண்ணீர் குடிப்பதற்குள் அங்கே வந்த உயர்சாதிக்கார ஆசிரியர் என் கன்னத்திலே பளார் என்று அடித்து விட்டார். அந்தப் பானையைத் தீட்டாக்கி விட்டாயே என்று கேட்டு அடித்தார். அப்பா, தீட்டு தீட்டு என்று சொல்லி அடித்தாரே, தீட்டு என்றால் என்ன அப்பா ?" என்று கேட்டான்.

அதைக் கேட்டதும் ஓமந்தூராருடைய முகம் சிவந்தது. தாங்க முடியாத வேதனைப்பட்டார். அதன் விளைவாகத் தான் பெரியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. இவர்களோடு ஓ.பி.ஆரும் சேர்ந்து சேரன்மாதேவி போராட்டத்திலே கலந்துகொண்டதின் காரணமாகத் தன்னுடைய மகனையே அங்கிருந்து வெளியேறச் சொல்லி வேறு பள்ளியிலே சேர்க்கச் செய்து - சேரன்மாதேவி குருகுலத்திற்கே ஒரு முடிவுரையை எழுதினார்கள் அந்தக் காலத்தில்.

அவர்தான் பாரதியார் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்குக் காரணமும் ஆவார். பலபேருக்கு இது தெரியாது. பாரதியாரின் நூலை நாட்டுடைமையாக ஆக்க அன்றைக்கு 15,000 ரூபாய் பரிவுத் தொகை வழங்கி, 12.3.1949-ல் சுப்பிரமணிய பாரதியாருடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக ஆக்கி ஆணை பிறப்பித்தார் ஓமந்தூரார். இன்றைக்கு நாங்கள் பல நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக ஆக்குகிறோமென்றால், அதற்கெல்லாம் அன்றைக்கு வழிகாட்டியாக அமைந்தவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

**கிருஷ்ணா நீர் வர ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் ஓமந்தூரார்**

அந்தக் காலத்திலேயே கீழ் பவானி அணை இவரால்தான் கட்டப்பட்டது. வீடூர் அணைக்கு ஒப்புதல் அளித்தார் - ஆனால் கட்டி முடிக்கவில்லை. பிறகு வந்த ஆட்சியாளர்கள் அதைக் கட்டி முடித்தார்கள். இன்னும் சொல்லப் போனால் கிருஷ்ணா, பெண்ணையாறு இரண்டையும் இணைத்து சென்னைக்கு குடிநீர் வழங்குகின்ற ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு அன்றைக்கே ஓமந்தூரார் அனுப்பி வைத்தார். கிருஷ்ணா, பெண்ணையாறு சேர்ந்து வராவிட்டாலும் இன்றைக்கு கிருஷ்ணா நீர் வர ஆரம்பக் கர்த்தாவாக இருந்தவரே, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படிப்பட்டவருடைய நினைவை இன்றைக்கு நாம் போற்றிக் கொண்டிருக்கிறோம். இங்கே மேடையிலே கோரிக்கை வைக்க வில்லையே தவிர, தம்பி. கே.கே.எஸ்.எஸ். ஆரும், மற்றும இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் என்னை வீட்டில் சந்தித்து ஓமந்தூரார் பெயரால் சென்னையிலே ஒரு சாலைக்குப் பெயரிட வேண்டுமென்று கேட்டார்கள்.

நான் எந்தச் சாலைக்கு அவர் பெயர் வைக்கலாம் என்று யோசித்துப் பார்த்தேன். சாலைக்குப் பெயரிடுவது எனக்குப் பொருத்தமாக தோன்றவில்லை. இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர் விடுதிகள் எல்லாம் இருக்கின்ற பகுதி - ராஜாஜி மண்டபம் இருக்கின்ற பகுதி - அந்த வளாகத்திற்கு தற்போது பெயர் "அரசினர் தோட்டம்" என்பதாகும். இனிமேல் அந்த அரசினர் தோட்டம் - "ஓமந்தூரார் அரசினர் தோட்டம்" என்று வழங்கும் என்று கூறி, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*- வள்ளுவர் கோட்டத்தில் 25.8.98 அன்று நடைபெற்ற முன்னாள் முதலமைச்சர் **ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்** அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.* ★

# கணினி வளர்ச்சியில், நம்முடைய ஆட்சியில்

# தமிழ் பெருமைமிக்க இடத்தைப் பெறும்


**- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு**

நாமெல்லாம் செய்தி யுகத்தின் விடியலிலே இன்றைக்கு இருக்கிறோம். எதிர்காலத்தினுடைய இணையற்ற தொழில் நுட்பமாகச் செய்தி பரப்புகின்ற வழிமுறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வகைத் தொழில் நுட்பத்தில் மாபெரும் பங்குபெறும் செயற்கைக்கோள் இணைப்பு, ஒருங்கிணைந்த வீடியோ, குரலோசைகள் ஆகியவை இந்த உலகத்தில் அங்கிங் கெனாதபடி எங்கும் பரவியுள்ளன. மலரவிருக்கும் 2000-ஆம் ஆண்டில் உலக அளவில் தகவல் தொழில் நுட்பத் துறையின் உற்பத்தி மதிப்பு 1,300 பில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 1,300 இலட்சம் கோடி ரூபாய் அளவை எட்டக் கூடுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தியாவிலே ஆண்டு ஒன்றுக்கு எட்டு சதவிகித கூடுதல் மதிப்பீட்டுடன் வளரும் மின்னணு தொழில் துறையின் உற்பத்தி மதிப்பு 2000-ஆம் ஆண்டில் 20 பில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 20 இலட்சம் கோடி ரூபாய் அளவை அடையக்கூடுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

அண்மைக் காலமாக தமிழ்நாடு பல தொழில் முதலீடுகளைக் குறிப்பாகப் பல வெளிநாட்டினரின் முதலீடுகளை ஈர்த்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அமெரிக்க நாட்டின் ஃபோர்டு மோட்டார் நிறுவனம், கொரியாவின் ஹூண்டாய் நிறுவனம், ஜப்பானிய மிட்சுபிஷி நிறுவனம், பிரெஞ்சு நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனம் ஆகியவை இங்கே முதலீடுகள் செய்து தங்கள் தொழில்களைத் தொடங்கியுள்ள விவரங்களையும் நீங்கள் உணருவீர்கள்.



### தமிழகத்தின் தொழில் கொள்கைதான் தொழில் வளர்ச்சிக்குக் காரணம்

தமிழகம் தொழில் முதலீட்டாளர்களுக்காக உருவாக்கியுள்ள அரிய தொழில் கொள்கைகள்தான் இந்த முன்னேற்றத்திற்கு - இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும். தரமான பொறியியல் கல்வி வழங்குவதில் முன்னணி நிறுவனங்களாக விளங்குகின்ற அண்ணா பல்கலைக்கழகம், சென்னை ஐ.ஐ.டி., கோவை பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி போன்றவைகளிலிருந்து ஆண்டுதோறும் தகுதியும், திறமையும் வாய்ந்த ஏறத்தாழ 23,000 பொறியியல் பட்டதாரிகள் உருவாகின்றார்கள். இவர்களில் ஏறத்தாழ 13,000 மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத் துறையில் ஆற்றல் படைத்தவர்களாகத் திகழ்கின்றார்கள்.

இந்தத் தகவல் துறை தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் இந்த மனித வளத்தின் துணையோடு இத்துறையை மிகுந்த மதிப்புடையதாக உலக அரங்கத்தில் உருவாக்கி வருகிறோம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சாப்ட்வேரில் (மென்பொருள்) தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை அதிகம் என்பதை எனக்கு முன்னால் இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் ஏறத்தாழ 120 சாப்ட்வேர் தொழில் நிறுவனங்களில் ஏறத்தாழ 15,000 வல்லுநர்கள் பணிபுரிகின்றார்கள். இந்த நிறுவனங்களிலிருந்து ஆண்டுதோறும் 1,100 கோடி ரூபாய் மதிப்புடைய சாப்ட்வேர், ஹார்டுவேர் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பதை இங்கே தலைமையேற்றுள்ள தம்பி முரசொலி மாறன் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்ப மேம்பாட்டின் முக்கியத்து வத்தை நன்கு உணர்ந்து, இந்த அரசு தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களை அமைத்திட

முன்வருவோருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. விற்பனைத் தலங்கள், குடியிருப்புகள் எல்லாம் இத்தகைய அறிவியல் பூங்காக்களில் அடங்கியிருக்கும்.

அதே நேரத்தில் - சுற்றுப்புறத்தை மாசு படுத்தாத அளவில் ஹார்டுவேர் தொழில் நுட்ப ஏற்பாடுகளும் இந்தத் தொழில் வளாகங்களில் அமையுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

97-98ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசினுடைய தகவல் தொழில் நுட்பவியல் கொள்கையின்படி (இன்பர்மேஷன் டெக்னாலஜி பாலிசி) இந்த அரசு தகவல் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு, பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றது. அவை சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்பவியல் வளாகங்களை அமைக்க முடிவு செய்துள்ளது என்பதும் ஒன்றாகும்.

### தொழில் முனைவோருக்கு நிலம் - முழு வரி விலக்கு

அவ்வாறு அமைக்கப்படும் வளாகங்களில் தொழில் முனைவோருக்கு நிலம் வழங்குதல்; நீர், மின்சாரம், சாலை வசதிகள் செய்து தருதல், தொலைத் தொடர்புத் துறை மூலமாகக் கேபிள் மற்றும் விண்வழிக்கோள் இணைப்புப் பெறத் தேவையான உதவிகள் செய்தல்; இடம் தேர்வு செய்வோர் கட்டடம், இடம் ஒதுக்கீடு பெறுவோர் வசதிக்காக முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் முழுமையான வரி விலக்கு வழங்குதல் முதலிய பல்வேறு உதவிகளை அரசு வழங்கிவருகின்றது.,

மாசுக்கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகளைக் கணிப்பொறித் தொழில்களுக்கு விதிக்கப்படுவதில்லை. தொழில் வளாகத்தின் உட்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வேலை ஒப்பந்தத்திற்கும் முழுமையான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

நான் நிலத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். இன்று இந்த அரசில் என்னுடைய துறைகளில் ஒன்றாகத் தொழில் துறையும் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடுகின்ற கோப்புகளில் மிக அதிகமான கோப்புகள் இன்னின்ன தொழில் வளாகங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறது என்கின்ற கோப்புகள்தான் என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### ரூ.280 கோடியில் உருவாக இருக்கும் பிரம்மாண்ட கட்டடம்

இந்த அரசின் தகவல் தொழில் நுட்பவியல் கொள்கைகள் அடிப்படையில் எல்காட் நிறுவனமும், டிட்கோ நிறுவனமும் இணைந்து டைடல் பார்க் என்னும் புதிய தொழில் வளாகத்தை இங்கே உருவாக்குகின்றன. இத்தொழில் வளாகம் தகவல் தொழில் நுட்பத் தொழிற்சாலைகள் பலவற்றை ஏற்படுத்துவதற்காக பத்து இலட்சம் சதுர அடியில், சென்னை தரமணியில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப் படுகின்றது. இன்று விழாவிற்காக ஒரு பந்தல் அமைத்து அமர்ந்திருக்கின்ற நாம் வெகு விரைவில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக இருக்கின்ற பிரம்மாண்டமான கட்டடத்தை இதே இடத்திலே காணவிருக்கிறோம். அங்கே பணியாற்ற தேனீக்களைப் போல வந்து செல்கின்ற பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களையும் கண்டு மகிழவிருக்கிறோம்.

இந்த வளாகத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு மற்ற தொழில்களுக்கு வழங்கப்படும் மானிய உதவிகள், சலுகைகள் முதலிய அனைத்தும் வழங்கப்படும். இங்கு மின்வெட்டுக்கு விலக்கு அளிக்கப்படும். 110 கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் துணை மின்நிலையம் ஒன்றும் இங்கு அமையவிருக்கின்றது. விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (வி.எஸ்.என்.எல்.) எனப்படும் மத்திய அரசின் தொலைத் தகவல் தொடர்பு நிறுவனத்தின் உதவியோடு சாட்டிலைட் தொடர்புகளும் ஏற்படுத்தப்படும். வீடியோ வசதிகளோடு கருத்தரங்கக் கூடம், நெட்வொர்க் வசதிகள் முதலியன ஏற்படுத்தப்படும். டைடெல் பார்க் என்னும் இத்தொழில் வளாகத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகின்ற நேரத்தில் எனக்கு முன்னால் இங்கே எடுத்துச் சொன்ன பல நல்ல கருத்துக்களையெல்லாம் செயலாக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய விட்டல் அவர்கள் பேசும்போது அதைத் தொடர்ந்து தம்பி மாறனும் சுட்டிக்காட்டியவாறு, பள்ளிகளிலேயே கணினி பயிற்சியையும், கணினியின் பணியையும் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். அதற்கான முயற்சிகள் இன்றுமுதலே தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, படிப்படியாகவும் பரவலாகவும் அது நிறைவேறும், நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**

**- தந்தை பெரியார்**

## கணினி வளர்ச்சியில் தமிழ் பெருமை மிக்க இடத்தைப் பெறும்

கணினியில் தற்போதே தமிழ் இருந்தபோதிலும், அதை மேலும் அதிக அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்ட திருவிட்டல் அவர்கள் உவேசாமிநாதய்யர் எப்படி அச்சு உருவத்தில் தமிழை ஏற்றினாரோ அதைப்போல கணினி வளர்ச்சியிலும் நம்முடைய காலத்திலே தமிழின் ஆதிக்கத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார். வரலாற்றில் 2000 ஆண்டிற்குள் கணினி வளர்ச்சியில் தமிழ் பெருமை மிக்கதோர் இடத்தைப் பெறும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே ஆண்டிற்குள் இந்தத் தொழில் வளாகம் அமைக்கப்பட்டு - 99 டிசம்பருக்குள் இங்கே தகவல் தொழில் நுட்பத் தொழில் கூடங்கள் பல செயல்படத் தொடங்கும் என எனக்கு தொழில்துறை செயலாளர் சீனிவாசன் அவர்களாலும், டிட்கோ தலைவர் கோபாலன் அவர்களாலும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

## மென்பொருள் துறையில் ஆற்றல் படைத்தவர்களுக்கு உதவிட நிதி

இத்துடன் ஆற்றல் படைத்தவர்களுக்கு உதவிட சிறப்பு நிதி அமைப்பை (வெஞ்சர் கேபிடல்) உருவாக்கவும் இந்த அரசு எண்ணியுள்ளது. சாப்ட்வேர் தொழில் வல்லுநர்கள் பல புதியதயாரிப்புகளை உருவாக்கி உள்ளனர். அவர்களுக்கு ஊக்கமளிப்பது மிகமிக அவசியமான ஒன்றாகும். சிலர் மிகுந்த சிறந்த தொழில் நுட்பத்தோடு விளங்குகின்றார்கள். ஆனால், அவர்கள் பொருளாதாரத்தில் வசதி குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய திறமையாளர்களுக்கு, நிபுணர்களுக்கு அதாவது வல்லுநர்களுக்கு உதவுவதற்காக சிட்பி, ஐ.எல்.எப்.எஸ். போன்ற நிறுவனங்களின் துணையோடு முப்பது கோடி ரூபாயுடன் ஒரு சிறப்பு மூலதன நிதி 98-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு "வெஞ்சர் கேபிடல்" உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதியிலிருந்து இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முடிவிற்குள் சில சாப்ட்வேர் நிறுவனங்களுக்கு நிதிஉதவி வழங்கப்படுமென டிட்கோ நிறுவனம் எனக்கு உறுதி அளித்துள்ளது. அப்படி உறுதியளித்தவாறு அந்த உதவி வழங்கப்படும். அதன்படி ஐந்து கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்குவதற்கு மூன்று சாஃப்ட்வேர் நிறுவனங்களை டிட்கோ தேர்வு செய்துள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே தமிழகம் இன்றைக்கு தொழில் வளர்ச்சியில் - தொழில் வளத்தில் முன்னேற்றத்தில் மூன்றாவது இடத்திலே இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தோற்றத்திற்கு மூன்றாவது இடம் என்றாலும் இரண்டாவது இடத்திலேதான் இருக்கிறது என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் கூட முதல் இடத்தை நோக்கி நாம் வேகமாக, விரைவாக விவேகத்தோடு செல்லவேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்து கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்திலே இருக்கின்றது என்ற ஒரு புள்ளி விவரத்தை "டைம்ஸ் ஆப் இந்தியா" ஏடு, 6-7-98 தேதிய நாளிதழில் வெளியிட்டிருக்கின்றது. இந்த ஏட்டில் வந்த செய்தி வருமாறு:

## கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் தமிழகம் முதலிடம்

அண்மையில் கிடைத்த புள்ளி விவரப்படி தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் நாட்டிலேயே கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (கிரடிட் டெபாசிட் ரேஷியோ) உயர்நிலையில் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

97-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வெள்ளிக்கிழமை நிலவரப்படி அனைத்து வர்த்தக வங்கிகளின் ஒட்டுமொத்த அனைத்திந்திய சராசரி கடன்தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவிகிதம் என்றால் தமிழகத்தில் அப்போது விகிதாச்சாரம் 92.3 சதவிகிதமாகும். அதற்கடுத்து ஆந்திர மாநிலம் 74.2 சதவிகிதம் பெற்று இரண்டாம் நிலையிலும், அதைத் தொடர்ந்து மராட்டிய மாநிலம் 68.7 சதவிகிதம் பெற்றும், மணிப்பூர் 59 சதவிகிதம் பெற்றும் உள்ளன. தேசத்தின் தலைநகரமான டெல்லி யூனியன் பிரதேசத்தில் இந்த விகிதாச்சாரம் 70.9 சதவிகிதம். அதையொட்டியுள்ள சண்டிகர் பகுதியில் 69.1 சதவிகிதம். இதைத் தவிர இதர மாநிலங்கள் மற்றும் இதர யூனியன் பிரதேசங்களின் கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அகில இந்திய சராசரிக்கு குறைவாகவே உள்ளது என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் முன்னணியிலே இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைய முடிகின்றது.

The States of Tamil Nadu, Andhra Pradesh, Maharashtra and Manipur have recorded the highest credit deposit ratios (CDR) in the country, according to the latest data available.

Against an all-India average CDR of 55.5 percent of all scheduled commercial banks (as on the last Friday of December 1997), Tamil Nadu's CDR was an astounding 92.3 percent.

Andhra Pradesh recorded the second highest CDR of 74.2 percent, followed by Maharashtras 68.7 percent and Manipur's 59 percent. The National Capital Territory (NCT) of Delhi registered a CDR of 70.9 percent, close to the Union territory of Chandigarh's 69.1 percent.

The CDR of all other States/Union Territories is below the all-India average.

நான் இதைக்கூறுவது - இது போதும் என்று திருப்தி கொள்வதற்காக அல்ல. இந்த உற்சாகத்தோடு மேலும் ஊக்கத்தோடு நம்முடைய பணிகளையாற்றி தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றது என்கின்ற வரலாற்றை உருவாக்கவேண்டும். அதற்கு தொழில் முனைவோர் அனைவரும் துணைநிற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

- சென்னை, தரமணியில் 'டைடெல்' மென்பொருள் பூங்காவிற்கு 21-8-98 அன்று அடிக்கல் நாட்டி முதல்வர் **கலைஞர்** ஆற்றிய உரை

★

# கட்சி வேறுபாடு தேவையில்லை:

# சாதி மதங்களுக்குகிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும்!

திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழாவில் 16.8.98 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

"நீண்ட காலமாக இந்தப் பகுதிக்குத் தேவைப்பட்ட இரயில்வே மேம்பாலத் திறப்பு விழா நிகழ்ச்சி இந்நிகழ்ச்சி. அத்துடன் திறப்பு விழாவிற்கு என்றும், அடிக்கல் நாட்டு விழாவிற்கென்றும் தீட்டப்பட்டுள்ள ஏறத்தாழ 28 கோடி ரூபாய் திட்டத்திற்கான நிகழ்ச்சியாகவும் இந்த நிகழ்ச்சி இன்றைக்கு அறிவிக்கப்பட்டு அதற்கான திறப்பு விழா நிகழ்ச்சியும், தொடக்க விழா நிகழ்ச்சியும் இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது.

**நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற கொள்கைக் கோட்பாடு**


குறிப்பாக ஒரு அரசு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மக்களின் வரிப்பணத்தைக் கொண்டும் வேறு வகையான நல்லவிதமான வருமானங்களைக் கொண்டும் நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறது. மக்களால், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெறுகிற மக்களின் ஆட்சியில் மக்களின் நன்மைகளைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களுக்கு இருத்தல் ஆகாது. அத்தகைய கொள்கைக் கோட்பாட்டுடன் நடைபெறுகின்ற ஆட்சிதான் இன்றைக்கு உங்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சி.

இங்கே பேசிய திருமதி. பொன்னம்மாள் அவர்களும், ஆண்டி அம்பலம் அவர்களும், மற்றும் நண்பர்களும், அமைச்சர்களும் எனக்கு நல்வாழ்த்துக் கூறினார்கள். இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றெல்லாம், ஆண்டவன் மீது நம்பிக்கை உள்ளவர்களெல்லாம் ஆண்டவனைக் கேட்டுக்கொண்டார்கள். மற்றவர்கள் இயற்கையைக் கேட்டுக் கொண்டார்கள். யார் எப்படி கேட்டுக்கொண்டாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு முடிவு உண்டு. எப்படி ஆரம்பம் உண்டு என்பது நிச்சயமோ அதைப் போல முடிவு உண்டு என்பதும் நிச்சயம். நான் நூறாண்டுக் காலம் வாழ வேண்டும் என்று திருமதி. பொன்னம்மாள் இங்கே, வாழ்த்தினார். அவர் என்னை காணும் போதெல்லாம் எந்த நேரமானாலும் வாழ்த்துவதை வழக்கமாகக் கொண்டவர் நீண்டகாலம் நான் வாழ வேண்டும் நோய் நொடியின்றி நான் வாழவேண்டும் என்றெல்லாம் வாழ்த்துவார்கள். அதே வாழ்த்தினை இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற மாநாடு போன்ற இந்த மகத்தான நிகழ்ச்சியிலும் அவர்கள் இங்கே வழங்கினார்கள்.

**எண்ணற்ற காரியங்களைச் செய்யும் ஆர்வம்**

எத்தனை ஆண்டுக்காலம் இன்னும் நான் வாழவேண்டும் அல்லது வாழ்ப்போகிறேன் என்பதல்ல முக்கியம். வாழ்கின்ற நாட்களுக்குள் இந்தச் சமுதாயத்திற்கு, மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். இருக்கின்ற ஆட்சிப்பொறுப்பின் வாய்ப்பைப்

## திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்



பயன்படுத்திக் கொண்டு முடிந்ததையெல்லாம் செய்யவேண்டும் என்கிற ஆர்வத்தோடுதான் நான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். நான் வாழ்வது பல ஆண்டுக் காலம் என்றாலும், அல்லது சில ஆண்டுக் காலம் என்றாலும், அல்லது சிலர் சொல்வதைப் போல என் நாட்கள் எண்ணப்படுகின்றன என்றாலும், அந்த எண்ணப்படுகின்ற நாட்களுக்குள் எண்ணற்ற காரியங்களைத் தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு நான் வேகவேகமாகப் பணியாற்றி வருகிறேன். அப்படி ஆற்றுகின்ற பணியின் ஒரு கட்டம்தான் இன்று திண்டுக்கல்லில் நடைபெறுகின்ற இந்த விழா நிகழ்ச்சிக்கு உரிய கட்டமாகும்.

இங்கே உரையாற்றியவர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தம்பி தா. கிருட்டிணனும், பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் இன்றைக்கு இங்கே இந்தப் பாலம் கட்டப்படுவதற்கான சிந்தனை எப்பொழுது எழுந்தது, கோரிக்கை எப்பொழுது எழுந்தது, அதற்கான முயற்சி எப்பொழுது முகிழ்த்தது, இன்றைக்கு அது எப்படி முகிழ்த்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

1989-90 ஆம் ஆண்டு சிந்தித்து, ஆட்சி கலைக்கப் பட்ட காரணத்தால் அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே 93-ஆம் ஆண்டு டெண்டர் விடப்பட்டு 96-லே வேலை தொடங்கப்பட்டு ஓராண்டுக் காலம் அல்லது ஒன்றையாண்டுக் காலத்தில் பணி முடிக்கப்பட்டு இன்றைக்குப் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது. இதைப்போலப் பல பணிகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டும் - வேறு சில பணிகள் தொடங்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டும் ஆக மொத்தம் ஏறத்தாழ 28 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் இந்த வட்டாரத்தில் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு உங்களையெல்லாம் இந்நிகழ்ச்சியில் நான் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

இந்தப் பாலத்திற்குச் சற்றொப்ப 4 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இதைத் தவிர மூன்று பாலங்கள் மேலும் கட்டி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ அதற்கு 2 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. மருத்துவம், பொதுச் சுகாதாரத்துறையின் மூலம் 7 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள மிக முக்கியமான தீவிர இருதய சிகிச்சைப்பிரிவுக் கட்டடமும்இன்றைக்குத்திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

40 இலட்ச ரூபாய் செலவில் நான்கு புதிய பேருந்துகள் இந்த விழாவிலே இயக்கி வைக்கப்பட்டுள்ளன. இப்படி 12 கோடி ரூபாய்க்கான திறப்பு விழா நிகழ்ச்சிகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் ஏறத்தாழஐந்தரைக்கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொடைக்கானல், அம்மைய நாயக்கனூர் ஆகிய இரண்டு இடங்களில் துணை மின் நிலையங்கள் கட்டுவதற்காகவும் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

## அரசு உடனடியாக நிறைவேற்றிய ஏ.எஸ்.பொன்னம்மாள் கோரிக்கை

நீண்டகாலமாக நிலக்கோட்டையில் **அரசினர் மகளிர் கலைக்கல்லூரி** வேண்டுமென்று ஒவ்வொரு முறை சட்டமன்றத்தில் பேசும் போதும் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் பொன்னம்மாள் இதை வலியுறுத்தி வந்திருக்கிறார். அது எந்த மானிய விவாதமாக இருந்தாலும் சரி, அது ஆதிதிராவிட நலத்துறைமானியமாக இருந்தாலும் சரி, பொதுமானியத் துறை மானியமாக இருந்தாலும் சரி, கல்வி மானியமாக இருந்தாலும் சரி ஏன் காவல்துறை மானியமாக இருந்தாலும் சரி; எந்த மானியமாக இருந்தாலும் அக்காள் பொன்னம்மாள் பேச எழுந்தால் நிலக்கோட்டையிலே அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வேண்டும். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லத் தவறியதே இல்லை. அந்தக் கோரிக்கை ஒரு நிபந்தனையோடு ஏற்கப்பட்டது. அதற்கான முதல் உதவியாக ஒரு பெருந்தொகையை வசூலித்துத் தரவேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து தன்னுடைய பெரும் முயற்சியினால் ஏறத்தாழ 85 இலட்ச ரூபாய் அதற்கு வழங்க வேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டு அதிலே பெரும் பகுதியாக 80 இலட்ச ரூபாய்க்கு மேல் அவர்கள் கட்டிவிட்டு அந்தக் கலைக்கல்லூரியைக் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். அதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. அடிக்கல் நாட்டிய காரணத்தினால் அடிக்கல் அப்படியே இருக்காது; விரைவிலே அந்தக் கட்டடம் எழும்பும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடம் எழும்புவதற்குள்ளாகவே இப்பொழுதே கல்லூரி தொடங்கப்படுகிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெரும்பாலான அணைத் திட்டங்கள் - இவ்வாட்சியில்தான்

இதைப்போல வேறு பல திட்டங்கள் கூட்டுறவுத் துறை மூலமாக 18 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மண்ணெண்ணெய் பங்குகளை அமைப்பதற்கும் இன்றைக்கு ஆரம்ப விழா நடத்தப்பட்டு உள்ளது. அம்மாபட்டி மான்கரை இடையே மஞ்சளாற்றின் குறுக்கே சந்தான வர்த்தினி ஆற்றின் குறுக்கேயும் புதிய பாலங்கள் கட்டுவதற்கும் இன்றைக்கு அடிக்கல்

நாட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலங்கள் தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப்போலப் பெரிய அணைகளானாலும் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்திலே பெரும்பாலான அணைகள், நீர்த்தேக்கங்கள் பாசன வசதிக்கான சாத்தியக்கூறுகள் அனைத்தும் தி.மு.க. ஆட்சியிலேதான் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்ல; பாலங்கள் மேம்பாலங்கள் என்று எடுத்துக்கொண்டால் சென்னை மாநகரத்திலே புகழ் பெற்ற அண்ணா மேம்பாலம், சேலத்தில் இரண்டு மேம்பாலங்கள், திருப்பூரில் ஒரு மேம்பாலம், கோவையிலே அடுக்கு மேம்பாலம், அதைத் தவிர கோவையில் கிராஸ் கட் ரோட்டில் இன்னொரு மேம்பாலம், திருச்சி பாலக்கரையில் ஒரு மேம்பாலம், திருவாரூரில் ஒரு மேம்பாலம், மயிலாடுதுறையில் ஒரு மேம்பாலம், நெல்லையில் திருக்குறள் ஈரடி போல ஈரடுக்கு மேம்பாலம்,அந்தப் பாலத்திற்கு வள்ளுவர் மேம்பாலம் என்று பெயர். மதுரையிலே மூன்று மேம்பாலம், திருமானூரில் ஒரு பாலம், புலித்தலையில் முசிறியில் நீண்ட பாலம், சென்னையிலே மணலி மேம்பாலம், தண்டையார்பேட்டையில் ஒரு இரயில்வே மேம்பாலம், காட்பாடியில் இரயில்வே மேம்பாலம், அரக்கோணத்தில் இரயில்வே மேம்பாலம், தாம்பரத்தில் புலியூர் மேம்பாலம், இராயபுரத்தில் மேம்பாலம் உருவாகியதிலிருந்து மேலும் ஏழெட்டு மேம்பாலங்கள் உருவாகுவது குறித்து நம்முடைய தென்னக ரயில்வேயின் பொதுமேலாளர் கீர்த்திவாசன் அவர்கள் இங்கே விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்.

### ஏழெட்டுப் பாலங்கள் விரைவில் கட்டப்படும்

இத்தனைப் பாலங்கள் இந்த ஆட்சிக் காலத்தில்தான் முயற்சி எடுக்கப்பட்டு அமைந்திருக்கின்றன. மேலும் அமைய இருக்கின்றன. ஏறத்தாழ 30 அல்லது 35 பாலங்கள் பெரும்பாலானவை கட்டி முடிக்கப்பட்டும், இன்னும் ஏழெட்டுப் பாலங்கள் கட்டி முடிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருப்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பாலங்கள் மாத்திரம் போதாது; கார்கள் செல்ல, வண்டிகள் செல்ல, பயணிகள் செல்லக் குறிப்பாகத் துரித வண்டிகள் செல்கின்ற இடத்தைக் கடக்கக் கட்டப்படுகின்ற பாலங்கள் மாத்திரம் போதாது; பாலங்கள் நமக்கிடையிலேயும் கட்டப்பட வேண்டும்.

### ஜாதி மதங்களுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும்

ஜாதிகளுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும். மதங்களுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும்; செட்டியாருக்கும், முதலியாருக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். ஐயருக்கும் ஆதிதிராவிடருக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். இஸ்லாமியருக்கும் இந்துவுக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். அத்தகைய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டால்தான், அந்தப் பாலங்களில் போக்குவரத்து சுகமாக நடைபெற்றால்தான், சச்சரவு இல்லாமல் நடைபெற்றால்தான் பாலங்கள் கட்டப்பட்ட பிறகும் மோதிக் கொள்ளாமல் பயணம் நடைபெற்றால்தான் நான் மகிழ்ச்சியடைவேன். இந்தப் பாலங்களால் மாத்திரம் மகிழ்ச்சியடைய மாட்டேன். அந்தப் பாலங்கள் கட்டப்பட்டாக வேண்டும். அந்தப் பாலங்களைக் கட்டுகின்ற முயற்சியிலேதான் இன்றைக்கு அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டிருக்கின்றோம்.

அதிலே கட்சி வேறுபாடு தேவையில்லை. உத்தமர் காந்தியடிகளும் அந்தப்பாலம் கட்டப்படவேண்டுமென்று பாடுபட்டார்; தந்தை பெரியார் அவர்களும், பெருந்தலைவர் காமராஜரும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும், டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களும் அந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டார்கள்.

### கட்சி வேறுபாடின்றிப் பாடுபட்ட தலைவர்கள்

ஆனால், அந்தப் பாலத்தைக் கட்டுகிற நேரத்தில் எத்தனைச் சிரமங்கள் இன்றைக்கு நாட்டிலே ஏற்படுகின்றதென்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆண்டவன் அனைவருக்கும் பொது என்கிறோம். அந்த ஆண்டவனின் படைப்புத்தான் எல்லா மனிதர்களும் என்று சொல்கிறோம். ஆனால் அந்த ஆண்டவனே நம்மை வெவ்வேறாகப் படைத்திருக்கிறான் என்றும் நம்புகின்றோம். அந்த ஆண்டவன் ஒருவனைக் கீழ் ஜாதிக்காரன் என்றும், இன்னொருவனை மேல் ஜாதிக்காரனாகவும் படைத்திருக்கிறான். இதற்குக் காரணம் ஆண்டவனின் முகத்திலே பிறந்தார்கள் சில பேர். அவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்றும்! தோளிலே பிறந்தார்கள் சிலபேர்கள், அவர்கள் அடுத்த ஜாதிக்காரர்கள் என்றும் தொடையிலே பிறந்தார்கள் சிலபேர். அவர்கள் அடுத்த ஜாதிக்காரர்கள் என்றும், காலிலே பிறந்தார்கள் சில பேர். அவர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்றும் ஆண்டவனையே குற்றம் சொல்லி ஆண்டவன் நம்மை இப்படியெல்லாம் தலையிலும், தோளிலும், தொடையிலும், காலிலும் பெற்றெடுத்திருக்கிறார்கள் என்று ஆண்டவனுக்கே நாம் களங்கம் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். அப்படியே அந்தக் கதை, அந்தப் புராணம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் கூட, நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அத்தி மரத்தைப் பார்த்திருப்பீர்கள். அந்த அத்தி மரத்தில் வேரிலும் காய் காய்க்கும்; கிளையிலும் காய் காய்க்கும். கொம்பிலும் காய் காய்க்கும்; உச்சியிலும் காய் காய்க்கும். அதைப்போலப் பலா மரத்தைப் பார்த்திருக்கிறோம்.

பலா மரத்தின் வேரிலும் காய் காய்க்கிறது; தண்டிலும் காய் காய்க்கிறது; கிளையிலும் காய் காய்க்கிறது. எல்லாக் காயும் பலாக் காய்தான். எல்லாக் காயும் அத்திக்காய்தான். கிளையிலே காய்த்தது புடலங்காய்; தண்டிலே காய்த்தது அவரைக்காய். வேரிலே காய்த்தது பாகற்காய் என்று யாரும் சொல்வதில்லை. பலா மரத்தில் காய்க்கின்ற எல்லாக் காயும் பலாக்காய் என்பதைப்போல; அத்தி மரத்திலே காய்க்கின்ற எல்லாக் காயும் அத்திக்காய் என்பதைப்போல ஆண்டவன் தன்னுடைய உடம்பிலே தோளிலும், தொடையிலும், காலிலும் பல பிரிவு மக்களைப் பெற்றிருக்கின்றான் என்பதை வாதத்திற்கு வைத்தாலும் கூட, எல்லோரும் ஆண்டவனின் படைப்புத்தான், எல்லோரும் மனிதர்கள்தான் என்கின்ற அந்த எண்ணம் உருவாக வேண்டும்; உதயமாக வேண்டும். அதற்கான பாலத்தைத்தான் நாம் கட்டிக்கொண்டிருக்கிறோம்.

### அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து கட்டி முடிக்க வேண்டிய பாலம்

அது நான்கு கோடி ரூபாய் செலவிலே கட்டப்படுகின்ற பாலம் அல்ல; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே ஆறு கோடி மக்களும் கட்ட வேண்டிய பாலம்; இந்தியாவைப் பொறுத்தவரையில் 96 கோடி மக்களும் கட்ட வேண்டிய பாலம். அந்தப் பாலத்தைக் கட்டி முடிப்போம். அதுவரையில் நம்முடைய பணி முடியப்போவதில்லை. அதுவரையில் நாம் வாழ்கிறோமோ இல்லையோ, நாம் வாழ்ந்து முடிந்த பிறகு நம்முடைய முயற்சியால் அந்தப் பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்கின்ற ஆசையை வெளியிட்டு இந்த இனிய விழாவில் சமுத்திரம்போல் குழுமியிருக்கின்ற இந்த வட்டாரத்துப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறுமுதல்வர் **கலைஞர்**அவர்கள் உரையாற்றினார்.

★ ★ ★

# யாருடைய கடமை?

**என்.எச்.எம்.ஷேக்தாவூத்**
தொழிலாளர் இணை ஆணையர் (நலம்), சென்னை - 6.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 24ன் படி அபாயகரமான தொழில்களில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் அமர்த்தக்கூடாது என்றும், பிரிவு 39(ஏ) வயதுக்கு ஒவ்வாத வேலைகளில் குழந்தைகளை வைக்கக் கூடாது என்றும், பிரிவு 39(எப்)ன் படி குழந்தைகளின் மானம் மற்றும் பொருளாதாரத் தீங்குகளிலிருந்து அவர்கள் தடுக்கப்பட வேண்டும் என்றும், பிரிவு 45ன் படி, 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.

1959ஆம் வருடம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க, அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் வழங்கப் பொதுத் தீர்மானம் நிறைவேற்றியது. 1974ல் குழந்தைகள் பற்றி தேசியக் கொள்கை நிர்ணயம் செய்யப்பட்டது. குழந்தைகளுக்கு 14 வயது வரை கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு உடல் நலம், உணவு, கல்வி அவர்களைப் பொருளாதார சமூகக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எத்தனை - எத்தனையோ சட்டங்கள், எத்தனை - எத்தனையோ திட்டங்கள். அன்று முதல் இன்று வரை நிறைவேற்றப்பட்டும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவில்லையே ஏன்?

அவர்களுக்கு அளிக்கப்படும் கொடுமைகள் மாறவில்லையே ஏன்?

தொழிற்சாலைகள் சட்டம், பீடி சுருட்டு தொழிலாளர் சட்டம், உணவு நிறுவன சட்டம், கடைகள் நிறுவனச் சட்டம், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், தோட்டத் தொழிலாளர் சட்டம் என்று அனைத்துச் சட்டங்களும், இறுதியாக 1986ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் நிறைவேற்றப்பட்டும், குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்தபாடு இல்லை. அவர்களுடைய அவல நிலை மறைந்த பாடும் இல்லையே ஏன்?

### தாய்மார்கள் குறை

குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார் சொல்லுகின்றனர் - "எங்களிடம் சொத்து, பத்து எதுவும் இல்லீங்க. 3 பொட்ட புள்ளைங்க. ஒரு பையன். எனக்கு 55 வயசாகுது. என் வீட்டுக்காரருக்கு 60 வயசாகுது. வீட்டுக்காரரால என்ன வேலை செய்ய முடியும்? குடித்து விட்டு படுத்துக் கிடக்கறாரு. நானோ ஒண்டிக்கட்டை! என்ன பண்ண முடியும்?".


"பொட்ட புள்ளைங்க படிச்சி என்ன கலெக்டரு, டாக்டரு வேலையா பாப்பாங்க? கடைசியாகத் தீப்பெட்டி ஆலைக்குப் போயிடுவாங்க. சின்ன வயசிலேயே வேலை செஞ்சாலும் தொழில் கத்துக்குவாங்க. அவங்க கலியாணத்துக்கு கொஞ்சம் சேமிச்சி வைக்கவேணாமா? அவங்க வேல செய்யலைன்னா ஒரு வேளை கஞ்சி கூட கிடைக்காது."

"தீப்பெட்டி ஆபிசுக்கு அனுப்பினா பொறுப்பா வருவாங்க. இல்லாட்டி போக்கிரியா போய் விடுவாங்க. படிப்பு தான் ஏறலை. வேலையாவது செய்யட்டுமே."

- தாய்மார்களே! சொல்லுவது எல்லாம் உண்மையே. நீங்கள் படிக்காததால் தான் தற்போது குச்சி அடுக்குகிறீர்கள். உங்க காலத்தில் படிக்க வசதி இல்லை. அதனால் படிக்கல. இப்பதான் எல்லா ஊர்லேயும் பள்ளி இருக்குதே. படிக்கக் கட்டணம் இல்லை, இலவச பஸ் பாஸ், இலவசப் புத்தகம், இலவசப் பகல் உணவு, 8வது படித்தால் திருமண நன்கொடை. 5 வயது வரையும் பிள்ளைகளை வேலை செய்ய அனுப்புவதில்லையே. பிள்ளைகளின் வருமானம் இல்லாமலே அதுவரை சமாளிக்கின்றீர்களே. 5 வயசுக்குப் பிறகு தான் பணக் கஷ்டமா?

ஏம்மா, பக்கத்து வீட்டு பாப்பா பள்ளிக்குப் போவுதே, அவங்களுக்குப் பணக் கஷ்டமில்லையா? உம் மாதிரிதானே அவங்களுக்கும் சொத்து, பத்து இல்லை. வீட்டுக்காரரு குடிக்கிறாரே அதை நிறுத்தினாலே மாசம் ரூ.300 மிச்சமாகுமே. கலெக்டரா, டாக்டரா போகவேண்டாம். அட்லீஸ்ட் கல்வி கிடைக்குதில்லே. அதன் குழந்தைக்கு அது சொல்லிக் கொடுக்குமே. அதற்குக் கண்ணை அளித்த நீ, அதனை நீயே குருடாக்கலாமா? கல்விக் கண் அளிக்க வேண்டாமா? எவ்வளவு அனாவசியச் செலவுகள். திருவிழா என்றும், பண்டிகை என்றும், சினிமா என்றும், டி.வி. என்றும், பீடி, சிகரெட், டீ, விருந்து ஆகியவற்றில் சிக்கனம் காட்டினாலே, சிரமம் ஏதம்மா உனக்கு?

குழந்தைக்குக் கல்வி இன்றைய முதலீடு அல்லவா? நாம் இருவர், நமக்கு இருவர் என இந்த அரசு ஆண்டாண்டு காலமாக விளம்பரம் செய்கிறதே, அதைக் கடைப்பிடித்தால் ஏனம்மா இந்தக் கஷ்டம்? பட்டு வேஷ்டியைக் கட்டிக்கிட்டுப் பகட்டா மினுக்கிக்கிட்டு வேலை செய்யாம



> **ம**னிதன் மறைந்துவிடலாம்; அவனை மக்கள் கூட மறந்துவிடலாம். ஆனால், அவன் உருவாக்கிய உணர்வுகள் என்றென்றும் பயன்படக்கூடிய வகையிலே அமைந்திட வேண்டும்!
>
> - கலைஞர்

திரிகின்றாரே உன் கணவர், அவரை வேலைக்கு அனுப்பினா, இந்தக் குழந்தைங்க வேலை செய்ய வேண்டியதில்லையே!"

### என்மேல் என்ன குறை?

பட்டாசு உரிமையாளர் கூறுகிறார், "நானா! குழந்தைகளை, வாங்க, வாங்கன்னு சொல்லி அழைக்கிறேன். அவங்க அப்பா, அம்மாதான் இங்கே வந்து கெஞ்சி, கூத்தாடி, அய்யா! அப்பான்னு! வேலை கேட்கிறாங்க. நாங்க யார் வந்து வேல செஞ்சாலும் கூலி கொடுக்கப் போறோம். நாங்க வேல கொடுக்கலைன்னா அந்தக் குடும்பம் தெருவில தான் நிக்கும். அல்லது வேறே வியாபாரம், விவசாயம் ஏதாச்சும் இருக்கா? டவுனுக்குப் போயி வேல செய்யவா போறாங்க?. நாங்களும் அங்கே இங்கே கடன் வாங்கிப் போட்டுத்தான் வேலை கொடுக்கிறோம். அப்படியிருந்தும், நீங்க எங்களைக் குறை சொல்றீங்களே. இனிமே எல்லாத்தையும் நிப்பாட்டிர்றோம். நீங்க சாப்பாடு கொடுப்பீர்களா? நாங்க வேலை கொடுக்கலைன்னா அந்த ஊரே சீரழிஞ்சிடும்".

"ஐயா, நீங்க் சொல்வது சரிதான். வேல கொடுக்கறது வாஸ்தவம் தான். நீங்களும் வேலை செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தறதில்லை. ஆனால் அந்தக் குழந்தைகள் பேரைப் பதிவேட்டிலே எழுதுகிறீர்களா? இல்லையே, அவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. இல்லை, பி.எப். இல்லை, லீவு சம்பளம் இல்லை, பென்ஷன் இல்லை, போனஸ் இல்லை, கிராசுவிட்டி இல்லை, ஓ.டி. இல்லை, அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்சக் கூலியையாவது கொடுக்கிறீர்களா? அதுவும் இல்லை. பாதி சம்பளம் தான். எப்ப வேணாலும் வேலையில் வைக்கலாம். எப்ப வேணுமென்றாலும் நிப்பாட்டிக்கலாம்.

ஏன்? என்று கேட்க யாருக்கும் நாதியில்லை. அவர்களுக்கு யூனியன் ஏதுமில்லை. உட்கார் என்றால் உட்காருவார்கள். நில் என்றால் நிப்பாங்க. "வைச்சா குடுமி, செறிச்சா மொட்டை". ஐயோ! பாவம் ஆடு நனையுதேன்று ஓநாய் அழுததாம். அந்தக் கதை தான், உங்க கதை. உங்க குழந்தை குட்டிகளைப் பள்ளிக்கு அனுப்பாம, தீப்பெட்டி ஆலைக்கு அனுப்பினீங்களா? உங்களுக்கு ஒரு நியாயம், ஊராருக்கு ஒரு நியாயமா?. நீங்க நியாயவாதி என்றால் எல்லாக் குழந்தைகள் பேரையும் பதிவேட்டிலே எழுதுவது தானே? பதிவேட்டிலே எழுதுவதில்லை. அவர்களுக்கு எந்த உரிமையும், சலுகையும் கொடுப்பதில்லை. அப்படியிருக்கையில், நீங்க அவர்களுக்காக எப்படிப் பரிந்துரைக்க முடியும்? குழந்தைகள் வேலை செய்யாவிடில், அந்த வேலையைப் பெரியவர்களுக்கு அளிப்பீர்கள் இல்லையா? அந்த நன்மையை நீங்க செய்ய வேண்டாமா?"

### வழக்கும் சட்டமும்

தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் ஆய்வர் கூறுகிறார்.

"எங்களுக்கு எல்லா சட்டமும் ஒண்ணுதான். எல்லா சட்டத்திலும் கேஸ் போடுவது ஈஸியாக இருக்கும். குழந்தைத் தொழிலாளர் பற்றிக் கேஸ் போடுவதுதான் ரொம்பக் கஷ்டமாக இருக்கு. அவங்க பெயர் எந்தப் பதிவேட்டிலும் இருப்பதில்லை. அவர்களுக்கு எந்த ரெக்கார்டும் இருப்பதில்லை. குழந்தைகளின் வாக்குமூலம் கேட்டால் முதலாளிக்குப் பயந்து ஒன்றும் சொல்லமாட்டோம் என்கிறார்கள். சில பேர் அழ ஆரம்பித்துவிடுகிறார்கள். சில பேர் ஓட ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்கள் பின்னால் ஓடி துரத்திப் பிடிச்சி ஸ்டேட்மெண்ட் வாங்கவா முடியும்? பேரு கேட்டா பேரு சொல்லுறதில்ல. வயசு கேட்டா வயசு சொல்லுறது இல்லை. பிறந்த நாள் சர்டிபிகேட்டும் வைக்கிறதில்லை. எப்படி எங்களுக்கு வயசு அறிய முடியும்? முதலாளி சொல்லுறதைக் கேட்க வேண்டியுள்ளது. குழந்தைக்குப் படிக்க வேற தெரியாது. முதலாளிங்க, குழந்தைங்க பதில் சொல்றதுக்கு முன்னாலேயே பதில் சொல்லிடறாங்க. அப்புறம் அந்தக் குழந்தையை வேலைக்கு வச்சுக் கொள்வதில்லை.

மேலும் முதலாளி சொல்றாங்க : "குழந்தைங்க அவங்களோட அம்மா, அப்பா கூட துணைக்கு வருவாங்க. நாங்க எந்த வேலையையும் அவங்களை செய்யச் சொல்லுவதில்லை. நாங்க எந்த சம்பளமும் எதுவும் கொடுக்கறதில்லை. அவங்க யாரும் எங்களுடைய தொழிலாளியே இல்லை. அவங்களை வேலைக்கு வச்சிக்கிட்டு அபராதம் கட்டணும்னு என்ன தலையெழுத்தா? நீங்க, குழந்தையோட அப்பா, அம்மா கிட்டேயே கேளுங்க. குழந்தையின் அப்பா, அம்மாவும் அதனை எதிர்க்கிறாங்க.

குழந்தையை மிரட்டி ஸ்டேட்மெண்ட் வாங்கினாலும் கோர்ட்டிலே கேஸ் ஜெயிக்கிறதில்லை. வயதை நிரூபிக்க எங்களுடன் ஆய்விற்கு டாக்டர் வருவதில்லை. டாக்டரிடமும் குழந்தையை உடனே எங்களால் கூட்டிப் போக முடிவதில்லை. உரிமையாளரும் டாக்டரிடம் எங்களுடன் அனுப்ப மாட்டேங்கறாங்க. வந்தா கூட்டிக் கொண்டு போங்க என்கிறார்கள். குழந்தை வரமாட்டேங்குது. குழந்தை வந்தாலும் டாக்டர் இருப்பதில்லை. அந்தா, இந்தா என்று டாக்டரிடம் 14 வயதுக்குள் என்று சர்டிபிகேட் வாங்கினாலும், உரிமையாளர்கள் வேறு அரசாங்க டாக்டரிடம் 14 வயதுக்கு மேல் என்று சான்று வாங்கி அனுப்பி விடுகிறார்கள். கேஸ் நடக்கும்போது குழந்தை அதில் வேலை செய்வதில்லை. குழந்தையை சாட்சியாகக் கொண்டுசெல்ல முடியல. குழந்தையை சாட்சியாக வைக்கவில்லை என்றால் கேஸ் தள்ளுபடி ஆயிடுது. சரி, டாக்டரும் சாட்சி சொல்லும்போது ஊகத்தின் அடிப்படையில் சொல்கிறார். கூடவோ, குறையவோ 1,2 வருடம் இருக்கலாம் என்றும் கூறிவிடுகிறார். அந்த விஷயத்திலும் கேஸ் தள்ளுபடி ஆகிறது.

அபராதம் ஜாஸ்தி என்பதால் எல்லோரும் எதிர்த்து வாதாடுகிறார்கள். தோத்தா டிபார்ட்மெண்ட்டிலே ஆக்ஷன் எடுக்கிறார்கள். அங்கு வேலைப் பார்க்கும் சக தொழிலாளிகள் ஸ்டேட்மெண்ட் எதுவும் கொடுக்க மாட்டேங்கறாங்க. மத்த கேஸ்ல ரிக்கார்டு உண்டு. அதனால் கேஸை ஈஸியாக ஜெயிக்கலாம். இதுலே வயதை நிருபிக்கிறது ரொம்ப கஷ்டம். சட்டத்தை மாற்றி, அபராதத்தைக் குறைத்தாலே ஒழிய கேஸ் ஜெயிக்கிறது ரொம்ப கஷ்டம். எங்களுக்கு யாரும் ஒத்துழைக்கிறதில்லை. முதலாளி, குழந்தைத் தொழிலாளர், பெற்றோர், ஊர் ஜனங்கள், சக தொழிலாளி யாரும் ஸ்டேட்மெண்ட் கொடுக்க முன் வருவதில்லை."

சரிங்க. இன்ஸ்பெக்டர் சொல்றது எல்லாம் சரிதான். கொலை நடக்குது, திருட்டு நடக்குது, அதுக்கெல்லாம் சாட்சியை வைத்துக்கொண்டா திருடுகிறார்கள். கொலை செய்கிறார்கள், அதுக்கெல்லாம் கோர்ட்டிலே நிருபித்து தண்டனை வாங்கிக் கொடுக்கறதில்லையா? உங்க ஏரியாவிலே எத்தனைக் குழந்தைத் தொழிலாளிங்க வேலை செய்யறாங்க? எத்தனை கேஸ் போட்டிருக்கீங்க? எத்தனை கேஸ் ஜெயிச்சிருக்கு? எத்தனை கேஸ் தோத்திருக்கு? ஆயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளி வேலை செய்ற இடத்திலே 5,10-ன்னு கேஸ் போடுகிறார்கள். அதில் 1,2

ஜெயிக்குது. 1,2 தோக்குது. தோக்குறதாலே கேஸ் போடாம இருந்துற முடியுமா! திருட்டுக்குற்றம் தோக்கறதாலே திருடனைப் பிடிக்கக் கூடாது என்கிறீர்கள். கொலைக் கேசு தோக்குது என்பதால் கொலைகாரனைப் பிடிக்கக் கூடாது என்கிறீர்கள்.

### நினைக்க வேண்டுமே?

இன்ஸ்பெக்டர் நினைச்சா, குழந்தைத் தொழிலாளியின் பிறந்த ஊர், அட்ரஸ், பள்ளி அட்ரஸ், பெற்றோர் அட்ரஸ், வாங்கி சரியான பிறந்த தேதியைப் பெற முடியாதா? தொழிற்சாலை உரிமையாளரைத் தன் பிடிக்குள் கொண்டு வர முடியாதா? மற்ற சட்டங்கள் மீறலுக்கு வழக்குத் தொடர்ந்து, அதை வைத்து இதனை அமல்படுத்த முடியாதா? கேஸ் தோத்தாலும், ஜெயித்தாலும், கேஸ் நடத்த உரிமையாளருக்கு ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவாகும். அதுக்குப் பயந்து குழந்தைகளை வேலைக்கு வைக்க மாட்டாங்களே. அபராதம் குறைவாக இருந்தபோது கூட்டு என்றீர்கள். கூட்டினால் குறைக்கச் சொல்கிறீர்கள். என்ன நியாயம் உங்கள் வாதம்? கேஸ் ஜாஸ்தியா போடாமலே கேஸ் தோக்கும். தோக்கும் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் நினைச்சா எதையும் சாதிக்கலாம். இன்ஸ்பெக்டர் நினைக்க வேண்டும். அதுதான் முக்கியம். நீங்க அடிக்கடி ஒழுங்கா ஆய்வு செய்தாலே, பாதி முதலாளிகள் பயந்து போய் குழந்தைகளை வேலையிலிருந்து நிறுத்தி விடுவார்கள்.

தொழிற்சங்கத் தலைவர் கூறுகிறார், "எங்களுடைய சங்க உறுப்பினர்கள் கூட சங்கத்திற்கு சந்தா தருவதில்லை. குழந்தைகள்கிட்டேயா நாங்க சந்தா வாங்க முடியும்! எங்களுக்கு அவங்களால் என்ன நன்மை? குழந்தைகளை வைத்திருக்கக் கூடாது. நியாயம் தான். ஆனால் வறுமை. அதனால் வேலை செய்ய வேண்டிய நிலை. என்ன செய்ய முடியும்? குழந்தைகள் எந்தக் கேஸ்களுக்கும் வருவதில்லை. அவங்க பெற்றோரும் வருவதில்லை. அதனால் அவர்களுக்காக எந்தக்



கேஸூம் நடத்த முடியறதில்லை. குழந்தை வேலை செய்வது பற்றி மற்ற தொழிலாளர்களுக்கு அக்கறை இல்லை. நாங்க தொழிலாளர்களுக்குப் பொதுக் கோரிக்கைதான் வைக்க முடியும். குழந்தைகளுக்கு என்று தனியாக எதுவும் செய்ய முடியாது. சமுதாயமும் ஆதரவாக இல்லை. நாங்க என்ன செய்ய முடியும்?"

தலைவர் ஐயா, நீங்க சொல்வது எல்லாம் சரிதான். குழந்தைகளால் பிரயோசனம் இல்ல. சரிதான். பிரயோசனம் இருந்தால் தான் பாடுபடுவீர்களா? தொழிலாளர்களுக்கு வேலை கொடு, வேலை கொடு, என்று வாய் கிழியக் கத்துகிறீர்கள். பெரியவங்க செய்யற வேலையைக் குழந்தைங்க செய்றாங்க. குழந்தைத் தொழிலாளிங்க இல்லையென்றால், அந்த வேலை அனைத்தையும் பெரியவங்க செய்வாங்க. பெரியவங்க வேலை இல்லாமைக்குக் காரணம் இந்தக் குழந்தைத் தொழிலாளிதான். அவங்களுக்குக் குறைந்த கூலி, அதிக வேலை. அதனால் குழந்தையை வச்சுக்கிறாங்க. அந்தக் குழந்தைத் தொழிலாளி வேலை செய்யற இடத்திலே பெரியவங்க வேலை செய்தா, உங்க சங்க உறுப்பினர் எவ்வளவு கூடும். எண்ணிப் பாருங்க. பெரியவங்களுக்கு இ.எஸ்.ஐ., இ.பி.எப்., உண்டு. போனஸ் உண்டு. ஓ.டி.உண்டு. லீவு சம்பளம் உண்டு. முழு சம்பளம் உண்டு. அப்படியானால் அவர்களது ஊதியம் எவ்வளவு உயருது. அதனால் வறுமை எப்படி நீங்குது! இது உங்களுக்கு தெரியாததில்லை தலைவரே. உங்க சங்கத்திலே தீர்மானமா போடுங்க. குழந்தைத் தொழிலாளியை நீக்கப் போராடுங்க. உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

### படிக்காத குழந்தைகள்

பள்ளி ஆசிரியர் கூறுகிறார், "இங்கே நிறையப் பள்ளிக்கூடங்கள் இருக்கு. குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. பள்ளியில் சேராத குழந்தைகளை, நின்ற, குழந்தைகளை நாங்க கண்டுபிடித்துச் சேர்க்கவா முடியும்? அல்லது படிக்க விரும்பாத குழந்தைகளை நாங்க படிக்க கட்டாயப்படுத்தவா முடியும்? மேலும் மத்த மாணவர்கள் எல்லாம் படிக்கும்போது இந்தக் குழந்தைகள் ஏன் படிக்கக் கூடாது? எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி, சீருடை, புத்தகம், மதிய உணவு எல்லாம் தான் கொடுக்கிறோம். இருந்தாலும், என்ன செய்ய முடியும்? பெற்றோர் தான் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கணும்" பிள்ளைகளைக் கண்டித்து படிக்க வைச்சா அடிக்கிறார் என்கிறார்கள். கண்டிக்கலைன்னா, சரியா படிப்பு சொல்லிக் கொடுக்கறதில்லை என்கிறார்கள். கண்டிக்காத, படிக்காத பிள்ளைங்க பள்ளிக்கு வருவதில்லை. நின்றுவிடுகிறார்கள். பள்ளியிலிருந்து நின்னுகிட்டா நாங்க என்ன செய்யறது? படிக்காத குழந்தைகளை வேலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

அது சரிதான். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லி அப்பா, அம்மாவிற்கு அடுத்த ஸ்தானத்திலே ஆசிரியர்களை வைத்துள்ளார்கள். அந்தக் காலத்திலே, ஆசிரியருக்கும், மாணவனுக்கும் அதிக நெருக்கம், உறவு இருந்தது. ஆசிரியருக்குப் பிள்ளைகளைப் பத்தித் தெரியும். அவர்கள் அப்பா, அம்மா, அவர்களின் தொழில், வருமானம், கஷ்டம் எல்லாம் தெரியும். ஆசிரியர் கவனம் எடுத்துச் சொல்லிக் கொடுப்பார். பையன் பள்ளிக்கு வரலைன்னா, ஏன் பள்ளிக்கு வரலைன்னு விசாரிப்பார். பள்ளிக்கு ஏன் குழந்தையை அனுப்பவில்லை என்று பெற்றோரிடம் வந்து விசாரிப்பார். ஏதாவது கஷ்டம் என்றால் அதற்கு வழி சொல்லுவார். எந்தெந்தக் குழந்தைக்கு எப்படி, எப்படி சொல்லிக் கொடுக்கணும். எப்படி எப்படி நடத்தனும் என்று அந்தக் காலத்திலே ஆசிரியர்கள் நல்லா தெரிந்து வைத்திருந்தார்கள். இந்தக் காலத்திலே பையன் பள்ளிக்கு வந்தாலும், வரவில்லை என்றாலும் ஆசிரியர்கள் கவலைப்படுதில்லை. ஏன்? எதற்கு என்றும் கேட்பதில்லை. கல்வி அளிப்பதில் கசப்பு, கடுமை காட்டப்படுகிறது. எனவே பையனுக்கு அது பிடிக்காததால் பள்ளிக் கூடத்தை விட்டு நின்றுவிடுகிறான். பள்ளியில் சேரும் அனைத்துக் குழந்தைகளும் படிக்க வேண்டும் என்று தான் சேருகிறார்கள். இடையில் நின்றுவிடுகிறார்கள் என்றால் எதற்கு? காரணம், கசப்பான கல்வி, கடுமையான ஆசிரியர், தன்மையான, இனிமையான ஆசிரியர்கள் இருந்து ஆரோக்கியமான சூழ்நிலை இருந்தால் எந்தப் பையன் வராமல் இருப்பான்? பையனை அறிவாளி ஆக்குவதும், அறிவிலி ஆக்குவதும் ஆசிரியர் கையிலே. பல்லக்கில் ஏற்றுவதும், பாதாளத்தில் தள்ளுவதும் ஆசிரியரே!

### மக்கள் கருத்து

மிஸ்டர் பொது ஜனம் கூறுகிறார். "குழந்தைத் தொழிலாளர் வேலைநீக்கமாம். ஒழிப்பாம். அதற்காக ஊர்வலமாம். போக்கத்த மக்களின் வேலையற்ற வேலை. ஏதோ வறுமையின் கொடுமை. அதனால் குழந்தை வேலை செய்யறான். வறுமையை நீக்க வழி வகை இல்லை. அவனவன் ஊர்வலம் நடத்துறதைப் பொழப்பாக்கிட்டானுங்க".

அதனைக் கூறும்போது பையிலிருந்து, பீடியை எடுத்து வாயில் வைத்து தீப்பெட்டியிலிருந்து குச்சி எடுத்து, அதனை ஒரு மாதிரியாக உரசிப் பற்ற வைத்து ஒரு தம்

இழுக்கின்றாரே! என்ன அழகு! எத்தனை அருமை! அந்த பீடி மடித்த பிஞ்சு விரல் எவ் விரல்கள் என்பதை அவர் உணர்வாரா? அந்த பீடித் தூளில் நச்சுத் தன்மை அக்குழந்தையின் உடலை எந்த அளவிற்குப் பாதித்தது என்பதை அவர் உணர்வாரா. ஒருவரின் கஷ்டத்தில் மற்றவருக்கு மகிழ்ச்சியா?

"என் வீட்டுக் குழந்தை எவ்வளவு அழகாகப் பட்டாசு கொளுத்துகிறது!" என்று ஆனந்தப்படுகிறார் அதே பொதுஜனம். இந்தக் குழந்தை ஆனந்தப்பட அந்தக் குழந்தை என்ன பாபம் செய்தது. இந்தக் குழந்தைக்குத் தெரியுமா? அந்தக் குழந்தை பட்ட பாடு. கையிலே, மூக்கிலே, முகத்திலே வெடி மருந்து. நெஞ்சு என்று கூற முடியாத எலும்புக் கூடு. இவர்களை மகிழ்விக்க, அந்தக் குழந்தை தன் மகிழ்ச்சியை இழக்கவேண்டுமா? இவர்களை சிரிக்க வைக்க அவர்கள் தம் வாழ்வைச் சீரழிக்க வேண்டுமா?

### அவர் அறிவாரா?

"என்ன அழகாக இருக்கின்றது இந்தத் தோடு! அசல் வைரம் மாதிரியே இருக்கின்றதே!" என்று செயற்கை வைரத் தோட்டை தன் மகளுக்குப் போட்டு பூரிப்படைகின்றார் மிஸ்டர் பொது ஜனம். இந்தச் செயற்கை வைரத்திற்கு ஒளி கொடுக்க முயன்று தன் விழி ஒளியை இழந்த கண்கள் எத்தனை என்பதை அறிவாரா இவர்! 12 வயதினிலே அதனைச் செய்த சிறுவன் கண்ணொளி இழந்துவிட்டான் என்பதை அறிவாரா? ஒளிகொடுக்க ஒளியை இழந்த அச்சிறுவன் யாரென்று தெரியுமா இவருக்கு!

படுக்கையில் எழுந்ததிலிருந்து மீண்டும் படுக்கும் வரை, விடியலிருந்து இரவு வரை, நாம் உண்டு, உடுத்திட, உறங்கும் ஆயிரக்கணக்கான பொருள்களில் எத்தனைக் குழந்தைகளின் வியர்வை படிந்துள்ளது என்பதை நினைக்கும் அக்காலம், எத்தனைக் குழந்தைகளின் வாழ்வைப் பாழாக்கியுள்ளது என்பதை நாம் எண்ணும் அக்காலம் குழந்தைத் தொழிலாளியின் நற்காலம்.

சமூக நல ஊழியர் கூறுகிறார். "கொலை, களவு, கற்பழித்தல், சாராயம் குடித்தல், விபச்சாரம், சூது ஆகிய எல்லாத்தையும் சமுதாயம் தப்பா நினைக்குது. கொலை, திருடுதல், சாராயம் குடித்தல், சூதாட்டம் ஆகிய தீமைகளில் யாராவது ஒரு வகையினருக்குப் பாதிப்பு இருக்கு. பொருளைத் திருடக் கொடுத்தவன் காவல் நிலையத்தில் புகார் அளிக்கிறான். கொலை செய்யப்பட்டவனின் குடும்பம் ஆத்திரம் கொண்டு அளிக்கின்றனர் புகாரை அல்லது பழிவாங்க துடிக்கின்றார். சாராயத்தின் கொடுமை இருதயத்தில் தெரிந்து விடுகின்றது. விபச்சாரத்தின் விளைவு உடல் உறுப்புகளை விபரீதமாக்கிவிடுகின்றது. சூதாட்டத்தால் பணத்தை இழந்து தெருவில் நிற்கிறது குடும்பம். ஆனால் குழந்தைத் தொழிலாளி என்ற சமூகக் கொடுமையின் விளைவு, அவன் பெரியவன் ஆன பிறகல்லவா தெரிகின்றது. ஆனால் குழந்தைத் தொழிலாளர் என்கிற முறையில் உடன் பாதிப்பு யாருக்கும் கிடையாது. பாதிப்பு பின்னால் தான் தெரியவருகிறது. படிக்காத குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, விளைவுகள் பற்றி பின்னால் தான் அவர்களால் உணரமுடியும். அதனால் அதை யாரும் ஒரு சமுதாய த் தீமையாகக் கருதுவதில்லை. மாறாக, வறுமையை நீக்கும் கருவியாகக் கருதுகிறார்கள். சமுதாயமே அதை எதிர்க்காததினாலே நாங்களும் அதைத் தட்டிக் கேட்க முடியவில்லை.

ஆம், வழி பிறக்கும். அவரவர் தம் கடமையைச் செய்தால் புற்றீசல்போல் தொண்டு நிறுவனங்கள் இருந்தும், பணத்திற்காகவே இயங்கும் தொண்டு நிறுவனங்கள்தான் அதிகம் உள்ளன. குற்றம் குறை கண்டுபிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டும் தொண்டு நிறுவனங்கள் குறைகளை நீக்குவதில்அதிக அக்கறை காட்டுவதில்லை. நாள் ஒன்றுக்கு ஒரு குழந்தைத் தொழிலாளி வீதம் பள்ளியில் சேர்க்க இந்தத் தொண்டு நிறுவனங்கள் உறுதி எடுத்திருந்தால், இந்தக் குழந்தைத் தொழிலாளி என்ற அரக்கனை ஓரளவு அடக்கியிருக்கலாம். குழந்தையை சந்தித்து, பெற்றோரை ச் சந்தித்து, பிரச்சினையை விளக்கி, தீமையை எடுத்துக் காட்டி குழந்தைத் தொழிலாளியை வேலையை நீக்க எத்தனை த் தொண்டு நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. சர்வே எடுப்பதும், விழிப்புணர்ச்சி முகாம் நடத்தினால் மட்டும் போதுமா? பணத்திற்காக மட்டுமல்லாமல் குழந்தைத் தொழிலாளர் நிலையை ஒழிக்கப்பட வேண்டும் எனத் தொண்டு நிறுவனங்கள் உறுதி கொண்டால், அவர்களால் சாதிக்க முடியாததா?

வறுமையைப் போக்குவது எப்போது? குழந்தைகளுக்குக் கல்வியைக் கட்டாயமாக்குவது எப்போது? குழந்தைத் தொழிலாளர்களை அகற்றுவது எப்போது? யாருடைய கடமை இது?

அமெரிக்க அதிபர் ஜான்கென்னடி கூறியதுபோல், "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட நீ நாட்டுக்கு என்ன செய்தாய்" என்பது போன்று, குழந்தைத் தொழிலாளர் நிலை தவறு என்பதும் அகற்றப்பட வேண்டியது என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட உண்மை.

> **சிலருடைய தயாள குணத்தினால் மட்டுமே ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கிவிடமுடியாது!**
>
> - அறிஞர் அண்ணா

### நல்விதை

வறுமையைக் காரணம் காட்டி வாழாமல் இருந்துவிடுவதும், அறியாமை என்ற காரணத்தைக் காட்டி, செயல் இழந்து நிற்பதும் சட்டத்தை அமலாக்கம் செய்ய முடியவில்லை என்று கூறி அயர்ந்துவிடுவதும், சமுதாயத்திற்கு ஏற்பட்ட இந்தக் கொடிய வியாதியைத் தற்போது கண்டுகொள்ளாமல் இருப்பதும், தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும். நல் வித்தை யாரும் அழிப்போமா? இவ்வித்து இப்போது அழிந்துவிட்டால், எப்பயிர் எப்போது முளைக்கும்?

பெற்றோர்கள் தங்களுக்குத் தற்போது ஏற்படும் இன்றைய இழப்பை விட பிற்காலத்தில் படிக்காத குழந்தைகளுக்கு ஏற்படும் தீமையே அதிகம் என்பதை அறிய வேண்டும். பட்டாசு, தீப்பெட்டி, பீடி மற்றும் அபாயகரமான தொழில் உரிமையாளர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதால் ஏற்படும் தற்போதைய இலாபத்தினை விட குழந்தைகளுக்குக் கல்வி அளிக்காத நிலையால் ஏற்படும் அறிவற்ற வருங்காலத் தொழிலாளர் நிலையே அதிக பாதிப்பு என்பதை உணர வேண்டும். தங்கள் குழந்தைகளுக்கு ஒரு நியதி. பிற குழந்தைகளுக்கு ஒரு நியதியா என்பதும், பிற குழந்தைகளும் தங்கள் குழந்தைகளைப் போல் பிறப்பால் அவர்கள் ஒன்று என்றும், வேறுபாடு இல்லை என்பதையும் அவர்கள் உணர வேண்டும். தங்களுக்குள் ஏற்படும் சிறிய இலாபத்தை விட்டு இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படும் பெரிய வியாதியை நினைத்து அனைவரும் ஒன்றுபட்டு, பெருகிவரும் வியாதியினை நீக்கப் பாடுபட வேண்டும்.

***"வறுமை போக்குவோம்!***

***கல்வியைக் கட்டாயமாக்குவோம்!!***

***இன்றைய குழந்தை நாளைய மன்னர்!!!***

***இன்றைய தியாகம் நாளைய பலன்!!!!***

★ ★ ★

# உணவு முறைகளும் கண் பாதுகாப்பும்

நமது நாட்டைப் பொறுத்த மட்டில் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஏராளமான நோய்களுக்குத் தவறான உணவு முறைகளும் பழக்க வழக்கங்களுமே காரணமாக உள்ளன. நோய்க்கான, காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அறுபது சதவிகித நோய்களுக்குச் சத்துணவுக் குறைவே காரணம் எனப்புலப்படுகிறது. நோய் வந்த பிறகு அவதிப்படுவதைக் காட்டிலும், நோய் உருவாகாத நிலையினை ஏற்படுத்திக் கொள்ளுவதே நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கும்.

இந்தியாவில் சுமார் 90 இலட்சம் இந்தியர்கள் பார்வையற்றவர்களாக விளங்குகின்றனர். இதில் 60 இட்சம் பேர் சரியான சத்துணவு கிடைத்திருந்தால் பார்வையை இழந்திருக்கமாட்டார்கள். சரிவிகித உணவும், தகுந்த சிகிச்சையும் கிடைத்தால் கண் பார்வையைக் காப்பாற்றலாம்.

உயிரைப் பேணுவது உணவுதான் என்பதாலேயே, "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என மணிமேகலை காவியம் படைத்த சீத்தலைச் சாத்தனார் பொருட் செறிவுடன் பாடியுள்ளார்.

நமது உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்பாகிய கண்களும், அதன் பார்வைத் திறனும் நல்ல உணவு முறைகளைப் பொறுத்து அமைகின்றது.

குழந்தைப் பருவத்திலேயே உணவில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஒரு குழந்தை கருவிலே உருவாகும்பொழுதே தாய் சரியான உணவு முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். சத்தில்லாத தாய்ப்பாலை உண்ணும் குழந்தையின் கண்களும் பாதிக்கப்படும்.

நல்ல உணவு முறை என்பது மாவுச் சத்து (Carbohydrate), புரதச் சத்து (Protein), எண்ணெய்ச் சத்து (Fat), உயிர்ச்சத்து (Vitamins) மற்றும் தாதுப்பொருட்கள் (Minerals) ஆகியவற்றைக் குறிப்பிட்ட விகிதத்தில் உள்ளடக்கியது. கண்ணின் முழு வளர்ச்சிக்கும், கூர்மையான பார்வைக்கும் இந்தச் சரிவிகித உணவு முறை அவசியமானதாகும்.

மாவுச்சத்தானது அரிசி, கோதுமை, கேழ்வரகு, மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு போன்ற மலிவான உணவுகளில் உள்ளது. தமிழ்நாட்டில் அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளோம். தீட்டப்படாத அல்லது கைக்குத்தல் அரிசியை உண்ணுவதே நலமாகும். தினம் ஒரு முறையாவது கோதுமை உணவை உட்கொள்ள வேண்டும். புரதச் சத்தானது முட்டை, பால், பால் பண்டங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும். வசதி குறைந்தவர்கள் வேர்க்கடலை, பால், கேழ்வரகுக் கஞ்சி ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

உடலில் நோய்கள் தோன்றாமல் தடுக்கவும் நோய் தோன்றினாலும் சமாளித்து அகற்றவும் கூடிய ஆற்றலைப் பெற்றவை வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச்சத்துக்கள் ஆகும். இந்த உயிர்ச்சத்துக்களுக்கு Vitamins என்று ஆங்கிலப் பெயர் அளித்துள்ளனர்.

வைட்டமின் 'ஏ' எனப்படும் உயிர்ச் சத்தானது கண்பார்வைக்கு மிகவும் அவசியமானதாகும். தோலின் வளர்ச்சிக்கும், மெருகிற்கும் தேவையானதாகும். மேலும் பற்கள் பலம் பெறும். விஷக் (நச்சுக்) கிருமிகளைக் கொல்லக்கூடிய எதிர்ப்புச் சக்தியானது (Resistance) பெருகும். வைட்டமின் 'ஏ' சத்து உணவில் குறைந்தால் தாய்ப்பாலிலும் இச்சத்தானது குறைந்து விடும். வைட்டமின் ஏ பற்றாக்குறையினால் ஆண்டுதோறும் 25,000 குழந்தைகள் கண்பார்வையை இழக்கின்றனர். சுமார் 30 இலட்சம் குழந்தைகள் மாலைக்கண் போன்ற நோயினால் பாதிக்கப் படுகின்றனர்.

சூரிய ஒளியுள்ள வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தானது மரம், செடி போன்ற தாவர இனங்களால் கிரகித்துக் கொள்ளப்படுகிறது. ஆகையால் மஞ்சள் நிற, பச்சை நிற, காய்கள் பழவகைகளை மிகுதியாக உணவில் அன்றாடம் சேர்த்துக் கொண்டால், 'வைட்டமின் ஏ' பெறலாம். முருங்கைக் கீரை, தண்டுக் கீரை, சிறு கீரை, முளைக்கீரை போன்ற கீரை வகைகளில் வைட்டமின் ஏ,பி,சி போன்ற உயிர்ச்சத்துக்கள் பெரிய அளவில் உள்ளன. பச்சைக் கீரைகளில் கரோடின் என்ற பொருள் மிகுதியாக உள்ளது. இந்தப் பொருளே 'ஏ' உயிர்ச்சத்தாக மாற்றப்பட்டு ஈரலில் சேர்த்து வைக்கப்படுகிறது.

புல் பூண்டுகளையும், கீரைகளையும் மிகுதியாக உண்ணும் ஆடு, மாடு போன்ற பிராணிகளின் பாலிலும் வைட்டமின் 'ஏ' உயிர்ச்சத்து மிகுதியாக உள்ளது. கேரட், தக்காளி போன்ற உணவு வகைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஏரி, குளம், கடல் ஆகியவற்றில் உள்ள மீன்கள் பாசி மற்றும் நீர்ப் பூண்டுகளை உண்பதால் மீன்களிலும் வைட்டமின் 'ஏ' சத்து உள்ளது. ஆரஞ்சு, மாம்பழம், பப்பாளி போன்ற பழவகைகளிலும் வைட்டமின் 'ஏ' சத்து நிரம்ப உள்ளது. பப்பாளி, கொய்யா, நெல்லிக்காய், மஞ்சள் வாழை, நாவல் பழம், இலந்தம் பழம் போன்ற அனைத்தும் விலை குறைவாகவும் அந்தந்தக் காலங்களில் மிகுதியாகக் கிடைக்கக்கூடியதும் ஆகும். இப்பழங்களை உண்டு கண்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் பல உட் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ள வைட்டமின் 'பி' கண்ணுக்கு இன்றியமையாததாகும். குறிப்பாக வைட்டமின் பி2 குறைந்தால் கண்ணினுடைய உணர்வு நரம்பு பாதிக்கப்படும். ஆதலால் பி2 வைட்டமின் அதிகமாக உள்ள தீட்டப்படாத கைக்குத்தல் அரிசி, வேர்க்கடலை, கொட்டை வகைகள் (Nuts) பருப்பு வகைகள் உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### *செயற்கை முறையில் உயிர்ச் சத்து தயாரித்தல்*

கம்பு போன்ற எளிதில் கிடைக்கக் கூடிய தானியத்தை ஈரத்துணியில் முடிந்து, ஈரம் உலராமல் வைத்திருந்தால் இரண்டு நாட்கள் முளை தோன்றி விடும். இந்த முளைக் கம்பில் வைட்டமின் 'ஏ' மற்றும் பல உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இதை வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து உட்கொள்ளலாம்.

உயிர்ச்சத்து உள்ள பொருட்களை அதிகமாக வேகவைக்காது, அரை வேக்காடகவோ அல்லது பச்சையாகவோ உண்பது நல்லது. உயிர்ச்சத்துகள் மட்டுமின்றி இரும்பு (Iron) துத்தநாகம் (Zinc) போன்ற சத்துகள் குறைந்தால் கண் வெளிர் நிறமுற்று ஒளியிழந்து காணப்படும். ஆகையால் உணவில் வெல்லம், பருப்பு வகைகள், கொட்டை வகைகளைச் சேர்க்க வேண்டும்.

**மரு.க. ஆனந்த கண்ணன்,** இயக்குநர்
**மரு.க. கண்மணி**
அரசு கண் மருத்துவமனை,
சென்னை

சத்துணவு என்றவுடன் அது ஏதோ பொருளாதார வசதி படைத்தவர்களால் மட்டுமே முடியும் என்றும், சமுதாயத்தில் மேல்தட்டில் உள்ளவர்களாலும் நகரத்தில் வாழ்பவர்களாலும் மட்டுமே இயலும் என்றும் எண்ணி விடக்கூடாது. நமக்கு வேண்டியது சத்துணவுத் தொடர்பான விஞ்ஞான அறிவும் அனுபவ அறிவும் தான். உண்ணப்படுகின்ற உணவு உடலுக்கு நல்ல வளர்ச்சியையும், கண்களுக்கு நல்ல பார்வையையும் கொடுக்க வேண்டும். விஞ்ஞானத்தினைக் கொண்டும், அனுபவ அறிவினைப் பெற்றும் நமது உணவு முறைகளை உண்டாக்கிப் பழக்கப்படுத்திக் கொண்டால் நாம் நமது உடலையும், கண்களையும் செவ்வனே பேணிப் பாதுகாக்கலாம்.

இறைச்சி போன்ற விலையுயர்ந்த அசைவ உணவிலும், அன்னாசிப்பழம், ஆப்பிள் போன்ற விலையுயர்ந்த பழங்களில்தான் உயிர்ச்சத்து உள்ளது எனக்கருதக்கூடாது. கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய அனைத்துக் காய்கறிகளிலும், பழ வகைகளிலும் மற்ற சைவ உணவு வகைகளிலும், அனைத்துச் சத்துக்களும் உள்ளன.

ஆகையால், "கனிகளை உண்டு பிணிகளை விலக்குவோம்", "பச்சைக் காய்கறிகளை உண்டு கண்களைப் பேணுவோம்", "உண்டாலும் உறுதிப்பட உண்ணுவோம்" போன்ற பொன் மொழிகளை மனதிற் கொண்டு நல்ல உணவு முறைகளைக் கடைப்பிடித்து நமது கண்களைப் பேணிப் பாதுகாப்போம்.

## காயங்களும் கண் பாதுகாப்பும்

கண்கள் மிக முக்கியமான நுட்பமான உறுப்பாகும். பல்வேறு காயங்களினால் கண் பார்வையை இழக்க நேரிடுகிறது. கண்ணில் அடிபடுதல், தொழில், இரசாயனம், விளையாட்டு எனப் பல்வேறு காரணங்களால் குழந்தைகள், பெரியவர்கள் அனைவருக்குமே கண்ணில் காயமுறுவதும், பார்வை இழப்பு ஏற்படுவதும் உண்டு.

தொழில் ரீதியாக எடுத்துக்கொண்டால் பல்வேறு கூர்மையான உபகரணங்களுடன் வேலை செய்பவர், உளிகொண்டு செதுக்குபவர், கல் உடைப்பவர், கருமான் பட்டறையில் வேலை செய்பவர், வேகமாகப் பறந்து வரும் உலோக, அலோகத் துகள்களால் காயமுறுகின்றனர். இத்துகள்கள் கண் கருவிழி மேல் படிந்து ரணமாக்குவதோடு நில்லாமல் கண்ணின் உட்புறம் சென்று கண்களையே இழக்க ஏதுவாகின்றது. விவசாயத் தொழில் செய்பவர், பல்வேறு கூர்மையான கருவிகளாலும் கண்ணில் தாக்கப்பட வாய்ப்புண்டு மற்றும் அவர்கள் வேலை செய்யும் கரும்புத் தோட்டம், நெல் வயல்,



பல்வேறு செடிகள் கண்களில் படுகின்றன. கிராமப் புறங்களில் அடுப்பு எரிய வைப்பதற்காக முட் செடிகளை சேகரிக்கச் செல்லும் பெரியோர், சிறார்கள், கண்ணில் முட்கள் பட்டு கண்களையே இழக்கின்றனர். மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் ஆடு, மாடு இவற்றின் வால், கொம்பு பட்டு கண்ணையே இழப்பவர்கள் ஏராளம். ஆகையால், இத்தகைய தொழில் முனைவோர் தங்கள் முகத்திற்குத் தகுந்த பாதுகாப்புக் கவசம் அணிந்து கொண்டும், மீறி காயமுற நேர்ந்தால், தகுந்த மருத்துவ சிகிச்சையைத் தகுதி வாய்ந்த கண் மருத்துவரிடம் கால தாமதமின்றிப் பெறுவது கண் பாதுகாப்பிற்குச் சாலச் சிறந்ததாகும்.

விளையாட்டு ரீதியாக எடுத்துக் கொண்டால், குழந்தைகள் வில், அம்பு போன்ற கூர்மையான உபகரணங்களை வைத்து விளையாடுதல், கிட்டிப்புல் போன்ற விளையாட்டுகள் கண்களைப் பாதிக்கின்றன. மேலும் அபாயகரமான விளையாட்டுகளான குத்துச் சண்டை போன்றவை மற்றும் பந்துகளை வைத்து விளையாடும் விளையாட்டுகளில் பந்தோ அல்லது அடியோ படும்பொழுது கண்ணும் அதைச்சுற்றியுள்ள எலும்புகளும் உடைந்து போக வாய்ப்புள்ளன. இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடுவோர் தகுந்த பாதுகாப்பு முகக்கவசம் அணிய வேண்டும்.

வீட்டில் உபயோகப்படுத்தப்படும் கழிவறை சுத்தம் செய்யும் இராசயனங்கள் (அமிலங்கள்) கண்ணில்பட்டுக் காயமுற்றோர் பலர். கைவிரல், நகம், பள்ளியில் பயன்படுத்தப்படும் காம்பஸ், டிவைவடர் போன்ற படிப்புக்கான உபகரணங்கள் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் கண்களைத் தாக்க வாய்ப்புகள் பலவுண்டு. குழந்தைகள், பெரியோர்கள் பறவைகள், விலங்குகள் மூலமாகக் கண்களை இழந்ததுண்டு. சமீப காலமாக (மருத்துவர்கள் உபயோகித்து எரியும்) மருந்து ஊசி போடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிகளும், தைக்கும் ஊசியும் பட்டு கண்களை ஏராளமானவர்கள் இழக்கின்றனர். இத்தகைய பொருட்கள் குழந்தைகளிடம் இருக்க நாம் அனுமதிக்கக் கூடாது. பெரியவர்களும் தகுந்த முன்னெச்சரிக்கையோடு உபயோகிக்க வேண்டும்.

பாலிதின் பைகளில் அடைக்கப்பட்டு வரும் சுண்ணாம்பு மற்றும் அதன் சாரும் கண்களில் படுவதனால் கருவிழி பாதிக்கப்பட்டு பார்வை இழக்க நேரிடுகிறது. இதுபோன்ற இரசாயணப் பொருட்கள் கண்களைத்தாக்கும்போது உடனடியாகக் குளிர்ந்த நீரினால் கண்களை நன்கு கழுவ வேண்டும். குறைந்த பட்சம் அரை மணி நேரமாவது தண்ணீரினால் கண்களைக் கழுவுதல் மிக மிக அவசியம். அமிலம் மற்றும் இராசயணப் பொருட்கள் தண்ணீரால் அலசப்பட்டு அதனுடைய வீரியத் தன்மை குறைந்தவுடன் கண் மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

மற்றும் நீண்ட நேரம் வெயிலில் பணிபுரியும் விவசாயிகள், தொழிலாளிகள் தண்ணீரில் இருக்கும் மீனவர்கள், சூரிய வெளிச்சத்திலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் கண்களில் பட்டு விரைவில் கண் புரை நோய் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். கண்ணின் மேற்புறம் சதை வளர்தல் **(Pterigium)** பொதுவாக ஏற்படுகிறது. இத்தகையோர் கண்ணிற்குக் கறுப்புக் கண்ணாடியும், தலைப்பாகையோ அல்லது தொப்பியோ அணிந்து கொள்ளுவது நலம் பயக்கும்.

ஒளி மிகுந்த நிலையில் சூரியனை, சூரிய நமஸ்காரம் செய்தல், சூரிய கிரகணம் போன்ற நிகழ்ச்சிகளில், சூரிய கிரணங்களை நேரில் வெற்றுக் கண்களால் பார்த்தல் போன்றவைகளால் கணகள் பாதிப்புற வாய்ப்புண்டு.

## கண் குறையின் காரணங்கள்

| | விழுக்காடு |
|---|---|
| உயிர்ச்சத்து 'ஏ' குறைதல் | 84-88 |
| டிரோகோமா எனும் நோய் | 14.85 |
| மாறுகண் | 0.25 |
| **Refractive Errors** | 15.06 |

குழந்தைகளின் கண்ணில் அடிபடுவதற்குப் பலவகைக் காரணங்கள் உள்ளன.

| அவை | விழுக்காடு |
|---|---|
| கூர்மையான கருவிகள் | 13.90 |
| வில், அம்பு | 12.30 |
| விளையாட்டு | 10.71 |
| கிட்டிப்புல் | 6.07 |
| கை விரல் நகம் | 2.86 |
| பறவைகள், பிராணிகள் | 1.79 |
| இரசாயனப் பொருட்கள் | 0.36 |
| **Domestic toys** | 1.70 |

விழாக்கால காயங்களும் உள்ளன. ஹோலி போன்ற பண்டிகைகளில் தெளிக்கப்படும் சாயப்பொருட்களில் இராசயனம் உள்ளது. தீபாவளி மற்றும் உள்ளூர் விழாக்களில் வெடிக்கப்படும் பட்டாசு மற்றும் கிணறு ஆழப்படுத்தப் பயன்படுகின்ற வெடிமருந்துகள் கண்களைப் பாதிக்கக்கூடும்.



## சுதந்திரப் போராட்டம் :

# தமிழ்நாட்டில் சில பொன்னான நேரங்கள்!

வி. சங்கரன்

தமிழ்நாடு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் எப்போதுமே ஒரு முக்கிய இடத்தை வகித்துள்ளது.

பிரிட்டிஷாருக்கு எதிரான முதல் போராட்டமே தமிழ்நாட்டின் தென்கோடியில், ஒரு பாளையக்காரர் 18-ஆம் நூற்றாண்டில் நடத்தியதுதான். 1857-இல் இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் நடப்பதற்குப் பல ஆண்டுகள் முன்பே, வேலூரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய சிப்பாய்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். சுதந்திரப் போராட்டத்தை நடத்திய காங்கிரஸ் இயக்கத்தைத் தொடங்கும் கருத்தே சென்னையில்தான் உருவாயிற்று. பிரம்மஞான சங்க உறுப்பினர்கள் 17 பேர் சென்னையில் கூடி எடுத்த முடிவுதான் பம்பாயில் காங்கிரஸ் நிறுவனமாக வடிவம் பெற்றது.

சுதந்திரப் போராட்ட இயக்க காலம் முழுவதிலுமே தமிழ்நாட்டில் அவ்வப்போது முக்கியமான பேராட்டங்களும் கிளர்ச்சிகளும் வன்முறை நிகழ்ச்சிகளும் சத்தியாக்கிரகங்களும் நடைபெற்று வந்துள்ளன.

### *பாளையக்காரன் போர்*

தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களுக்கெதிரான போராட்டம் 18-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. அய்தர் அலி, திப்புசுல்தான் ஆகியோரின் படைகள் சென்னை, திருச்சி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகளை எதிர்த்துப் போரிட்டன.



ஆயினும், தமிழ்நாட்டின் பாளையக்காரர் ஒருவர் ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய முதல்போர் 1799 அக்டோபரில் நடந்தது. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன், அந்நியருக்கு வரிசெலுத்த மறுத்தார். ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டார்கள்; ஐந்து நாட்கள் நடந்த கடுமையான போருக்குப் பின் ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைக் கைப்பற்றினார்கள்.

ஆனால், அதற்குமுன் கட்டபொம்மன் தப்பிச் சென்றுவிட்டார். ஆயினும் அவருடைய நன்றி மறந்த நண்பன் ஒருவரின் உதவியுடன் - ஆங்கிலேயர்கள் அவரைப் புதுக்கோட்டையில் கைது செய்து கயத்தாறுக்குக் கொண்டுச் சென்று பகிரங்கமாகத் தூக்கிலிட்டார்கள்.

மற்றொரு பாளையக்காரர் பூலித்தேவனும், வரி செலுத்த மறுத்தார். ஆங்கிலேயர்கள் அவருடைய நெற்கட்டும் செவ்வல் என்ற பாளையத்தைத் தாக்கினார்கள். பல பாளையக்காரர்கள் அவருக்குப் போரில் துணை செய்தார்கள். 17 ஆண்டுகள் போர் நீடித்தது.

இறுதியில் பூலித்தேவன் மறைந்தார்.

சிவகங்கையை ஆண்ட பெரிய மருது தமது ஜமீனின் உள்விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிடுவதை எதிர்த்தார். அவர்களுடன் போர் நடத்த அவர் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். ஆனால் அதற்கு முன்பே 1801 மே மாதம், ஆங்கிலேயர்கள் சிவகங்கையைத் தாக்கினார்கள்.

நான்கு மாதங்கள் அப்போர் நடந்தது. இறுதியாக ஆங்கிலேயர்கள் காளையார்கோயிலைக் கைப்பற்றினார்கள். முடிவில் பெரிய மருதுவும் அவரது சகோதரர் சின்ன மருதுவும் தூக்கிலிடப்பட்டார்கள்.

### சுதேசிக் கப்பல்

நாடு முழுவதிலும் சுதேசி இயக்கம் பரவியபோது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமது எழுச்சியூட்டும் தேசிய கவிதைகளை எழுதி வெளியிட்டார். சென்னையில் சுதேசி உணர்வுகொண்ட சில செல்வந்தர்கள் கூடி அந்நிய வங்கிகளைப் புறக்கணித்து இந்தியன் வங்கியை அமைத்தார்கள். இந்தியா, இந்து, பேட்ரியட் போன்ற பத்திரிகைகள் சுதேசி இயக்கத்தை ஆதரித்தன. இதனால் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கோபம் கொண்டனர்.

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சி தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கியதாகும். இந்தக் கம்பெனி இரண்டு கப்பல்களை வாங்கி தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே பயணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் சென்று, போக்குவரத்து நடத்தியது. சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் வெற்றியைக் கண்டுக் கலங்கிப்போன ஆங்கிலேயர்கள் அதற்குப் பல்வேறு வகையில் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள். சுதேசி இயக்கத்தை மேலும் வளர்ப்பதற்காக வ.உ.சி. தூத்துக்குடியில் கூட்டுறவு நெசவாலை ஒன்றையும் மளிகைப்பொருள் அங்காடி ஒன்றையும் தொடங்கினார்.

சென்னையில் அவர் 'சென்னை விவசாய-கைத்தொழில்கள் சங்கம்' ஒன்றை அமைத்தார். சோப்பு, மெழுகுவர்த்தி போன்ற பல்வகைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை இந்தச் சங்கம் நடத்தியது.

### புரட்சி இயக்கம்

சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குப்பின், தீவிரவாதப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகப் பாரதமாதா சங்கம், பாரதமாதா சமிதி, வெள்ளையர் ஒழிப்பு சமாஜம் போன்ற பல அமைப்புகளை நிறுவினார்கள். வ.உ.சி., பாரதி, சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்கள் தீவிரவாதிகளை ஆதரித்து, சென்னையில் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். திருநெல்வேலியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபின் வ.உ.சியையும், சுப்பிரமணிய சிவாவையும் போலீசார் கைது செய்தார்கள்.


இதைத் தொடர்ந்து நெல்லையிலும், தூத்துக்குடியிலும் கிளர்ச்சிகள் நடந்தன. வெள்ளையர்களை மக்கள் வீதிக்குக் கொண்டுவந்து அவர்கள் வாயாலேயே "வந்தேமாதரம்" என்று வலிந்து சொல்ல வைத்தார்கள். துணைக் கலெக்டர் ஆஷ் துப்பாக்கியால் சுட்டதில் நான்கு பேர் இறந்தார்கள்.



வ.உ.சி.க்கும், சிவாவுக்கும் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இது ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சிதம்பரனாருக்குச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதும், சிறையில் அவர் கொடுமையாக நடத்தப்பட்டதும் சில தீவிரவாத இளைஞர்களின் உள்ளத்தில், பழிவாங்கும் உணர்வைத் தூண்டிவிட்டன.

வாஞ்சிநாதன் என்ற எழுச்சிமிக்க இளைஞர் மணியாச்சி ரயில் சந்திப்பில் கலெக்டர் ஆஷைத் துப்பாக்கியால் சுட்டார். பின்பு அவர் தம்மையே சுட்டுக்கொண்டு உயிர்விட்டார். காயமடைந்த ஆஷ், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் இறந்தார்.

வாஞ்சிநாதனிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு கடிதம், ஆங்கிலேயருக்கெதிராக நாடு முழுவதும் புரட்சி நடத்த மக்கள் திட்டமிட்டிருந்ததைத் தெரிவித்தது. தில்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா நடக்கும்போது



இந்தப்புரட்சி நடக்கவிருந்தது. இதை அறிந்துகொண்ட ஆட்சியாளர்கள் தீவிரவாதிகளைத் தேடிப் பிடிக்கத் தொடங்கினார்கள். ஆஷைக் கொலை செய்ததற்காகவும், பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டதற்காகவும் 14 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

'திருநெல்வேலி சதி வழக்கு' எனப்பட்ட இந்த வழக்கில் நீலகண்ட பிரம்மச்சாரி, முதல் குற்றஞ்சாட்டப் பட்டவராகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

கிட்டத்தட்ட இதே காலத்தில் செண்பகராமன் என்ற தீவிரவாதி ஜெர்மனிக்குச் சென்று போர்ப்பயிற்சி பெற்றார். அவர் வியன்னாவில் சுபாஷ் சந்திர போஸைச் சந்தித்தார். நாட்டு விடுதலைக்குப் போராட இந்திய தேசியத் தொண்டர்படை ஒன்றை அமைக்க அவர் திட்டமிட்டார்.

முதல் உலகப்போரின்போது 'எம்டன்' என்ற ஜெர்மன் போர்க்கப்பலைச் சென்னைக்கருகே கொண்டுவந்து பீரங்கியால் சுட்டார்; இந்தக் குண்டு சென்னை உயர்நீதிமன்றக் கட்டடத்திற்கருகே விழுந்தது.

பாரதியார் தமது 'இந்தியா' பத்திரிகையில் தேச விடுதலை பற்றி எழுதிய கட்டுரைகளுக்காக, அவரைக் கைது செய்வதற்குப்



# இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா

## இதோ சில முக்கியச் செய்திகள் !

- ★ 1885ல் கூடிய முதலாவது காங்கிரசில், முதல் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆவார்.
- ★ காங்கிரஸ் பேரியக்கத்தைத் தோற்றுவித்த ஆங்கிலேயர், சர் ஹென்றி ஏ.ஓ. ஹியூம்.
- ★ இந்திய தேசியக் காங்கிரஸ் வரலாற்றை முறைப்படி முதன்முதல் எழுதியவர், பட்டாபி சீதாராமையா.
- ★ இந்தியாதான், உலகிலேயே மிகப்பெரிய அரசியல் சட்டத்தைக் கொண்டுள்ள நாடு ஆகும்.
- ★ இந்தியாவில் முதன்முதல் அமைக்கப்பட்ட மாநில அரசியல் கட்சி, பொன்விழா கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகமேயாகும்.
- ★ 1989 முதல்தான், வாக்களிக்கும் வயது 18 என நிர்ணயிக்கப்பட்டது.
- ★ இந்தியாவில், பெண்களுக்கு முதன்முதல் வாக்குரிமை அளிக்கப்பட்டது 1926ல்.
- ★ இந்திய தேசியக்கொடியை வடிவமைத்த முதல் பார்ஸி பெண்மணி, மேடம் காமா.
- ★ முதன்முதல் பாரத ரத்னா விருது பெற்றவர் மூதறிஞர் ராஜாஜி.
- ★ இந்திய தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரத்தில், 24 ஆரங்கள் உள்ளன.
- ★ 'கப்பலோட்டிய தமிழன்' எனப்படும் வ.உ.சிதம்பரனார், 'தென்னிந்தியத் திலகர்' என்றும் போற்றப்பட்டார்.
- ★ வ.உ.சி. விட்ட இருகப்பல்களின் பெயர்கள் லாவோ, காலியா.
- ★ இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான திரு.வ.வே.சு. ஐயர், 'மகரிஷி' என்று குறிப்பிடப்பட்டார்.
- ★ ராட்கிளிப் என்பவரே, இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கோட்டை வகுத்தவராவார்.
- ★ ஊர்வலத்தில் தேசியக்கொடி பிடிப்பதானால், வலது தோளில்தான் தாங்கிச் செல்லவேண்டும்.
- ★ பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இடம்பெற்ற முதல் இந்தியர் தாதாபாய் நௌரோஜி.
- ★ இந்தியா சுதந்திரம் பெற்றபின் முதல் தேர்தல் நடைபெற்றது, 1952 ஆம் ஆண்டு.

- *வித்யா*

பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டபோது, அவர் பிரெஞ்சுப் பிரதேசமான புதுச்சேரிக்குத் தப்பிச்சென்றார். அவரைப்போலவே நீலகண்ட பிரம்மச்சாரி, மாடசாமி போன்ற சுதந்திரப்போராட்ட வீரர்களும் புதுவையில் அடைக்கலமடைந்தார்கள்.



### வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்

தமிழ்நாட்டில் நடந்த சுதந்திரப்போராட்டத்தில் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்.

ராஜாஜி தலைமையில் 98 பேர் 1930-ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டு நாளன்று திருச்சியிலிருந்து புறப்பட்டு, அன்னிய அரசின் உப்புச் சட்டத்தை எதிர்த்து வேதாரண்யத்திற்கு யாத்திரை தொடங்கினார்கள். வழியில் உள்ள கிராமங்களிலெல்லாம் ராஜாஜியும் மற்ற தலைவர்களும் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். எல்லா இடங்களிலும் யாத்திரையாளர்களுக்கு மக்கள் மிகச் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள்.

16 நாள் பயணத்திற்குப் பின், சத்தியாக்கிரகிகள் வேதாரண்யம் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் ஒவ்வொரு நாளும் சிறு குழுக்களாகச் சென்று உப்பு எடுத்துச் சத்தியாக்கிரகம் நடத்தி, கைது செய்யப்பட்டார்கள். சத்தியாக்கிரகிகள் 98 பேர் மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த தேசிய இயக்க வீரர்களும் அப்போது கைது செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


பெரியார் ஈவெரா. அவர்கள் மதுவிலக்கு மறியல், தீண்டாமை ஒழிப்புப் போன்ற போராட்டங்களில் தீவிரமாக ஈடுபடலானார்.

### 'வெள்ளையனே வெளியேறு'

1942-இல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குப் பின்பு, நாடெங்கும் தேசிய இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது தமிழ்நாட்டு மக்கள் கொதித்தெழுந்தார்கள். மாநிலம் முழுவதிலும் சில நாட்கள் பந்த் நடைபெற்றது. மக்கள் அமைதியாக நடத்திய ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் காவல் துறையினர் தடுத்ததைத் தொடர்ந்து பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானையில் போலீசார் சுட்டதில் 6 பேர் உயிரிழந்தார்கள்.

சென்னையில் 'பி அண்ட் சி' ஆலைத் தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் இறந்தார்கள்.




கோயம்புத்தூரில் விமான தளம் ஒன்று எரிக்கப்பட்டது; அப்போது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், சுமார் 30 பேர் கொல்லப்பட்டார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிகளும், கல்லூரிகளும் ஒரு வார காலத்துக்கு மூடப்பட்டன. குலசேகரப்பட்டினம் உப்பளத்தில் புரட்சிக்காரர்கள் வெள்ளையர் ஒருவரைக் கொன்றார்கள். சிறிது காலத்திற்குள் வன்முறைகளும் கலகங்களும் ஒரு முடிவுக்கு வந்தன என்றாலும், மாணவர்களின் கிளர்ச்சிகள் நீண்ட காலம் தொடர்ந்து நடந்தன.

தமிழகத்தில் இவ்வாறு அணையாது மூட்டப்பட்ட சுதந்திரக்கனல், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவிலிருந்து வெள்ளையர்கள் வெளியேற முக்கியக் காரணங்களில் ஒன்று ஆயிற்று என்பதை விடுதலைப் போர் வீரவரலாறு என்றென்றும் மறவாது.

# மனித நேயம்


- கவிஞர் எழிற்பித்தன்



இருப்பதன் விளக்க மாகும்
இயக்கமே உலக மாகும்
பொறிப்புலன் களாலே ஆன
புதுப்பாண்டம் தானே யாரும்!

உறுத்துமோர் தேவை யாலே
உருப்பெற்றி லங்குவார் தம்
கருப்பொருள் தானே வாழ்க்கை
காலமோர் கவிதை யாகும்!


எழுப்புவான் பரிதி யென்னும்
இலக்கண வரம்புக் குள்ளே
உழைப்பெனும் நெம்பு கோலே
உலகினைப் புரட்டக் கூடும்!




பழுக்கின்ற கனிகள் யாவும்
படைத்தவர் பெருமை கூறும்
விழிக்கின்ற புதுக் கணக்காம்
விடியலே மனித நேயம்!

விழிப்பயன் தோயு மந்த
வியனுறு வனப்பை யெல்லாம்
எழுத்தினால் வடிக்கப் போமோ
கிழக்கு நீ விழிக்க வேண்டும்!

விழிப்பதும் இருப்பதும் நல்
விளைவுகள் ஆவ தில்லை
அழுக்கெல்லாம் கரைந்து போக
அயராத உழைப்பு வேண்டும்!





மனத்தள வாகு மிந்த
மன்பதைத் தேர்வி லெங்கும்
இனித்திடும் அன்பு ஒன்றே
இலக்கிய மாக வேண்டும்!

நிலைபெற வாழு மிந்த
நினைவுக ளாலே மண்ணில்
தலைப்படு கின்றோம்; நாளும்
தழுவுக மனித நேயம்! ★

# கல்லக்குடி சமத்துவபுரம்

வீடுகளை சுட்டித்தருகின்ற திட்டத்தை இந்த ஆட்சியிலே தான் 1974-ஆம் ஆண்டு நான் அறிமுகப் படுத்தினேன். அப்பொழுது அதை பலர் கேலி செய்தார்கள். இந்தத் திட்டம் நிறைவேறுமா என்றெல்லாம் கேட்டார்கள். அதில் குறைகளை, குற்றங்களைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 74-ஆம் ஆண்டு தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கான இலவச காங்கீரிட் வீடுகள் என்ற அந்தத் திட்டம் இந்திய அரசாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்குப் பெயரும் மாற்றப்பட்டு நான் தொடங்கிய திட்டம் அதற்கு இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட்டு இந்தியா முழுமையுள்ள மாநிலங்களிலே ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. நான் பெயர் மாறியதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்தக் குறிக்கோள் மாறாமல் வீடுகள் கட்டப்படுவதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இது தவிர வேறு மாநிலங்களில் கட்டப்படுகின்ற வீடுகளெல்லாம் கிட்டத்தட்ட ஒட்டு வீடுகள்தான். தமிழ்நாட்டில் தான் மத்திய அரசு தருகின்ற தொகையை விட அதிகமாக தொகை சேர்த்து இந்த வீடுகளையெல்லாம் இலவசமாக காங்கீரிட் வீடுகளாக கட்டித்தருகின்ற அந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

திருச்சி மாவட்டத்தில் சமத்துவபுர வீடுகளையன்னியில் சிறப்புத் திட்டமாக இந்த ஆண்டு 750 சமத்துவபுர வீடுகளை உருவாக்குவது என்று திட்டமிட்டு அந்த வகையில் 200 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும், கல்லக்குடியிலே இன்றைக்கு நிறைவேறும் தருவாயில் இருக்கின்ற 100 சமத்துவபுர வீடுகளைப் பார்வையிடும் விழாவும், இதைத் தொடர்ந்து மொத்தமாக இந்த மாவட்டத்தில் 750 சிறப்பு வீடுகள் கட்டுவதற்கான அறிவிப்பு விழாவும் இணைக்கப்பெற்று அத்துடன் ஏறத்தாழ 35 கோடிக்கான அரசு நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குகின்ற விழாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## ஆதிதிராவிடர்க்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை கொண்டு வந்தது இந்த அரசு

இன்று எல்லோரும் சமமாக வாழவேண்டும். சமத்துவ நோக்கத்தோடு, நல்ல எண்ணத்தோடு ஒற்றுமையை, உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த சமத்துவபுரத் திட்டத்தை நாம் சிந்தித்து அரசின் சார்பாக செயல்படுத்துகின்ற சூழல் இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக காங்கீரிட்

## குடிசை மாற்று வாரியத்தை முதன் முதலாக ஆரம்பித்தது இந்த ஆட்சிதான்

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கெல்லாம் மாடி வீடுகளை கட்டித் தந்து முதல் முதலாக குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பித்ததும் தமிழ்நாட்டில் தி.மு.கழக ஆட்சியிலேதான் என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். சென்னையானாலும், கோவையானாலும், சேலமானாலும், திருச்சியானாலும் இத்தகைய நகர்ப் புறங்களில் குடியிருப்புக்கள் குடிசைகளாக இருப்பதை மாற்றி குடிசை மாற்று வாரியம் ஏற்கனவே Slum Development Scheme குடிசைகள் மேம்பாட்டுத் திட்டம் என்று காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. குடிசைகள் மேம்பாட்டு திட்டம் என்றால் குடிசைகள் இருக்கின்ற பகுதிகளில் மேம்பாடு செய்ய சாலைகள் அமைப்பது, தண்ணீர் தருவது இவைகள்தான் குடிசைகள் மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. நாம் அதனை அறவே மாற்றி குடிசைகளை அகற்றுகின்ற திட்டம் Slum Clearance Scheme குடிசைகளை அகற்றினால் அங்கே வாழ்கின்றவர்கள் எங்கே போவார்கள் என்பதற்காக அங்கேயே மாற்றுத் திட்டமாக குடிசைகளை மாற்றுகின்ற வாரியம் குடிசை மாற்று வாரிய திட்டத்தை முதல் முதலாகக் கண்டதும் தமிழ்நாடு தான் கண்ட ஆட்சியும் கழக ஆட்சிதான் என்பதை நான் இங்கே பெருமையாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதனுடைய தொடர்ச்சியாகத் தான் இங்கே தம்பி துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப் போல் ஒரு அரசு என்றால் நிர்வாகத்திலே திறமை காட்டுகின்றோம். மக்களை ஆட்சிபுரிவதிலே திறமை காட்டுகின்றோம்; சட்ட ஒழுங்கு அமைதி காப்பதிலே கவனம் செலுத்துகின்றோம். அதே நேரத்தில் சீர் குலைவுகளுக்கு சில இடையூறுகளுக்கு எது காரணம் என்பதையும் அறிந்து தம்பி சிவா, குறிப்பிட்டதைப் போல், 'நோய்

**கல்லக்குடியில் 23.8.98 அன்று நடைபெற்ற சமத்துவபுர விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**



நாடி நோய் முதல் நாடி' என்பதைப் போல அவைகளையும் ஆராய்ந்து எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளில் ஒன்றுதான் இந்த சாதிமத மற்ற நிலையிலே மக்கள் சமமாக வாழ வேண்டும். அதற்கு வாய்ச் சொல் மாத்திரம் போதாது. செயல் வடிவம் தர வேண்டுமென்று சிந்தித்துத் தான் இந்த சுதந்திரப் பொன்விழா ஆண்டில் தமிழகத்தில் சமத்துவபுர வீடுகளை அமைப்பது என்று திட்டமிட்டு இந்த சமத்துவபுரம் மதுரை அருகே உள்ள மேலக்கோட்டையில் கடந்த வாரம் முதல் சமத்துவபுரம் தொடங்கிவைக்கப்பட்டிருக்கின்றது.

### "நமக்கு நாமே" திட்டத்தில் உருவான கால்நடை மருத்துவமனை

அடுத்து இந்த சமத்துவபுர விழாவில் நான் கலந்து கொள்கின்றேன். இங்கே பேசிய இராமராஜன் குறிப்பிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் மூர்த்தி அண்மையில் மணிகண்டத்தில் "நமக்கு நாமே" திட்டத்தைப் பயன்படுத்தி ஒரு கால்நடை மருத்துவமயையே சில மணி நேரத்தில் உருவாக்கினார் என்று குறிப்பிட்டார்.

அதைப் போலவே இங்கேயும் என்னுடைய அருமைத் தம்பி நேருவின் ஒத்துழைப்போடு அவருடைய ஆர்வத்தையும் கலந்து மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த பகுதி மக்களின் ஒத்துழைப்பையெல்லாம் பெற்று இந்த சமத்துவபுரத்தை நான் எதிர்பார்த்ததிற்கு மேலாகவே உருவாக்கி வருவதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இதனால்தான் போலும் அந்தக் காலத்திலேயே மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கு ஒரு எடுத்துக் காட்டாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மூர்த்தி விளங்குகிறார். நான் மூர்த்தியை பாராட்டுவதற்காகச்

**"ஆண்டவனை ஏற்றுக் கொள்கிறோம்; ஆனால், ஆண்டவன் படைப்பிலே எல்லோரும் சமம் என்பதை மாத்திரம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்றால், அப்படி மறுக்கின்றவர்கள்தான் ஆண்டவனுக்கு விரோதிகள் - நாத்திகர்கள் !"**

சொல்லவில்லை. மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மூர்த்தியை போல விளங்கவேண்டுமென்ற சுயநலத்தின் காரணமாக இதைச் சொல்கிறேன் அல்லாமல் வேறல்ல. இந்த வழிமுறையை எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

மதுரை மாவட்டத்திலே சமத்துவபுரத்தை கண்டபோது மிக மகிழ்ந்தேன். அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை பின்பற்றி எல்லா மாவட்டங்களிலும் மிகவிரைவில் சமத்துவபுரத் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். இங்கேயும் நேரு அவர்களும் மூர்த்தி அவர்களும் ஒருங்கிணைந்து இந்த பகுதி மக்களின் ஒத்துழைப்போடு உருவாகயிருக்கின்ற சமத்துவபுரத்தை கண்டு நான் வியந்து போகின்றேன். பாராட்டுகின்றேன். அவர்களை வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## சமத்துவபுரத்தோடு "நமக்கு நாமே" திட்டத்தையும் கலந்திருக்கின்றார்கள்


இந்த சமத்துவபுரத்திலே ஒரு புதுமை என்னவென்றால் இதிலே 'நமக்கு நாமே' திட்டத்தையும் கல்ந்திருக்கின்றார்கள். வெறும் சமத்துவபுரம் மாத்திரமல்ல; தேனாடு கொஞ்சம் பலாச்சுளையை கலந்ததைப்போல! அல்லது பலாச்சுளையோடு தேனையும் கலந்ததைப் போல! சமத்துவபுரத் திட்டத்தோடு நமக்கு நாமே திட்டத்தையும் கலந்திருக்கிறார்கள். அரசாங்கம் தருகின்ற தொகையை கொண்டு மாத்திரமல்ல; பயனாளிகளும் உழைத்து அவர்களுடைய பங்குக்கும் பணியாற்றி அப்படி உருவானால்தான் அந்த வீடுகளிலே வசிக்கின்றவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடும் மிகுந்த பொறுப்போடும் அந்த வீடுகளை பராமரிப்பார்கள் என்ற நல்ல நோக்கத்தோடு, அவர்களுக்கும் பங்களிப்பு உண்டு என்பது இந்தத் திட்டத்திலே நமக்கு நாமே திட்டத்தை கலந்ததன் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

நமக்கு நாமே என்பதை நான் அந்தச் சொற்றொடரை கண்டுபிடித்து அதை அறிமுகப்படுத்தியதற்குக் காரணமே நாம் நாமாக இருக்க வேண்டும். எனக்கு நானே என்று சொல்லும்பொழுது அதில் உறவு கிடையாது, ஒற்றுமை கிடையாது. நமக்கு நாமே என்று சொன்னால்தான் உறவு உண்டு, ஒற்றுமை உண்டு. சொல்லிப் பாருங்கள்; எனக்கு நானே என்றால் நம்முடைய இரண்டு உதடுகள் கூட ஒட்டுவதில்லை. எனக்கு நானே என்ற அந்த வார்த்தையை சொன்னால் இரண்டு உதடும் தனித்தனியாகத்தான் இருக்கும். ஒட்டாது. நமக்கு நாமே என்று சொன்னால் இரண்டு முறை உதடு ஒட்டும்.

எனவே ஒட்டும் உறவும் வரவேண்டுமேயானால் நமக்கு நாமே என்று நம்முடைய பணிகள் நிறைவேற வேண்டுமென்பதற்காகத்தான் "நமக்கு நாமே" என்று இந்தத் திட்டத்திற்குப் பெயர் சூட்டினேன். அதை செயல்படுத்துகின்ற வகையில் அதற்கு உண்மையான, உருக்கொடுக்கின்ற வகையில், உண்மையான பொருள் காணுகின்ற வகையில் இந்த மாவட்டத்திலே இந்த சமத்துவபுரத் திட்டத்தோடு நமக்கு நாமே திட்டத்தையும் கலந்திருப்பது உள்ளபடியே நான் மகிழத்தக்க ஒன்றாகும்.

ஒரு பொதுப்பணியில் அரசாங்கம் மாத்திரம் தலையிட்டு நிறைவேற்றுவது என்பது தேவை என்றாலும் கூட, அரசுக்கு உதவியாக மக்கள் இருந்தாக வேண்டும்.

அந்தக் காலத்திலேயே நாம் படித்திருக்கிறோம். வைகை நதியில் உடைப்பெடுத்தபோது பாண்டிய மன்னன் தன்னுடைய அரசு சேவகர்களை மாத்திரம் அனுப்பி



**இந்த சமத்துவபுரத்திலே ஒரு புதுமை என்னவென்றால் இதிலே 'நமக்கு நாமே' திட்டத்தையும் கலந்திருக்கின்றார்கள். வெறும் சமத்துவபுரம் மாத்திரமல்ல; தேனோடு கொஞ்சம் பலாச்சுளையை கலந்ததைப்போல! அல்லது பலாச்சுளையோடு தேனையும் கலந்ததைப் போல! சமத்துவபுரத் திட்டத்தோடு நமக்கு நாமே திட்டத்தையும் கலந்திருக்கிறார்கள். அரசாங்கம் தருகின்ற தொகையை கொண்டு மாத்திரமல்ல; பயனாளிகளும் உழைத்து உருவானால்தான் அந்த வீடுகளிலே வசிக்கின்றவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடும் மிகுந்த பொறுப்போடும் அந்த வீடுகளை பராமரிப்பார்கள்.**

அந்த உடைப்பை அடைப்பதற்கு உதவி கோரவில்லை... அவர்கள் மாத்திரம் போதாதென்ற காரணத்தால் மக்களையெல்லாம் அழைத்தார். ஊர் மக்களெல்லாம் ஒன்றுகூடிதான் வைகையில் ஏற்பட்ட உடைப்பை அடைத்தார்கள் என்று புராணம் சொல்கிறது; வரலாறே சொல்கிறது. அப்படிச் சென்ற ஊர் மக்களில் ஒருவராக மதுரை சோமசுந்தர கடவுள் ஆண்டவனே கூட ஒரு கூலிக்காரனாகச் சென்று பிட்டுக்கு மண் சுமந்தான் என்று ஆண்டவனே பிட்டுக்கு மண் சுமந்து மண்ணை சுமப்பதற்கு ஒரு கை பிட்டு கொடுத்தால் போதுமென்று அதை கூலியாகப் பெற்றுக் கொண்டு ஆண்டவனே மண் சுமந்தான் என்றால், அப்பொழுதே நமக்கு நாமே திட்டம் புராண காலத்திலேயே மதுரையம்பத்தியிலே பாண்டியனால் அறிமுகப்படுத்துப்பட்டு அதில் மக்கள் மாத்திரமல்ல; அதில் மகேசனேகூட கலந்து கொண்டிருக்கிறான் என்றால் நாம் கலந்து கொள்ளக்கூடாதா? நாம் அந்தத் திட்டத்திலே பங்கு பெறக்கூடாதா என்பதுதான் உங்களைப் பார்த்து நான் விடுக்கின்ற வேண்டுகோளாகும்.

இந்த வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கின்ற வகையிலே இந்த மாவட்டத்து பெருமக்கள், இந்தப் பகுதி பெருமக்கள் அதிலும் என்னுடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு முக்கியமான அத்தியாத்தை பிடித்துக் கொண்டிருக்கின்ற கல்லக்குடி பகுதியிலுள்ள பெருமக்கள் இந்தப் பணியிலே அயராமல் உழைத்து ஆர்வம் காட்டியிருப்பதற்காக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### சமத்துவபுரத்தில் வாழ, ஜாதியை மறந்துவிட்டு வாருங்கள்

நான் மதுரையிலே கூறியதை தம்பி துரைமுருகன் இங்கு நினைவுபடுத்தினார். சமத்துவபுரம் என்பது மாவட்டங்களில் மாத்திரமல்ல; மாநிலம் முழுவதும் தமிழ்நாடு முழுதும் சமத்துவபுரமாக மாற வேண்டும். மாநிலம் மாத்திரமல்ல; நம்முடைய இந்தியாவே சமத்துவபுரமாக மாற வேண்டும்.

இன்றைக்கு இந்த சமத்துவபுரங்களில் நூறு வீடுகள் இருக்கின்றன என்றால் அந்த வீடுகளுக்கான பள்ளி, நூலகம், விளையாட்டுத் திடல், சமுகக்கூடம், பூங்கா, கிணறு, மேல்நிலை குடிநீர் தொட்டி, பால் வழங்கும் நிலையம், காய்கறிக் கடை, மருந்தகம், கால்நடை மருந்தகம், இப்படி இவ்வளவு வசதியோடு இருக்கிறதென்று அழைக்கும்போது வருகிறவர்கள் ஜாதியை மறந்துவிட்டு வாருங்கள். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற அந்தக் குறிக்கோளை எய்திட இங்கே வாருங்கள்; வருகின்றவர்கள் ஐயராக இருக்கலாம், ஆதிதிராவிடராக இருக்கலாம், செட்டியாராக இருக்கலாம், வன்னியராக இருக்கலாம், முதலியாராக இருக்கலாம், தேவராக இருக்கலாம், யாதவராக இருக்கலாம், பிள்ளைமாராக இருக்கலாம், யாராக இருந்தாலும் அவர்களெல்லாம் தமிழர்கள் அல்லது இந்தியர்கள் என்று மாத்திரமல்ல; மனிதர்கள் ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்று சொல்கிறோம்.

ஆனால் ஆண்டவனை ஏற்றுக் கொள்கிறோம். ஆண்டவன் படைப்பிலே எல்லோரும் சமம் என்பதை மாத்திரம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம் என்றால் அப்படி மறுக்கின்றவர்கள்தான் ஆண்டவனுக்கு விரோதிகள், உண்மையான நாத்திகர்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லி, அந்த ஆண்டவன் விரும்புகின்ற சமத்துவத்தை நிலைநாட்ட, சமதர்மத்தை நிலை நாட்ட சமத்துவபுரங்கள் நாடெல்லாம் உருவாகட்டும். நான் இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்ல விரும்புகின்றேன். தமிழகம், இந்தியா என்ற இந்தப் பகுதி மாத்திரமல்ல; நம்முடைய மனம் அதற்குப் பக்குவப்பட்டாக வேண்டும். நாம் அத்தனைப் பேரும் சமத்துவத்தை விரும்புகின்றவர்களாக மாறுவோம். வெறும் வாய் அளவிலே இல்லாமல் செயல் அளவிலே சமத்துவத்தை நாம் காட்டுவோம்; சமதர்மத்தை நிலை நாட்டுவோம். அதை இந்த விழாவிலே ஒரு சூளுரையாக எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


★ ★ ★

பூம்புகார் என்று புகழ்பெற அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1.8.1973 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் பெயரிடப்பட்டு **துவக்கப்பட்டு**, தற்பொழுது, 'வெள்ளிவிழா' ஆண்டினை 21.8.1998 அன்று கொண்டாடியது. புகழ்பெற்ற சோழ மன்னர்களின் துறைமுகத்தின் **பெயரைத்** தாங்கிய இந்நிறுவனம், 25 ஆண்டுகளை வெற்றிகரமாகக்கடந்துள்ளது. இந்தியத் திருநாட்டின் சுதந்திரதினப் பொன்விழாவினைக் கொண்டாடும் நேரத்தில், பூம்புகாரும் தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவது என்பது இந்நிறுவனத்திற்கு மேலும் பெருமை அளிக்கிறது.

இந்த 25 ஆண்டுகளில் இந்நிறுவனம் தனது **திறமையான** செயல்பாட்டால் படிப்படியாக வளர்ந்து இன்று **தமிழக** அரசு நிறுவனங்களிலேயே நன்றாகச் செயல்படும் ஒரு **நிறுவனமாக** விளங்குகிறது. இந்நிறுவனத்தின் புகழ் இன்று நாடு முழுவதும் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பரவியுள்ளது.

வெள்ளிவிழாக் காணும் இந்நிறுவனம், படைத்துள்ள சாதனைகளில் சில;

- ⌘ 1973ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சங்களாக இருந்த இந்நிறுவனத்தின் விற்பனைச் சாதனை தற்போது ரூ.1100 இலட்சங்களாக **உயர்ந்துள்ளது**.
- ⌘ அகில இந்திய அளவில் கைத்திறத் தொழில் நிறுவனங்களிலும் விற்பனையில் முதல் மூன்றில் இந்நிறுவனம் ஒன்றாகும்.



# பூம்புகார்

- ⌘ மொத்தம் 20 விற்பனை நிலையங்கள்தான் உள்ளன. **இந்தியாவிலேயே** அனைத்து கைத்திறத் தொழில் நிறுவனங்களையும் **விட** அதிக விற்பனை நிலையங்களைக் கொண்ட நிறுவனம் இது.

அரசு கைத்திறத் தொழில் நிறுவனங்களிலேயே ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையிலான கண்காட்சிகளை நாடு முழுவதும் **பூம்புகார்** நடத்துகிறது.

இந்தியாவிலேயே கைவினைப் பொருட்களுக்கென **விற்பனை** நிலையங்கள் மட்டுமின்றி, சொந்தமாக 9 உற்பத்திநிலையங்களையும் கொண்டுள்ளது.

இந்த 25 ஆண்டுகளில், தமிழக அரசிடமிருந்து **பெற்ற** கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்திவருவதுடன் **தன்னிறைவு** அடைந்து, செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் கைத்திறத் தொழில் நிறுவனங்களில், பூம்புகார் மட்டுமே கோவில் சிறப்புப் பணிகளான மர/வெள்ளி/தங்க ரதங்கள், **வாகனங்கள்**, கவசங்கள், மணிகள் மற்றும் பித்தளைவரிசைக் கம்பிகள் ஆகியவற்றை செய்து வழங்குகிறது. பூம்புகார் செய்து வழங்கிய புகழ்வாய்ந்த **பணிகளில்** சில :

- ⌘ திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு 21½ அடி உயரமுள்ள தங்கத்தேர்.
- ⌘ இராமேஸ்வரத்திலுள்ள திருக்கோயிலுக்கு கருங்கல்லில் **இரண்டாவது** பிரகாரம்.
- ⌘ பெங்களூரிலுள்ள **கன்னிகா** பரமேஸ்வரி கோயிலுக்கு 22 அடி உயரத்தில் வெள்ளிரதம்.

இந்த வெள்ளிவிழா ஆண்டில் இந்நிறுவனம் கீழ்க்கண்ட **இலக்குகளை** எட்டத் திட்டமிட்டுள்ளது.

இவ்வருடம் விற்பனையை ரூ.15 கோடிக்கு உயர்த்துவது.

மயிலாப்பூரிலுள்ள அருள்மிகு கபாலீசுவரர் கோயில், மாங்காட்டில் உள்ள காமாட்சியம்மன் கோயில் மற்றும் மருதமலை முருகன் கோயில் ஆகியவற்றிற்குத் தங்கரதம் செய்து வழங்கும் சிறப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.

சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் முதன்மை விற்பனை நிலையத்தை ரூ.1 கோடி செலவில் விரிவுபடுத்தி, உள் அலங்காரம் செய்து, குளிர்சாதன வசதி செய்தல்.

இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனையை ரூ.15 கோடியாக உயர்த்துதல் (இது முந்தைய ஆண்டைவிட 100 சதவிகிதம் உயர்வாகும்).

ஏற்றுமதிக்கான பொருட்கள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுதல் மற்றும் வெளிநாட்டில் நடத்தும் கண்காட்சிகளில் பங்கேற்றல்.

மேற்கண்ட இலக்குகளை அடைந்து, வரும் ஆண்டுகளில் மேலும் வளர்ந்து தனது பொன்விழா ஆண்டை நோக்கி பூம்புகார் நம்பிக்கையுடன் பீடுநடை போடுகிறது. ●

# வாசகர் இதயம்

அரசு ஆணைகளைத் 'தமிழரசு' இதழில் தொடர்ந்து வெளியிடுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது; தொடரட்டும் இப்பணி.

**- ப.சுதாகர்,**
**நடுப்பட்டி.**

தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் வரலாற்றை மிகவும் அற்புதமாகவும், சுருக்கமாகவும் அளித்திருந்தீர்கள்; நன்றி.

**- மு.செல்வம்**
**கீரப்பாளையம்.**

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ் கண்டு மகிழ்ந்தேன்; அந்த மாவட்டத்தைச் சேர்ந்த நான் 'தழைத்தோங்கும் தருமபுரி மாவட்டம்' என்ற கட்டுரையால் களிபேருவகை கொண்டேன்.

**-கே.மீனாம்பாள்.**
**சென்னை - 4.**

'கலைஞர் சிறந்த நிர்வாகி, மக்கள் தலைவர்' என்றெல்லாம் கவர்னர் பேசியதை வெளியிட்டிருந்தீர்கள்; இதைப் படித்துவிட்டு, அன்றாடம் வேறொரு அம்மையார் கலைஞர் மேல் அவதூறு சொல்லி வருவதைப் பார்க்கிறபோது எங்களுக்கெல்லாம் சிரிப்புத்தான் வருகிறது.

**- எஸ்.இன்பராஜ்,**
**நா. சுரேந்திரன்,**
**தஞ்சாவூர்.**

அரசு செய்திகள், நலத்திட்டங்கள் பற்றி அறிவதற்கான வாய்ப்புகள், கவிதைகள், சிங்காரச் சிறுகதைகள், பயன்தரும் கட்டுரைகள், சாதனையாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இவற்றோடு இலக்கியத் தாகமுள்ள வாசகர்களையும் திருப்திகொள்ளச் செய்யும் தமிழரசை வாழ்த்துகிறேன்.

**- வேணு புருஷோத்தமன்**
**சென்னை - 94.**

'விமோசனம்' பத்திரிகை பற்றிய ஆய்வுக்கட்டுரை அந்தக்காலச் செய்திகள் பலவற்றையும் கொண்ட அற்புதக் களஞ்சியமாக இருந்தது. இப்படிப்பட்ட கட்டுரைகளைத் 'தொடரும்' போடாமல் ஒரே இதழில் முடித்தால் நன்றாயிருக்குமே!

**- புலவர் தாமரை**
**திருக்காட்டுப்பள்ளி.**

எப்போதாவதுதான் வேளாண்மைச் செய்தி வெளியிடுகிறீர்கள்; தொடர்ந்து அந்தந்தப் பருவத்திற்கேற்பச் செய்திக் கட்டுரைகள் போட்டால் என்போன்ற விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**-எம். பிச்சையா**
**திருநெல்வேலி.**

கலைமாமணி விருதுபெற்ற செய்திகளைப் படங்களோடு போட்டிருக்கக் கூடாதா?

**-ப.பிரமீளா**
**திருச்சி.**

உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டி பற்றிய கட்டுரை வெளியிட்ட ஆசிரியர் குழுவுக்கு நன்றி. இந்தியா அதில் இடம் பெறவில்லையே என்ற எங்கள் ஏக்கத்தையும் அதில் குறிப்பிட்டிருந்த கட்டுரையாளருக்கு எங்கள் இரட்டிப்பு நன்றி.

**-ஆர்.மகாலிங்கம்**
**கரூர்.**

குமாரசாமி ராஜா பற்றிய முதலமைச்சர் கலைஞர் சொற்பொழிவு பிரமாதம்.

**- பா.முத்து,**
**புதுச்சேரி.**

# தருமபுரி மாவட்டம் : நீர்வள ஆதார ஆக்கப்பணிகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் (1996-97 மற்றும் 1997-98) கீழ்காணும் திட்டங்கள் மூலமாக தருமபுரி மாவட்டத்தில் புதிய பணிகள் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டங்களைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள், பாசனப் பரப்பை விரிபடுத்தும் வகையில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பின் கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டப் பணி**

அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமத்தின் அருகில் வரட்டாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ரூ.2,112 இலட்சங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை நான்கு ஆண்டுகளில் (1997-98 முதல் 2000-2001) முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைந்து முடிக்கும் வகையில் இதற்கென ஒரு கோட்ட அலுவலகமும், மூன்று உபகோட்டங்களும் 9-7-98 முதல் துவக்கப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் 2858.30 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

**உலக வங்கி நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திலுள்ள பெரிய மற்றும் நடுத்தர நீர்த்தேக்கத் திட்டங்களைப் புனரமைத்து மேம்படுத்த ரூ.1076.48 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிருஷ்ணகிரி, வாணியாறு, பாம்பாறு, தூளகிரி சின்னாறு போன்ற நீர்த்தேக்கம் மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டு ஆகிய புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர இரண்டு பணிகளான நும்பலஹள்ளி நீர்த்தேக்கம் மற்றும் பாரூர் பெரிய ஏரி முறைமை ஆகியவைகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் 38,864 ஏக்கர் பாசனம் உறுதி.

**சிறப்புச் சிறுபாசனத் திட்டப் பணிகள்**

இத்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் ஆறு பணிகள் மேற்கொள்ள ரூ.135.05 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டது. இப்பணிகளில் நான்கு பணிகள் முடிவுற்றன. இதர இரண்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளால் இம்மாவட்டத்தில் சுமார் 556.50 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**200 ஏரிகள் தூர்வாரும் திட்டப்பணிகள்**

மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலில் - ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் 10 ஏரிகள் தூர்வாரும் பணிக்கு ரூ.84.30 இலட்சம் அரசால் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் எட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 2359.11 ஏக்கர் பாசனம் உறுதி செய்யப்படுகிறது.



**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலையில் இரண்டு பணிகள் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஒப்புதல் பெறப்பட்டது. இவைகளில் ஒரு பணி முடிவுற்றது மற்றொரு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதன் மூலம் 310.50 ஏக்கர் பாசன வசதி பெறும்.

**மாநில ஏரிகள் நீர்ப்பாசனத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் உள்ள 19 முன்னாள் ஜமீன் ஏரிகள் ரூ.33 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 12 பொதுப்பணித்துறை ஏரிகள் ரூ.20 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் நான்கு பணிகளைத் தவிர 27 பணிகள் முடிவுற்றன. இதன் மூலம் 2,359.11 ஏக்கர் பாசனம் உறுதி செய்யப்படுகிறது.

**நபார்டு திட்டப்பணி**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ஒரு பணி ரூ.10 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது; விரைவில் முடிக்கப்படும். இதனால் 55.42 ஏக்கர் பாசன வசதி பெறும்.

இவைகளைத் தவிர, நடப்பாண்டில் (1998-99) அரசால் ஒப்புதல் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் மூன்று பணிகளுக்கு ரூ.75.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். இவைகளினால் 154.33 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

**மலைவாழ் மக்கள் நலத்திட்டப் பணி**

இத்திட்டத்தின்கீழ் சித்தேரி மலையில் ஒரு பணிக்கு ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது; இப்பணி நடப்பாண்டில் துவக்கப்பட்டு முடிக்கப்படும்.

**ஏரிகள் தூர்வாரும் திட்டப்பணிகள்**

இம்மாவட்டத்தில் நடப்பாண்டில் 11 ஏரிகள் தூர்வாரும் பணிகளுக்கு என ரூ.127 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் தற்போது பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொண்டு முடிக்கப்படும். இதனால் 976.49 ஏக்கர் பாசன உறுதிபெறும்.

# குப்பையை உரமாக்குவோம்

கழிவுப் பொருட்களில் இருந்து பயனுள்ள உரங்கள் உற்பத்தி செய்து, விளைநிலங்களுக்கு இட்டு மகசூலைப் பெருக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நம்நாட்டில் நிலவி வருகிறது. இருப்பினும் விஞ்ஞான அபிவிருத்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட அதிக மகசூல் தரவல்ல உயர்விளைச்சல் ரகங்களை நாம் தொடர்ந்து பயிர் செய்யும் நிலத்தின் பயிர்ச்சத்து மற்றும் உற்பத்தித்திறன் குறைய வாய்ப்பு இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய அங்கே உரங்களை நாம் அதிகமாக நிலத்திற்கு இட்டு விவசாயம் செய்யும்போது நிலத்தின் வேதியியல் மற்றும் இயற்பியல் தன்மைகள் பயிரிடுவதற்கு உகந்ததாகப் பாதுகாக்கப்படுவதுடன் பயிர்விளைச்சலும் அதிகரிக்கப்படுகிறது.

இந்தியாவில் வேளாண்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் நகரக் கழிவுகள் எனப் பலவகையான கழிவுகள் மிகுதியான அளவில் ஆண்டுதோறும் கிடைக்கின்றன. இவற்றைப் பயனுள்ள அங்கக உரங்களாக மாற்றுவதன் மூலம் ஆண்டிற்கு 7.1 டன் தழைச்சத்து 3.0 டன் மணிச்சத்து மற்றும் 7.6 டன் சாம்பல் சத்துகள் பாதுகாக்கப்படுகின்றன.

**கம்போஸ்ட் உரம் தயாரித்தல்:**

அங்ககக் கழிவுப் பொருட்களை நுண்ணுயிர்களின் உதவிகொண்டு பாதுகாக்கப்பட்ட சூழ்நிலைகளில் மட்கச் செய்து, இரசாயன மற்றும் இயற்பியல் தன்மைகளில் நிலையான குணங்களைப் பெற்ற அங்கக உரமாக்கும் தொழில்நுட்பத்தையே கம்போஸ்ட் உரம் தயாரித்தல் எனக் கூறுகிறோம். இந்தக் கம்போஸ்ட் உரம், இடப்படும் மண்ணில் கேடு ஏதும் விளைவிக்காமல் பயிர்ச்சத்துக்களான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அதிகரிப்பதுடன் மண்ணில் ஹியுமஸ் எனப்படும் அங்கக மட்குப் பிரிவை அதிகரித்துப் பயிர் விளைச்சலை அதிகரிப்பதுடன் மண்ணின் வளத்தையும், உற்பத்தித் திறனையும் மற்றும் நீர்ப்பிடிப்புத் தன்மையையும் பாதுகாக்கிறது.

சுருங்கக் கூறின் அங்ககக் கழிவுகளைப் பயனுள்ள ஹியுமஸாக மாற்றும் உயிரியல் முறையே கம்போஸ்ட் தயாரித்தலாகும்.

**அங்கக உரமிடுவதனால் நிலத்திற்கு ஏற்படும் நன்மைகள்:**

மண்ணின் இயற்பியல் தன்மையைப் பாதுகாத்து மண்வளத்தைப் பாதுகாப்பதில் அங்கக மட்டுப்பகுதியே (ஹியூமஸ்) முக்கியப் பங்காற்றுகிறது. இதன் அளவு மண்ணில் குறைந்துவிடாமலிருக்க மிகுந்த அங்கக எருக்களை இடவேண்டும்.

அங்கக எருக்கள் மண்ணின் இயற்பியல் தன்மை, மண்ணின் அமைப்பு, நீர்ப்பிடிப்புத் தன்மை, காற்றோட்டத் தன்மை மற்றும் பொதுபொதுப்புத் தன்மை ஆகியவற்றையும் மேம்படுத்தி மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மண் அரிப்பையும் கட்டுப்படுத்துகிறது.

அங்கக எருக்கள் மண்ணின் இயற்பியல் தன்மை, மண்ணின் அமைப்பு, நீர்பிடிப்புத் தன்மை, காற்றோட்டத் தன்மை மற்றும் பொதுப்புத் தன்மை ஆகியவற்றையும் மேம்படுத்தி மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மண் அரிப்பையும் கட்டுப்படுத்துகிறது. அங்கக எருக்கள் மங்குவதனால் உற்பத்தி செய்யப்படும் ஹியூமிக் அமிலம், பல்விக் அமிலம் மற்றும் பசைத் தன்மையுள்ள கூட்டுச் சர்க்கரைப் பொருட்கள் மண் துகள்களின் கட்டமைப்பை மேம்படுத்தி வேரின் ஊடுருவலுக்கும் வளர்ச்சிக்கும் மேலும் வேருடன் தொடர்புடைய நன்மைகள் பலதரவல்ல நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது.

இந்தியாவின் இண்டூர் மற்றும் பெங்களூர் ஆகிய இருமுறைகளில் கம்போஸ்ட் உரம் தயார் செய்யப்படுகின்றன. இண்டூர் முறையில் அங்ககக் கழிவுகள் சாணக் கரைசலினால் நனைக்கப்பட்டு ஆறு மீட்டர் நீளமும், ஒரு மீட்டர் அகலம் மற்றும் ஒரு மீட்டர் உயரம் உள்ள படுக்கையாகப் பரப்பப்படுகின்றன. பதினைந்து நாட்களுக்கொரு முறை நீர் தெளிப்பதுடன், எருவை நன்றாகக் கிளறிவிடுவதனால் மட்குதல் துரிதப்படுத்தப்படுகிறது. இம்முறையில் தயார் செய்யப்படும் கம்போஸ்ட் எருவில் சுமார் 0.8 சதம் தழைச்சத்து, 0.3 சதம் மணிச்சத்து மற்றும் 1.5 சதம் சாம்பல் சத்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பெங்களூர் முறையில் நகரக் கழிவுகளும், மனிதக் கழிவுகளும் உரமாக மாற்றப்படுகிறது. இம்முறையில் ஒருமீட்டர் அகலமும், ஒரு மீட்டர் ஆழமும் மற்றும் கழிவுகள் அளவுக்குத் தகுந்தபடி நீளமும் உடைய குழிகள் ஒன்று முதல் ஐந்து மீட்டர் வரை இடைவெளியிட்டு தோண்டப்பட்டு, அதில் நகர மற்றும் மனித கழிவுகள் 15 செ.மீ. உயரம் உள்ள படுக்கையும் அதன்மேல் 1.5 செ.மீ. உயரம் உள்ள கால்நடைக் கழிவுகளும் மாறிமாறி அடுக்கப்படுகின்றன.

நிலமட்டத்திற்கு மேலும் 15 செ.மீ. உயரம் வரை கழிவுகளை அடுக்கி அதன்மேல் களிமண் கொண்டு பூசவேண்டும். இம்முறையில் காற்றற்ற நிலையில் மட்குதல் நடைபெறுகிறது. எனவே, கழிவுகள் மட்கத் தாமதமாகிறது. இருப்பினும் இதில் விரயம் ஏதும் இல்லாமல் அதிக அளவு கம்போஸ்ட் உரம் கிடைக்கிறது.

### கரும்புச் சோகை கம்போஸ்ட் உரம் தயாரித்தல்:

ஒரு டன் கரும்புசோகையை 8 முதல் 10 செ.மீ. நீளமுள்ள துண்டுகளாக வெட்டி ஒவ்வொன்றும் 100 கிலோ எடையுள்ள 10 குவியல்களாகப் பிரித்து வைத்துக்கொண்டு பண்ணையில் ஓரமான நிழற்பாங்கான இடத்தில் 3 மீட்டர் என்ற பரப்பில் ஒரு குளியல் கரும்புச் சோகையைப் படுக்கையாகப் பரப்பி அதன்மேல் ஒரு பாட்டில் பிளிரோட்டஸ் காளான் வித்தைச்சீராகத்தூவி தண்ணீர் தெளிக்கவேண்டும் (60 சதம் நீர்ப்பதம் வரும் வரை). இதன்மேல் அடுத்த 100 கிலோ சோகையைப் படுக்கையாகப் பரப்பி 1 கிலோ யூரியாவைச் சீராகத் தூவி நீர் தெளிக்கவேண்டும். பின்பு மூன்றாவது படுக்கையைப் பரப்பி அதன்மேல் ஒரு பாட்டில் டிரைக்கோடெர்மா பூஞ்சானத்தைச் சீராகத் தூவி, தண்ணீர் தெளிக்கவேண்டும். இதே மாதிரி மாற்றி மாற்றிப் படுக்கைகளின் மேல் பிளிரோட்டஸ், யூரியா, டிரைக்கோடெர்மா என இட்டு அனைத்துப் படுக்கைகளையும் தயார் செய்து மேற்பரப்பில் 250 கிலோ எடையுள்ள வண்டல் மண்ணைச் சீராகப் பரப்பி தண்ணீர் தெளிக்கவேண்டும்.

பத்து நாட்களுக்கொரு முறை இந்தக் கம்போஸ்ட் குவியலை நன்கு கிளறிவிடுவதுடன் நீர் தெளித்தல் வேண்டும். நாற்பத்தைந்து நாட்களில் நன்கு மட்கிய உரம் தயாராகிவிடும். இதன் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து மேலும் கரிம தழைச்சத்து விகித அளவுகள் தொழு உரத்திற்கு நிகராக இருப்பதனால் நாம் குறைந்த செலவில் கம்போஸ்ட் உரம் தயார் செய்ய முடிகிறது.

### தென்னை நார்க்கழிவு உரம்:

தென்னை நார்க்கழிவு பெரும்பாலும் நார்த் தொழிற்சாலைகளின் அருகே பெரும் குவியல்களாகக் குவிக்கப்பட்டு அந்த இடத்தையும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் பெருமளவு பாதிக்கிறது. சுமார் 17 இலட்சம் டன் வரை தமிழகத்தில் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இவற்றை மக்கச் செய்து கழனியில் இயற்கை உரமாகப் பயன்படுத்தலாம்.

ஒரு டன் நார்க்கழிவை மக்கவைக்க 5 கிலோ யூரியாவும், 5 பாட்டில் பிளிரோட்டஸ் வித்தும் தேவைப்படுகின்றது. நிழலடியில் 5மீ x 5மீ பரப்புள்ள இடத்தில் 100 கிலோ நார்க்கழிவைச் சீராகப் பரப்பவேண்டும். அதன்மீது ஒரு பாட்டில் காளாண் வித்தினைத் தூவிவிடவேண்டும். பிறகு 1 கிலோ யூரியாவைத் தூவிவிட வேண்டும். பிறகு நார்க்கழிவு பூஞ்சாண வித்து, நார்க்கழிவு யூரியா என்று மாற்றி மாற்றி 10 அடுக்குகள் தென்னை நார்க்கழிவைப் பரப்பிவிடவேண்டும்.

ஈரப்பதம் சுமார் 60 விழுக்காடு இருக்குமளவிற்குத் தண்ணீர் தெளிக்கவேண்டும். ஒரு மாதம் கழித்து, மக்கிய நார்க்கழிவு உண்டாகும். இதன் கொள்ளளவும் சுமார் பாதியாகக் குறைந்து பழுப்பு நிறத்திலிருந்து கரும் பழுப்பு நிறமாக மாறிவிடும்.

### மக்கிய தென்னை நார்க்கழிவு உபயோகிப்பதால் ஏற்படும் நன்மைகள்:

- மண்ணின் பொது பொதுப்புத் தன்மை அதிகரிக்கிறது.
- மண்ணின் நீர்ப்பிடிப்பு வைக்கும் தன்மை அதிகரிக்கிறது.



- பயிர் விளைச்சல் சுமார் 20 விழுக்காடு அதிகரிக்கிறது .
- நீர் உபயோகிப்புத் திறன் அதிகரிக்கிறது.
- களர் உவர் நிலம் சீரமைக்க உதவுகின்றது.
- கரிசல் நிலங்களில் விரிசல் குறைகின்றது.
- மண்ணின் பௌதிகக் குணங்களை மேம்படுத்துகிறது.
- களைச் செடிகளின் அடர்த்தியைக் குறைக்கின்றது.
- நார்க்கழிவைக் கோழிப் பண்ணைகளில் சிறந்த தரை விரிப்பாகப் பயன்படுத்தும்போது கோழி எச்சத்தின் உரத் தன்மையை மேம்படுத்துகிறது.

### பார்த்தீனியம் நச்சுச்செடியை உரமாக்குதல்:

பார்த்தீனியம் நச்சுக்களைச் சாகுபடி மற்றும் தரிசு நிலங்களில் கணிசமான அளவு வேகமாகப் பரவி பயிர் விளைச்சலைப் பாதிப்பதோடு மனிதனுக்கும், கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுத்துகிறது. மனிதனுக்குத் தோல், அரிப்பு, ஆஸ்துமா போன்ற வியாதிகளை உண்டாக்குகிறது.

பார்த்தீனியத்தை ஒழிக்க அதை மக்கச்செய்து உரமாக்குதல் ஒரு வழியாகும். பார்த்தீனியத்தில் கரிமம்: நைட்ரஜன் விகிதம் 43 ஆக உள்ளது. இதைக் குறைக்கவேண்டும்.

பார்த்தீனியம் மக்கச் செய்ய மேடான, நிழலான இடத்தைத் தேர்ந்தெடுத்து, பார்த்தீனியம் செடியை 10-15 செ.மீ. அளவு வெட்டி 100 கிலோவை 515 மீட்டர் அளவு நிலத்தில் பரப்பிவிட வேண்டும். பின் மக்கச்செய்யும் நுண்ணுயிர்க்கலவை

(பிளிரோட்டஸ் டிரைகோடெர்மா) ஒரு குடுவை அளவில் அதன்மீது சீராகப் பரப்பிவிடவேண்டும். இதன்மேல் 100 கிலோ பார்த்தீனியம் செடி துண்டுகளைப் பரப்பிவிடவேண்டும்.

பிறகு இப்பரப்பின் மீது ஒரு கிலோ யூரியாவைச் சீராகத் தூவிவிட வேண்டும். இம்மாதிரி பார்த்தீனியம், நுண்ணுயிர்க்கலவை, பார்த்தீனியம் யூரியா என்று அடுக்குகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக்கொண்டே வரவேண்டும். சுமார் ஒரு மீட்டர் உயரம் வரை இவ்வாறு அடுக்கவேண்டும்.

ஈரப்பதம் 50 முதல் 60 விழுக்காடு வரை இருக்க, பூவாளி மூலம் நீர் தெளிக்கவேண்டும். கடைசியில் சிறிதளவு மண்கொண்டு மேலே பூசவேண்டும். மக்கும்பொழுது ஈரப்பதம் 50-60 விழுக்காடு இருக்கவேண்டும். மக்கிய பார்த்தீனியம் கம்போஸ்ட் 40 முதல் 50 நாட்களுக்குள் தயாராகிவிடும்.

தொழு உரத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிக அளவு உரச்சத்துக்கள் இவற்றில் உள்ளன. இரசாயன உரங்களோடு பார்த்தீனியம் கம்போஸ்ட் அளிப்பதன் மூலம் அதிகம் பயிர்விளைச்சலும் கிடைக்கும்.

**நகரக் கழிவுகளை உரமாக்குதல்:**

நம்நாட்டில் மிகப்பெரிய நகரங்களான கல்கத்தா, மும்பை, டெல்லி மற்றும் சென்னை ஆகியவை நாள் ஒன்றுக்கு சுமார் 2,000 டன் நகரக் கழிவுகளை வெளியேற்றுகின்றது. தற்பொழுது இக்கழிவுகள் கம்போஸ்ட் உரமாக மாற்றப்பட்டு விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

சராசரியாக நகரத்தில் வாழும் தனிமனிதன் ஒருவன், நாள் ஒன்றுக்கு 750-1000 கிராம் கழிவினை உற்பத்தி செய்கின்றான். இவைகள் சமையலறைக் கழிவுகள் மற்றும் செல்லுலோஸ் நிறைந்த காகிதக் கூளங்களையே அதிகம் உள்ளடக்கியிருப்பதால் செல்லுலோஸை மக்கச் செய்யும் நுண்ணுயிர்களின் மேல் கவனம் செலுத்தப்படுகின்றது.

> **நிர்வாகப் படகில் ஏறி, தூய்மை என்னும் துடுப்பு கொண்டு - அதனை நேர்மையாக - வேகமாகச் செலுத்தி, இலட்சியக் குறியை அடைவோம்.**
>
> **- கலைஞர்**

ஒரு டன் நகரக் கழிவுகளை உரமாக மாற்ற 5 பாட்டில்கள் பிளிரோட்டஸ் சோஜா - காஜீ மற்றும் 5 கிலோ யூரியாவும் தேவைப்படுகின்றது. மண்புழுக்கள் நகரக் கழிவினை மட்கச்செய்து சிறந்த உரமாக மாற்றுகின்றன. இவ்வகையான உரங்கள் 'மண் தொழுஉரம்' என்று அழைக்கப்படுகிறது.

அங்கக கம்போஸ்ட் உரங்களின் நன்மைகள் மிகப்பல. இவற்றைத் தயார் செய்யும் முறைகளைத் தெரிந்துகொண்டு திறம்படச் செய்யும்போது நாம் குறைந்த செலவில் அதிகச் சத்துக்கள் மிகுந்த அங்கக உரங்களை நமது பண்ணையிலேயே தயார் செய்துவிடலாம். இதனால் எருக்களைப் பல இடங்களிலிருந்து பண்ணைக்கு எடுத்துவரும் செலவு குறைகிறது. இந்தக் கம்போஸ்ட் உரங்கள் தயார் செய்யப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிரிகள் (பாக்டீரியா மற்றும் பூஞ்சாணம்) கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள சுற்றுச்சூழல் பிரிவில் தயார் செய்து விற்கப்படுகின்றன. தேவையுள்ள விவசாயிகள் பேராசிரியர் மற்றும் தலைவர், சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல் : **மு. சாகுல்அமீது மற்றும் கு.இராமசாமி**
சுற்றுச்சூழல் அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

# தெரிந்து கொள்வோம்!

**முப்படைத் தளபதிகள் ஓய்வு பெறும் வயது**

தரை படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைமைத் தளபதிகள் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்துவந்தது. தற்போது முப்படைத் தளபதிகளும் 60 வயதில் அல்லது 3 ஆண்டு பதவி வகித்ததும் ஓய்வு பெறுகிறார்கள். இந்த நிலையில் முப்படைத் தளபதிகளின் ஓய்வுபெறும் வயது 62ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**இதையடுத்து, 62 வயதை அடைந்தாலோ அல்லது 3 ஆண்டு பணி முடித்த உடனேயோ, முப்படைத் தளபதிகள் ஓய்வு பெறுவார்கள்.**

**ரஷியாவில் இந்தியர் சாதனை**

இந்தியாவைச் சேர்ந்தவர் உதய் மகாதேவ் டால்வாகன் (வயது 39). ரஷியத் தலைநகர் மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றுகிறார். இவரது பொழுதுபோக்கு, டைப்ரைட்டர் மூலம் ஓவியங்கள் வரைவது ஆகும்.

தற்போது அதுவே இவர் கின்னஸ் சாதனையாளர் வரிசையில் இடம்பெற உதவி உள்ளது.

டைப்ரைட்டர் மூலம் இவர் வரைந்த லதாமங்கேஷ்கர் உருவப் படம் இவரை உலகப் புகழ் பெறச் செய்துவிட்டது. 21 அடி 4 அங்குலம் நீளமும், 13 அடி 3 அங்குலம் அகலமும் உள்ள அந்த ஓவியத்தை வரைந்து முடிக்க இவருக்கு 236 மணி நேரங்கள் பிடித்ததாம். டைப்ரைட்டர் கருவியில் காகிதத்தை நகர்த்தாமலே ஓவியம் வரையும் திறமை படைத்தவர் இவர். காந்தி, நேரு, ராதாகிருஷ்ணன், டால்ஸ்டாய், லெனின், ஸ்டாலின் ஆகியோரது உருவப் படங்களையும் வரைந்து உள்ளார் இவர்.

**ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த ஊனமுற்ற நீச்சல் வீரர்**

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஜான்மேக்லின். 36 வயது நிரம்பிய இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு டிரையத்லான் போட்டிக்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்துகொண்டிருந்த லாரி இவர் மீது மோதியது. இதில் அவருடைய கால்கள் செயல் இழந்துவிட்டன.

இந்த நிலையில் ஆகஸ்டு 14ஆம் தேதி ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அப்போது மோசமான தட்பவெப்பம் இருந்ததால் அந்த முயற்சியைத் தள்ளிவைத்தார்.

பின்னர் மீண்டும் ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயற்சி மேற்கொண்டார். அதன்படி 12 மணி நேரத்தில் அந்தக் கால்வாயைக் கடந்து சாதனை படைத்தார். கால் ஊனமுற்ற வீரர் ஒருவர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சாதனை படைப்பது இதுதான் முதல் முறையாகும்!

# மத வேற்றுமைகளைக் கடந்து நல்லிணக்கம் காணுவோம்!

- முதலமைச்சர் கலைஞர்



"மத நல்லிணக்கம் காணவும், மாநில உரிமைகளை நியாயமாகப் பெறவும், தீண்டாமை என்னும் தீயை அணைக்கவும் ஐந்து கட்சிகளைக் கொண்ட செயல்வீரர்கள் ஓடி ஆடி உழைத்து, மிகச்சிறப்புற, சீருற, ஏற்றமுற, எழுச்சியுற நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காணுகிற நல்ல வாய்ப்புப் பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெருமையடைகிறேன். ஐந்து கட்சிகள் இன்றைக்கு ஒரே மேடையில். ஐந்து கட்சிகள்தானா? போதுமா? என்று யாராவது கேட்டால், அவர்களுக்கு நான் சொல்கிற பதில் - கையிலிருப்பது ஐந்து விரல்கள்தான்.

அந்த ஐந்து விரல்களையும் மடக்கினால் முஷ்டியாகும். முஷ்டி - தீண்டாமையை, மதவெறியை, மாநில உரிமைகளைத் தடுக்கின்ற சக்திகளைக் குத்துகின்ற முஷ்டி. குத்தி வெற்றி பெறுகிற முஷ்டி. ஐந்து விரல்களும் மடங்கினால் முஷ்டியாகும். அடுத்தடுத்து கட்சிகள் வந்தால் என்ன செய்வது? பத்து விரல்கள் பத்தானால் இரண்டு குத்து. இந்த விபரீதங்களை வீழ்த்துவதற்குத் தீண்டாமையை வீழ்த்துவதற்கு, மதவெறியை வீழ்த்துவதற்கு, மாநில உரிமைகளைப் பெறுவதற்கு, அதற்கான தொடக்கமாக மதுரை மாநகரில் இந்த ஐந்து கட்சிகளுடைய மாநாடு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மத நல்லிணக்கத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அனைவரும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து நடத்திவரும் பேரணி**

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மத ஒற்றுமையை வளர்க்கின்ற வகையில், Phool Walon Ki Sair என்று அழைக்கப்படுகின்ற பூக்காரர்களுடைய பேரணி ஒன்று ஆண்டுதோறும், புதுடெல்லியில் நடத்தப்பட்டு வருகின்றது. அந்தப் பேரணிக்குப் பெயர் அந்த மொழியில் சொல்லவேண்டுமானால் பூல் வாலோன் கி சாயர், பூக்காரர் பேரணி ஒவ்வொரு ஆண்டும் புதுடெல்லியில் இப்போது நடத்தப்படுகின்றது. இந்த விழா மொகலாயர் காலத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்ற விழாவாகும். டெல்லிக்கு அருகிலுள்ள மெஹ்ருலி என்ற கிராமத்தில் நடத்தப்படும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த விழா இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கருதியும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலும், பேரரசர் அக்பர் அவர்களால் (கி.பி.1556-1605) துவக்கி வைக்கப்பட்டது.

இந்த விழாவில் முஸ்லிம்களும், இந்துக்களும் சகோதர உணர்வுடன் தங்களுக்கிடையில் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல், மத ஒற்றுமையுடனும் பெருமளவில் கலந்துகொள்வார்கள். இவ்வாறு மிக ஒற்றுமையோடு இந்துக்களும், முஸ்லிம்களும் கலந்துகொண்டு விழா எடுப்பதைக் குலைத்திடும் வகையில், வஞ்சக எண்ணத்தோடு 1942ஆம் ஆண்டு பிரித்தாளும் சூழ்ச்சி கொண்ட ஆங்கிலேயே அரசு அந்த விழாவையே தடை செய்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருசேர எடுத்த விழாவை 42-ஆம் ஆண்டு வெள்ளைக்கார சர்க்கார் தடை செய்தது.

அதற்குப் பிறகு சுதந்திரம் பெற்றதும் 1961-ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்து முஸ்லிம்

ஒற்றுமையினை மேன்மேலும் வளர்க்கக் கருதி, தடை செய்யப்பட்ட அந்தப் பூக்காரர் பேரணிக்குப் புத்துயிர் ஊட்டினார்.

இந்துக்களும், முஸ்லிம்களும் அவரவர்களது மத உணர்வைப் பேணி அவரவர் மத உணர்வுகளுடனேயே ஒற்றுமையாக இணைந்து கொண்டாடும் ஒரே விழா இந்த மலர்ப் பேரணி விழாவாகும்.

பழம்பெருமை மாறாமல், அதன் மரபுகள், முறைகள் அப்படியே இன்றைக்கும் அந்த விழாவிலே கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன.

விழா நாளன்று இந்துக்களும், முஸ்லிம்களும் - முஸ்லிம்கள் தர்க்காவிலிருந்தும்; இந்துக்கள் காளிகோவிலில் இருந்தும் அணி வகுத்து ஒன்றாகச் சென்று இறைவனைப் பிரார்த்தித்து நலம் வேண்டுவார்கள்.

இந்து முஸ்லிம் இணைந்து செல்லும் இந்தப் பேரணியின் முன்னால் வனப்பு மிக்க வெல்வெட்டால் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த வண்ணப்பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பெரிய விசிறிகள் (பங்கா) எழிலோடு எடுத்துச் செல்லப்படும்.

இதைத் தொடர்ந்து கலைக்குழுவினர் கலை நிகழ்ச்சிகள் நடத்தியபடியே செல்வார்கள்.

இந்த மலர் விசிறிகள் புதுடெல்லி மெஹ்ரூலியில் உள்ள அக்பர் காலத்திய முகாலாயக் கோட்டைக்கு எடுத்து வரப்படுகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் தங்கள் பங்காக்களையும், அதற்குரிய விசிறிகளையும் கலைக் குழுக்களையும் அனுப்பி பங்கேற்கச் செய்கின்றார்கள்.

ஒருவார காலம் நடைபெறும் இந்த விழாவில், இறுதி நாளன்று கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

1961-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு பங்காக்கள் மற்றும் கலைக்குழுக்களை அனுப்பி, இந்த விழாவிலே பங்கேற்கச் செய்கின்றது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பங்காவுக்கும் கலை நிகழ்ச்சிக்குமெனப் பெரும்பாலான ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குப் பரிசுகள் கிடைத்திருக் கின்றன.

கடந்த ஆண்டுகூட இந்தப் பூக்காரர் பேரணியில், இரண்டு பங்காக்கள் எடுத்துச் செல்லப்பட்டு - அதிலும் குறிப்பாக மதுரையைச் சேர்ந்த டாக்டர் சோமசுந்தரம் குழுவினரின் கலைநிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டது.

இந்தக் கலை நிகழ்ச்சிக்கு மதுரை சோமசுந்தரத்திற்கு முதல் பரிசும், அந்தக் கலைக்குழுவை அனுப்பியதற்காக முதலமைச்சர் என்ற முறையிலே எனக்கு டெல்லி மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் பாராட்டுக் கடிதமும் கிடைத்தது.

இந்த ஆண்டும் அக்டோபர் 11-ஆம் நாள் பூக்காரர் பேரணி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த விழாவிலே கலந்துகொள்ள இந்த ஆண்டும் கலைக்குழுவை அனுப்ப கோரிக்கை அனுப்பி நமக்கு அங்கிருந்து செய்தி வந்துள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்று, அந்தக் கலைக்குழுவை அங்கே அனுப்பவும் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பூக்காரர் பேரணியை நடத்தவும், அதற்கென்று தமிழக அரசின் சார்பாக 55 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இங்கே தெரிவிப்பதன் காரணம் - அக்பர் காலத்திலேயே இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்திட வேண்டும் என்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக இந்தப் பூக்கார விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அது இடைக்காலத்தில் வெள்ளைக்கார சர்க்காரால் தடை செய்யப்பட்டு, நேரு பெருமான் இந்தியாவின் பிரதமர் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில், 61-ஆம் ஆண்டு முதல் மேலும் தொடர்ந்து நடத்தப்பெற்று, இப்பொழுதும் நடைபெற்று வருகின்ற விழாவாகும்.

ஆனால், டெல்லியில் மாத்திரம் இந்த விழா நடத்தப்படுகின்றது. இந்தப் பூக்காரர் விழாவை ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரத்திலும் நடத்தவேண்டும். தமிழ்நாட்டில் சென்னை தலைநகரத்திலே மாத்திரமல்ல, மதுரை நகரத்திலும், திருச்சியிலும் நடத்தவேண்டும். இப்படி இந்துக்களும், முஸ்லிம்களும் மத வேற்றுமை இல்லாமல் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும், மன ஒற்றுமையுடன் பழகுகிற அந்த உணர்வு வளர்ந்திட வேண்டும்.

**விநாயகர் ஊர்வலத்தை வரவேற்ற முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும்**

பத்திரிகைகளில் ஒரு செய்தி பார்த்தேன், நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக்கண்ணு குறிப்பிட்டதைப் போல, விநாயகர் சதுர்த்தி விக்னேஸ்வரர் ஊர்வலம் பல இடங்களில் நடைபெற்ற நேரத்தில், நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். காயல்பட்டிணம் - அது முஸ்லிம்கள் மாத்திரமே வாழ்கின்ற நகரம். நான் பலமுறை அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் பெருமக்கள் அங்கு வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் விநாயகர் ஊர்வலம் சென்றபோது, முஸ்லிம் பெருமக்களும், தாய்மார்களும், பெரியோர்களும் அந்த ஊர்வலத்தை வரவேற்று மாலை மரியாதை செய்து தங்களது ஆதரவை, வரவேற்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

காயல்பட்டினத்தில் மாத்திரமல்ல; பழனியிலே அந்த விநாயகர் ஊர்வலத்தில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கோவையை அடுத்துள்ள பல்லடத்தில் இந்த விநாயகர் ஊர்வலம் வந்தபோது, அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள், இஸ்லாமியப் பெருமக்கள், பெரியவர்கள் இளைஞர்கள் இவர்கள் எல்லாம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.8.1998 அன்று தேனி மாவட்டம் - பெரியகுளம் அருகில் உள்ள சோத்துப்பாறை நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார்.

கூடி நின்று அந்த ஊர்வலத்தை வரவேற்று, வந்தவர்களோடு நல்ல முறையிலே பழகி, பாராட்டி மகிழ்ந்து களித்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

இது, சிலருக்கு கடவுளை வணங்கினார்களா? அந்த மதத்தின் கடவுளை வணங்கினார்களா? என்று கேள்வி எல்லாம் எழுப்பக்கூடும். இரு மதத்தாரும் ஒரு கடவுளை வணங்கினார்கள் என்று அதைக் கருணாநிதி வரவேற்றுப் பேசலாமா என்று கேட்கக்கூடும்.

நான் நாத்திகன், ஆத்திகன் என்பதை இரண்டாவதாக வைத்து - நாத்திகரோ, ஆத்திகரோ அவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கிறார்களே என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். விநாயகர் சதுர்த்தியை இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் வரவேற்று மகிழ்வதும், அதைப்போலவே அடுத்து ஒருநாள் இஸ்லாமியப் பண்டிகையில் இந்துக்கள் கலந்துகொள்கிற நிலைமை ஏற்படுவதும், முன்னுக்குப்பின் முரண் என்று யாராலும் கூறமுடியாது.

நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோமே மத நல்லிணக்கம். அங்கு நல்லிணக்கத்திற்கு ஏற்ற ஒரு வழி என்பதை இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மத நல்லிணக்கம் இன்று நேற்றல்ல; எத்தனையோ வேறுபாடுகளுக்கிடையே எப்படியெல்லாம் வளர்ந்து வலுப்பெற்றது என்பதை திரு.வி.க.அவர்கள் இளைஞர்களுக்கு... என்று எழுதிய ஒரு கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் வேதனை வினா**

அவர் சொல்கிறார்: "தமிழன் யார்? தொன்றுதொட்டுத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரும், தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவரும் தமிழராவர் என்று கூறலாம். இவருள் சைவரிருக்கலாம்; வைணவரிருக்கலாம்; அருகரிருக்கலாம்; (அருகர் என்பது ஒரு மதம்), புத்தரிருக்கலாம்; ஆத்திகரிருக்கலாம்; நாத்திகரிருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதை மட்டும் மறத்தலாகாது. ஈண்டுச் சங்கத்தார் காலநிலை நினைவிற்கு வருகிறது. அவர் அனைவரும் ஒரு கொள்கையுடையவரல்லர். அதாவது சங்கத் தமிழ்க்காலம், அந்த சங்க காலம் நினைவுக்கு வருகிறது. சங்க காலத்திலே உள்ள அனைவரும் ஒரே கொள்கை உடையவர் அல்லர். அவருள் சைவர், வைணவர், அருகர், புத்தர் முதலியோரிருந்தனர். அவரனைவருஞ் சகோதர நேயத்துடன் வாழ்ந்து போயினர். காரணமென்ன? அவர்தங் கருத்து, சமய வேற்றுமை மீதும், பிற வேற்றுமை மீதும், சென்றதில்லை. அவர் தம்மைத் தமிழர் - சகோதரர் - என்று எண்ணி, ஒருமையுள்ளங்கொண்டு, தமிழ்த் தாய்க்குச் சேவை செய்தனர். சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் இவர் மூவரும் ஒரு சமயக் கொள்கையுடயவரா? இல்லை. ஒருவர் சைவர்; மற்றொருவர் அருகர்; இன்னொருவர் புத்தர்; இவர்களுக்குள் எத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாடு நிலைத்திருந்தது.

தமிழ் மாணாக்கர்களே! சிந்தியுங்கள், சேரன் செங்குட்டுவனும், இளங்கோவடிகளும், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சேய்கள். ஆனால் அவர்கள் வெவ்வேறு சமயக்கொள்கையுடையவர்களாக வாழ்ந்தனர். அவரிடையே எறி,' பகை, பூசல் இருந்தனவா? ஆன்ம நேயமன்றோ ஊடுருவியிருந்தது? உண்மைத் தமிழன்புக்கு முன், சிறு சிறு வேற்றுமைகளெல்லாம் ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போலாகும். அவரைப் போல் ஏன் இக்காலத் தமிழர் வாழ்தலாகாது?" என்று இன்று இக்காலத் தமிழர்களைப் பார்த்துக் கேட்கின்றார். சங்க காலத்தில்

இருந்து எவ்வளவோ வேற்றுமைகளுக்கிடையே இருந்து ஒற்றுமையோடு தமிழர்கள் வாழ்ந்தார்களே! அந்த வாழ்க்கையை இன்று எப்படி வாழ மறந்தார்கள்?’

- என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க.கேட்கிறார்.

அவர் கேட்டுப் பல ஆண்டு காலமாகிவிட்டது. ஆனால் இன்னமும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மேடையிலே நானும் மற்றும் நான்கு இயக்கங்களுடைய தலைவர்களும் இதைத்தான் இன்றைக்குக் கேட்கிறோம். இன்னமும் கிராமப்புறங்களில் தீண்டாமை தலைவிரித்தாடுகிறதே! இது நியாயம்தானா? என்று கேட்கிறோம். நாகரிகத்தின் வளர்ச்சிப் பகுதிகள் என்று குறிப்பிடுகிற நகர்ப்புறங்களில்கூட தீண்டாமை இன்னும் தீர்ந்தபாடில்லையே என்ன காரணம்? என்று காரணத்தை அறிய விரும்புகிறோம். அதை வீழ்த்துவதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிதான் இந்த மாநாடு. மதுரையில் ஒரு மாநாடு நடத்திவிட்டால் மத நல்லிணக்கம் வந்துவிடுமா? தீண்டாமை ஒழிந்துவிடுமா? மாநில அதிகாரங்கள் குவிந்துவிடுமா? என்று யாராவது கேட்பார்களானால் அதற்காகத் தொடங்காமலே இருந்துவிடலாமா என்ற கேள்வியைத்தான் நாம் கேட்கவேண்டும். நாம் தொடங்குவோம்; தொய்வு ஏற்படாமல் தொடங்குவோம் - அதைத்தான் என்னுடைய அருமை நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் சங்கரய்யா இங்கே பேசும்போது குறிப்பிட்டார்.

‘‘நான் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினேன். திரு.மூப்பனாரை சந்தித்துப் பேசினேன். அவர்களெல்லாம் இணக்கமாக இருக்கிறார்கள்’’ என்று சங்கரய்யா குறிப்பிட்டார். “எல்லோரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் வெற்றி காண உங்கள் கொள்கையிலே வெற்றிகாண, பயணம் போவோம்’’ என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பயணத்திற்குத் தி.மு.கழகமும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே உறுதிபட எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

அவரே இங்கே எடுத்துச் சொன்னதைப் போலத் தி.மு.கழகம் என்கின்ற இந்த இயக்கம் திராவிட இயக்கத்தினுடைய ஒரு கூறு. தந்தை பெரியார் அவர்கள் சாதியை வீழ்த்த, மதவெறியை மாய்க்க போர்க்கோலம் பூண்டவர். அணுகுமுறையில் மாத்திரம் சிறு மாற்றங்களைச் செய்துகொண்டு எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களை வழி நடத்தியவர். எனவே எங்களைப் பற்றி இந்தப் பிரச்சினையிலே உள்ள கொள்கை உறுதியைப் பற்றி சங்கரய்யா அவர்களானாலும், நம்முடைய நல்லக்கண்ணு அவர்களானாலும், நம்முடைய வடிவேலு அவர்களானாலும், திரு.மூப்பனார் அவர்களானாலும் மிக நன்றாக அறிவார்கள். எனவே உறுதியோடு நடைபோட உங்களோடு வரத் தயாராக இருக்கிறோம்.

மத நல்லிணக்க மாநாட்டோடு இணைக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு உரிமைகளைப் பற்றியும் மிகக் கடுமையாக வீராவேசமாக நம்முடைய தோழர் சங்கரய்யா அவர்கள் இங்கே முரசு கொட்டியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டு விடும் என்றெல்லாம் பயமுறுத்தப்படுகின்ற நேரத்திலே எழும்புகின்ற கோஷமல்ல - மாநில சுயாட்சிக் கோஷம்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து, 1969ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் சில வாரங்களுக்கெல்லாம் டெல்லிக்குச் சென்றேன். டெல்லியில் 69 மார்ச்சுத் திங்கள் 17ஆம் தேதி - ஐம்பதுக்கு மேற்பட்ட இந்திய மாநிலங்களிலே உள்ள பல்வேறு பத்திரிகைச் செய்தியாளர்கள் - என்னைச் சந்தித்து ‘உங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் - அதைப்பற்றி என்ன செய்யவிருக்கிறீர்கள்’ என்று கேட்டபோது - நான் அவர்களுக்கு அளித்த பதில்தான் - ‘‘மைய - மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படத் கூடிய அதிகாரங்களைப் பரிந்துரைப்பதற்காக நிபுணர் குழு ஒன்றினை அமைப்பதுபற்றி நான் ஆலோசித்துவருகிறேன்” என்று குறிப்பிட்டேன்.

குறிப்பிட்டது மாத்திரமல்ல; டெல்லியிலிருந்து திரும்பியவுடன் 1969 ஆகஸ்ட் 19ஆம் நாள் டாக்டர் பி.வி.இராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களையும், சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட மூவர் குழு ஒன்றை அரசின் சார்பில் அமைத்தேன்.

**மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்தது மார்க்சிஸ்ட் கட்சி**

அந்தக் குழுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். என்னென்ன வகையிலே அளிக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து ஒரு நீண்ட அறிக்கையைத் தந்தது. அந்த அறிக்கையை முரசொலிமாறன், இரா.செழியன் இருவர் தலைமையிலே இயங்கிய குழு ஆராய்ந்து அதை அமைச்சரவையிலே வைத்து விவாதித்து, 1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், 356வது பிரிவு அறவே அகற்றப்பட வேண்டும் - அரசியல் சட்டத்திலிருந்து; என்ற இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தபோது அதை ஆதரித்த கட்சி அன்றைக்கு சட்டப்பேரவையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன்.

இதிலே ஒரு வரலாற்று உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது. இந்திய சுதந்திரத்திற்கு முன்பே தோழர் ரணதிவே தலைமையிலே நடைபெற்ற - அன்றைக்குக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த அந்தக் காலக்கட்டத்திலே - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி - மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். மாநில சுயாட்சி வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சிதான்.

அது மாத்திரமல்ல; இந்திய சுதந்திரத்திற்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி கூட.- நேரு பெருமான் தலைமையிலே இருந்த காங்கிரஸ் கட்சி மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொண்ட கட்சிதான்.

அதற்குப் பிறகு சில மாற்றங்கள் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுவிட்டன. எனவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருகின்ற அந்தக் கொள்கையிலே தளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அன்று முதல் இன்று வரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இன்றைக்குத் தமிழகத்திலே உருவாகி வளர்ந்துவருகிற - வளர்ந்து வந்திருக்கின்ற நம்முடைய மூப்பனார் தலைமையிலே உள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதா தளமும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற இயக்கங்களாகும்.

**சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானம்**

74-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே இராஜமன்னார் குழு அந்த அறிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை நான் முன்மொழிந்து சட்டப்பேரவையிலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் இதுதான்:-

“மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவினர் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்.

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று - மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது” என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

- என்று 74-ஆம் ஆண்டு 16.4.74 அன்று சட்டப்பேரவையிலே என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அன்றைய இந்தியப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

அதற்கு முன்பே இராஜமன்னார் குழுவின் அறிக்கையைப் பிரதமர் இந்திராகாந்திக்கு 71-ஆம் ஆண்டு நான் அனுப்பி வைத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட பிரதமர் இந்திராகாந்தி 1971-ஆம் ஆண்டு நான் அனுப்பிவைத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட பிரதமர் இந்திராகாந்தி 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம்தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் -

**Dear Thiru Karunanidhi**

**I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State-Relations Inquiry Committee. Your Government will probably examine the recommendations of this report. As you know the Administrative Reforms commission also went into the question and has already submitted a report which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.**

**With regards,**

**Yours Sincerely,**

**(Sd.) INDIRA GANDHI**

அன்புள்ள திரு. கருணாநிதி

நீங்கள் சூன் 15-ஆம் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய மாநில உறவுகள் ஆய்வுக்குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றைக் கடிதத்துடன் அனுப்பியுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரைகளை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக்குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம். இவை முக்கியமான பிரச்சினைகள் என்பதால் எல்லா முதலமைச்சர்களுடன் இதுகுறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணியுள்ளோம்.

தங்கள் அன்புள்ள,

(ஒம்) இந்திரா காந்தி

- என்று 71-ஆம் ஆண்டு எனக்குப் பதில் அனுப்பினார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு சர்க்காரியா கமிஷன் குழு என்று மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்திட ஒரு குழுதான் போடப்பட்டதே தவிர, அரசியல் சட்டத்திலே ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்து மாநிலங்களுக்கு அதிக

அதிகாரங்களை அளிக்கவேண்டுமென்ற அந்தக் கொள்கையை நிறைவேற்ற இன்னமும் இடையிலே வந்த மத்திய அரசுகளும் சரி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசும் சரி - முன்வரவில்லை என்பதுதான் நம்முடைய ஆதங்கம்.

அந்தக் காரணத்தினால்தான் இங்கே மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு என்ற தீர்மானங்களோடு மிக முக்கியமான - மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தமைந்த - மாநில சுயாட்சி என்கின்ற பெயரில் இல்லாவிட்டாலும் அந்தக் கருத்து அமைந்த தீர்மானத்தை இங்கே நிறைவேற்றியிருக்கிறோம்.

**மாநில சுயாட்சித் தத்துவம் பற்றி அண்ணா விளக்கம்**

மாநிலங்கள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன? என்பதைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன் -

"நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்கமுடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான்.

மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது, அரசியலுக்கு நல்லது, காரியத்திற்கும் உகந்தது.

ஆனால், மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும், மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக்கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது.

நாட்டுப் பாதுகாப்பு தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தையும்பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

மக்களின் சுகதுக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசு தானே தவிர - மத்திய அரசு அல்ல. ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறப்பித்துள்ளது".

- என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அந்த அடிப்படையிலேதான் நடைபோடுகின்றோம். அதற்கேற்ற வகையில்தான் இங்கே இந்த மாநாட்டில் ஒரு அருமையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

*- மதுரையில் 29.8.1998 அன்று நடைபெற்ற மத நல்லிணக்க மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*


# தமிழரசு

படிக்க... பயன்பெற... பாதுகாக்க...

சந்தா விவரம்

"தமிழரசு" தமிழ்

(மாதம் இருமுறை)

ஆண்டுச் சந்தா.... ரூ.72

"தமிழரசு" ஆங்கிலம்

(மாதம் ஒருமுறை)

ஆண்டுச் சந்தா.... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம்

*அனுப்ப வேண்டிய முகவரி :*

துணை இயக்குநர் (வெ)
"தமிழரசு" அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.




*ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.*
*தொலைபேசி : 568926,568927,564906*



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




தமிழரசு

